பண்டைத் தமிழ் எழுத்துக்கள்

தி.நா.சுப்பிரமணியன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி அஞ்சல்
சென்னை - 600 113.

பண்டைத் தமிழ் எழுத்துக்கள்

தி.நா.சுப்பிரமணியன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி அஞ்சல்
சென்னை - 600 113.

BIBLIOGRAPHICAL DATA

Title	:	Paṇṭait Tamiḷ Eḷuttukkaḷ
Author	:	T.N. Subramanian
Publisher& Copyright	:	International Institute of Ṭamil Studies C.I.T. Campus, Taramani, Chennai-600 113.
Publication No.	:	249
Language	:	Tamil
Date of Publication	:	1996
Edition	:	Reprint
Paper used	:	16 Kg Creamwove (TNPL)
Size of the book	:	Demy 1/8
Printing types	:	11 Points
Price	:	32/=
No. of copies	:	1000
No. of Pages	:	145
Typesetted by	:	Vassantha Printers Adyar, Chennai-600 020 Phone : 4913971
Printed by	:	Pavai Printers (P) Ltd., Chennai-14 Ph: 8532441, 8532973
Subject	:	A study on the ancient Tamil scripts

அரிய நூல்களை வெளியிடத் தமிழ் வளர்ச்சி இயக்ககம் வழங்கிய நிதியுதவியைப் பெற்று இந்நூல் வெளிவருகிறது.

தமிழ்

இலக்கியச் செல்வங்களாகிய புதையல்களைக்

கண்டெடுத்துச் செப்பனிட்டுத்

தமிழ்த் தாயின் திருமேனிக்கு ஆபரணங்களாக்கி

அணிவித்து உவப்பதையே

தனித்தலைமைப் பெருங்கடமையாகக் கொண்டு

வாழ்ந்துவரும்

தமிழாசிரியப் பெருமானாகிய

பிரும்மஸ்ரீ

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர்

உ.வே. சாமிநாதையரவர்களுக்கு

அளவற்ற பக்தியோடு

இதன் ஆசிரியரால்

ஸமர்ப்பணம் செய்யப்பெற்றது.

உள்ளுறை

	அணிந்துரை	v
	நூன்முகம்	vii
	ஆசிரியர் முகவுரை	ix
1.	முன்னுரை	1
2.	தமிழ்நாட்டுச் சரித்திரம்	8
3.	தமிழ்நாட்டுப் பழைய கல்வெட்டுக்கள்	19
4.	பிராமியும் பழைய கிரந்தமும்	29
5.	கிரந்த எழுத்துக்கள்	41
6.	தமிழ் எழுத்துக்கள்	53
7.	வட்டெழுத்து	73
8.	கலப்பு எழுத்துக்கள்	90
9.	எண்கள்	94
10.	எழுத்து வித்தையின் வரலாறு	103
11.	பிராமியின் பழமையும் உற்பத்தியும்	115
12.	பின்னுரை	128
	உதவியாக இருந்த நூல்கள் முதலியன	130
	எடுத்தாளப்பட்ட சாஸனங்கள்	131
	பொருட் குறிப்பு அகராதி	132

படங்கள்

1.	தமிழ்நாட்டுப் பிராமி	26
2.	பிராமியும் பழைய கிரந்தமும்	33-5
3.	கிரந்த எழுத்துக்கள்	57-62
4.	தமிழ் எழுத்துக்கள்	67-70
5.	வட்டெழுத்து	77-80
6.	கலப்பெழுத்துக்கள்	92
7.	எண்கள்	98

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

அணிந்துரை

வரலாறு, கல்வெட்டு, செப்பேடு முதலிய துறைகளில் தி.ந. சுப்பிரமணியம் அவர்கள் ஆர்வம் கொண்டவர். அவற்றில் அயராது உழைத்து அரும்பெரும் பணியாற்றியவர். ***'கோயில் சாசனங்கள்'*** எனும் தலைப்பில் இவர் எழுதிய மூன்று தொகுப்புகள் இவரது அறிவு வண்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

இராமானுசர் காலத்தைப் பற்றிய ஆய்வு, பல்லவர்கள் செப்பேடுகள் 30, **'Pallavas of Kanchi : In Souh East Asia'** முதலிய நூல்களும் அவருடைய வரலாற்று நுண் அறிவை விளக்குவதாக அமைந்துள்ளன.

தென்கிழக்கு ஆசியாவில் தமிழ்ப்பண்பாடு பரவிய நிலையினையும் இவர் ஆழமாக ஆய்வு செய்துள்ளார். இவருடைய ஆய்வு முடிவுகள் வரலாற்று ஆய்வாளர்கள் பலருக்கும் புதிய விளக்கங்களைத் தந்து சிந்திக்கத் தூண்டுவனவாகவும் அமைந்துள்ளன.

கல்வெட்டுக் குறித்து ஆய்வு செய்வதையே தமது வாழ்நாள் பணியாகக் கொண்டவர் இவர். மேலும் வரலாற்று ஆய்வோடு வரலாற்று நாவல்களையும் டி.எஸ். சொக்கலிங்கம் ஆசிரியராக இருந்த ***'தினசரி'*** என்ற இதழில் இவர் எழுதியுள்ளார். இவர் நாட்டுப்புறப் பாடல்களிலும், ஈடுபாடு கொண்டவர். 'காட்டு மல்லிகை' என்ற தொகுப்பு அதற்கு எடுத்துக்காட்டு, 'பெண் வேஷம்' என்ற பெயரில் சீன மொழியில் இருந்த நாவலை, மொழி பெயர்த்தமை இவரது மொழிபெயர்ப்புப் புலமைக்குச் சான்று. இவ்வாறு ஆய்வுத்துறையிலும், படைப்பிலக்கியத் துறையிலும் ஈடுபாடு கொண்டவராக இவர் விளங்கினார்.

இவரின் விருப்பு வெறுப்பற்ற நடுநிலை ஆய்வு திறனாய்வாளர்களால் சிறப்பாகப் போற்றப்படுகிறது.

எனவேதான் தி.ந. சுப்பிரமணியம்,அவர்களைக் 'கர்மயோகி' என்று பேராசிரியர் கைலாசபதி குறிப்பிடுகின்றார். இப்பேரறிஞரின் நூலே ***'பண்டைத் தமிழ் எழுத்துக்கள்'*** எனும் இந்நூலாகும்.

தொடக்க காலத்தில் தென்னிந்திய எழுத்துக்கள் குறித்து ஏ.ஸி.பர்னல் என்பவரும், து.அ. கோபிநாதராயர் என்பவரும் ஆங்கிலத்தில் ஆய்வு நூல்கள் எழுதினர்.

'பண்டைத் தமிழ் எழுத்துக்கள்' எனும் இந்நூலில் இடம்பெற்ற கட்டுரைகள் கி.வா. ஜகந்நாதன் அவர்களை ஆசிரியராகக் கொண்ட ***'கலைமகள்'*** எனும் இதழில் வெளிவந்தவை. பின்னர் அக் கட்டுரைகள் யாவும் தொகுக்கப் பெற்று, 1938-இல் நூலாக வெளியிடப்பெற்றது.

தென்னிந்திய எழுத்துக்களைப் பற்றி ஆங்கிலத்தில் ஆய்வு நூல்கள் பல்கிப் பெருகி இருந்த அக்காலத்தில் தமிழில் தி.ந. சுப்பிரமணியம் ***'பண்டைத் தமிழ் எழுத்துக்கள்'*** பற்றி எழுத முற்பட்டது பாராட்டுக்குரியது.

'உயர் கல்வியும் ஆய்வும்' தமிழிலேயே அமைய வேண்டும் என்ற அவருடைய வெளிப்பாடாக இந்நூல் அமைகிறது. மேலும் தமிழ் எழுத்துக்களின் வரிவடிவ அமைப்புப் பற்றித் தொடக்ககாலத்தில் செய்யப்பட்ட ஆய்வு நூல் இது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

தமிழ் எழுத்துக்களைப் பற்றி அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய இந்நூலை மறுபதிப்புச் செய்வதில் நிறுவனம் மகிழ்ச்சி அடைகிறது.

இந்நூல் தமிழ் வளர்ச்சி இயக்ககம் வழங்கும் அரிய நூல்களை வெளியிடும் நிதி உதவி பெற்று வெளிவருகிறது.

இந்நூலை வெளியிட நிதி உதவி நல்கிய தமிழ் வளர்ச்சி இயக்கக இயக்குநர் அவர்களுக்கும்,

நிறுவனச் செயல்பாடுகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொண்டு உறுதுணையாக இருக்கும் தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறைச் செயலாளர் திருமிகு.வை.பழனிச்சாமி இ.ஆ.ப. அவர்களுக்கும்,

நிறுவனப் பணிகள் சிறக்க என்றும் ஆதரவு தரும் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி-பண்பாட்டுத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை நிறுவனம் தெரிவித்துக் கொள்கிறது.

இந்நூலினைச் சிறப்புற ஒளிக்கோர்வை செய்த வசந்தா அச்சகத்தாருக்கும் நல்ல முறையில் அச்சிட்டுத்தந்த பாவை அச்சகத்தார்க்கும் எங்கள் நன்றி.

இயக்குநர்

நூன்முகம்

தமிழ் எழுத்துக்களின் வரலாறு யாது? அவ்வெழுத்துக்கள் முழுவதும் தமிழரால் தமிழ்நாட்டிலேயே ஏற்படுத்தப்பெற்றனவா? அல்லது சில பகுதிகளோ அல்லது முற்றிலுமோ அயல் தேசங்களினின்றும் பெறப் பட்டனவா? அவ்வெழுத்துக்களின் வடிவம் எக்காலத்திலும் இப்போதிருப்பது போல் இருந்ததா? அல்லது காலக்கிரமத்தில் பலபடியாக மாறுபட்டு, அதன்பிறகு இப்போதுள்ள நிலையை அடைந்ததா? தமிழ் எழுத்துக்களுக்கும் கிரந்தம், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய எழுத்துக்களுக்கும் என்ன சம்பந்தம்? இக்கேள்விகள் நம்மவர்க்கு அடிக்கடி தோன்றக்கூடும். இவ்வாறே, பிறபாஷைகளை வழங்குவோர்க்கும் அவரவர் பாஷையைக் குறித்து இத்தகைய கேள்விகள் முக்கியமாகத் தோன்றுதல் இயல்பே.

இந்தியாவின் பல பாகங்களில் பல நூற்றாண்டுகளாக வழங்கிவந்த எழுத்துக்களின் உருவச்சரித்திரத்தை ***பீலர்*** என்னும் ஒரு பெரிய ஐரோப்பிய வித்துவான் சுமார் நாற்பது வருஷங்களுக்கு முன் (1896)ஓர் அரிய நூலில் வெளியிட்டார். அதற்குச் சில வருஷங்களுக்கு முன் (1874), தென் இந்தியாவில் வழங்கிவந்த எழுத்துக்களைக் குறித்து அதேமாதிரி ஒரு நூலை ***பர்ணல்*** என்னும் மற்றொரு ஐரோப்பிய வித்துவான் இயற்றினார். அதற்கு நெடுநாளைக்குப் பிறகு, காலஞ்சென்ற ***து.அ. கோபிநாத ராவ்*** அவர்கள் அதே விஷயத்தைக் குறித்து ஒரு வியாசம் எழுதி

வெளியிட்டார்கள். இந்நூல்களின் உதவியைக் கொண்டும், சென்னைக் கல்வெட்டு இலாகா ஆபீசில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள பல சாஸனங்களின் ஆதாரத்தைக் கொண்டும், பற்பல விஷயங்களைக் குறித்து என்னுடன் அடிக்கடி கலந்து யோசித்துக் கொண்டும் ஸ்ரீமான் **தி. நா. சுப்பிரமணியன்** அவர்கள் பின்வரும் வியாசத்தைத் தமிழ்மட்டும் அறிந்தவர்களது நன்மையின் பொருட்டு நெடுநாளாக ஊக்கத்துடன் வேலைசெய்து எழுதி முடித்திருக்கிறார்கள். இது படிப்பவர்கள் யாவருக்கும் அரிய புதிய விஷயங்களை எளிதின் விளங்க வைக்கும் என்பதில் ஐயமில்லை.

இம்மாதிரி ஆராய்ச்சி விஷயங்களைக் குறித்த நூல்கள் தமிழில் விரிவாக எழுதப்படவேண்டியது அவசியம். இம்முயற்சியை மேற்கொண்டு இந்நூலைச் செவ்வனே எழுதி முடித்திருக்கிறவருடைய ஆராய்ச்சித்திறம் மிகப் பாராட்டற்பாலது.

க.அ. நீலகண்ட சாஸ்திரி

ஆசிரியர் முகவுரை

இருபது ஆண்டுகளுக்கு முன்பு சாஸன ஆராய்ச்சியில் நான் இறங்கிய காலத்தில், சாஸனங்களில் வழங்கும் எழுத்துக்களைச் சுலபமாகக் கற்றுக்கொள்ளக்கூடிய நூலும், அதைச் சொல்லிக் கொடுப்பாரும் இல்லாமல் வருந்தினேன். அதற்கு முன்பு ஆங்கிலத்தில் எழுதி வெளியிடப் பட்டிருந்த ஒன்றிரண்டு நூல்களும் எளிதிற் கிடைக்கவில்லை. அன்றி, அவை, தமிழ் நாட்டிலே வழங்கிவந்த எழுத்துக்களைப்பற்றி அதிகமாகக் கூறாலும், நவீன ஆராய்ச்சியாற் பெறப்பட்ட முடிவுகளைத் தெரிவியாமலும் இருந்தன. ஆதலின் அவை இருந்தும் சாதாரணமாக உபயோகப்பட்டனவல்ல. இப்பொழுதும் அந்த நிலைமையில் பெரிய மாறுதல் ஏற்பட்டிலது.

இந்தக் குறையை நிவர்த்திப்பதற்காகச் சில நண்பர்களுடைய தூண்டுதலால், 1930-ஆம் வருஷத்தில் இந்த நூலை எழுதத் தொடங்கினேன். இரண்டு வருஷங்களுக்கு மேலாக ஆராய்ந்து ஆதாரங்களைச் சேர்த்துச் சில பாகங்களை எழுதி முடித்த பிறகு பல காரணங்களால் இம் முயற்சி கைவிடப்பட்டது. இதனை அறிந்த சென்னை யுனிவர்ஸிடியின் இந்துதேச சரித்திரப் பேராசிரியர் ***ஸ்ரீமான், க.அ. நீலகண்ட சாஸ்திரி*** அவர்கள், மேற்கொண்டு ஆராய்ந்து இந்நூலைப் பூர்த்தி செய்யுமாறு தெரிவித்தார்கள். இதனை எழுதுவதற்கு நான் தகுதியுள்ளவனா என்ற என் அச்சத்தை அறிந்து, இதை எழுதி முடிப்பதை அவர்கள் மேற்பார்வையிடுவதாகவும் உறுதி கூறினார்கள். இவ்விதமாக அவர்கள் எனக்குப் பல சமயங்களில் யோசனை கூறியும், என்னுடைய வேலையைக் கண்காணித்து உதவி செய்ததாலேதான் இந்தப் புத்தகம் முடிவு பெற்றது . அவர்களுக்கு உள்ள பல அரிய வேலைகளுக்கு இடையே இதனையும் ஏற்றுக்கொண்டிராவிட்டால், இது வெளிவந்திராது என்றே கூறவேண்டும். அவர்கள் ஊட்டிய ஜீவனோடு இப்புத்தகம் வெளிவருதலால் அவர்களை இந்நூலுக்குத் தாயென்றும் அவர்களுக்கு என்பாலுள்ள அன்பு தாயன்பு போன்றதென்றுமே என் உள்ளம் கருதுகின்றது.

தி. நா. சுப்பிரமணியன்

இதை எழுதுவதற்கு, இதுகாறும் வெளியிடப்படாத பல கல்வெட்டுக் களை ஆராய நேர்ந்தது. சென்னைச் சாஸன இலாகாவில் சேகரித்து வைத்துள்ள அச்சாஸனங்களின் படங்களைப் பார்த்துக் குறிப்புகள் எடுத்துக்கொள்ள அந்த இலாகாவின் ஸூப்பரிண்டெண்டு அவர்கள் உத்தரவை ஸ்ரீமான் அந்த ஆபீஸில் உள்ள சாஸன பரிசோதகர்களான உத்தியோகஸ்தர்கள் பலரும் என்னுடன் அடிக்கடி விவாதித்து யோசனை கூறியிருக்கிறார்கள்.

சென்னை யுனிவர்ஸிடித் தமிழ்ப் பேராசிரியரான ***ஸ்ரீமான் எஸ். வையாபுரிப்பிள்ளை*** அவர்களின் 'தமிழ் லெக்ஸிகன்' ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ***ஸ்ரீமான். மு. இராகவையங்கார்*** அவர்களும், இந்த நூலைக் கையெழுத்துப் பிரதியிலும், அச்சுப் 'புரூப்'பிலும் பார்த்துப் பல உதவிகள் செய்தார்கள். இன்னும் பலரும் பல சமயங்களில் உதவி செய்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தகுதி மிகச் சிறியதாயினும் என்பாலுள்ள அருளால் இச்சிறு முயற்சியை அங்கீகரித்து என்னுடைய அர்ப்பணத்தை ஏற்று உவந்த ***பிரம்மஸ்ரீ காமகோபாத்தியாய தக்ஷிணாத்ய கலாநிதி, டாக்டர் உ.வே. சாமிநாதையர்*** அவர்களுக்கு நன்றி செலுத்துதற்குரிய சொற்களை நான் எங்கே தேடுவது? சொல் கிடையாவிடினும் என் உள்ளம் அந் நன்றியுணர்ச்சியில் மிதக்கின்றதென்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

பொருட்செலவைப் பாராமல் இந்த அரிய முதலில் ***கலைமகள்*** பத்திரிகையில் வெளியிட்டு உதவிய அதன் ஆசிரியரும் சென்னை லா ஜர்னல் அச்சுக்கூடத்தின் சொந்தக்காரரும் ஆகிய ***ம-ா-ா-ஸ்ரீ ரா. நாராயணஸ்வாமி ஐயர்*** அவர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆசிரியர்களுக்குள் மாறுபட்ட அபிப்பிராயங்கள் உள்ள விஷயங்களைப் பற்றி நான் இந்நூலில் அதிகமாக விவாதிக்கவில்லை. அவற்றை இதன் ஆங்கிலப் பதிப்பில் நன்கு ஆராய்ந்துள்ளேன். ஆங்கிலப் பதிப்பு விரைவில் வெளிவரும்.

அன்றி, சாஸன ஆராய்ச்சிக்கு இன்றியமையாத பிறவிஷயங்கள் ஒரு தனி நூலாக அமைந்தமையால், அவற்றை இங்கு நான் கூறவில்லை. அவ்விஷயங்களைப்பற்றிய ஒரு நூலும் கூடிய சீக்கிரம் வெளிவரும்.

பலர் உதவிபெற்றதும், ஆசிரியர் நீலகண்ட சாஸ்திரிகள் மேற்பார்வையிட்டு வந்ததுமான இந்நூலுள் தவறு ஏதேனும் காணப்பட்டால் அதற்கு நானே பொறுப்பாளியாவேன். அவ்விதம் காணப்படும் தவறுகளை எடுத்துக்காட்டினால் மறுபதிப்பில் அவற்றைத் திருத்திக்கொள்ள முடியும்.

இந்நூல் சிலருக்கேனும் உபயோகமுள்ளதாக இருக்குமாயின் இதனை எழுதிய நோக்கம் நிறைவேறியதாகும்.

தி.நா. சுப்பிரமணியன்

1

முன்னுரை

நமது இந்திய நாட்டிலே இன்றைக்குப் பல்வேறு மொழிகள் வழங்கிவருகின்றன. ஒவ்வொரு மொழிக்கும் தனித் தனியாக எழுத்துக்களும் இருக்கின்றன. இவ்வெழுத்துக்கள் யாவும் இப்பொழுது உள்ள வடிவு அமைப்பைச் சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்புதான் அடைந்தன.

இப்பொழுது தென்னாட்டில் வழங்கிவரும் பாஷைகளான தமிழ், கிரந்தம், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய ஐந்தின் லிபியைச் சேர்ந்த எழுத்துக்களை இத்துடன் சேர்த்துள்ள அட்டவணையிற் காணலாம்.

ரோமன்	தமிழ்	கிரந்தம்	மலையாளம்	தெலுங்கு	கன்னடம்
a	அ	𑌅	അ	అ	ಅ
ā	ஆ	𑌆	ആ	ఆ	ಆ
i	இ	𑌇	ഇ	ఇ	ಇ
ī	ஈ	𑌈	ഈ	ఈ	ಈ
u	உ	𑌉	ഉ	ఉ	ಉ
ū	ஊ	𑌊	ഊ	ఊ	ಊ
ṛ	...	𑌋	ഋ	ఋ	ಋ
ṝ	...	𑍠	ൠ	ౠ	ೠ
ḷ	...	𑌌	ഌ	ఌ	ಌ
ḹ	...	𑍡	ൡ	ౡ	ೡ
e	எ	...	എ	ఎ	ಎ
ē	ஏ	𑌏	ഏ	ఏ	ಏ
ai	ஐ	𑌐	ഐ	ఐ	ಐ
o	ஒ	....	ഒ	ఒ	ಒ
ō	ஓ	𑌓	....	ఓ	ಓ
au	ஔ	𑌔	ഔ	ఔ	ಔ
k	ஃ	...	....	...	....
ḥ	....		ഃ	ః	ಃ

ரோமன்	தமிழ்	கிரந்தம்	மலையாளம்	தெலுங்கு	கன்னடம்
k	க	𑌕	ക	క	ಕ
kh	...	𑌖	ഖ	ఖ	ಖ
g	...	𑌗	ഗ	గ	ಗ
gh	...	𑌘	ഘ	ఘ	ಘ
ṅ	ங	𑌙	ങ	ఙ	ಙ
c	ச	𑌚	ച	చ	ಚ
ch	...	𑌛	ഛ	ఛ	ಛ
j	....	𑌜	ജ	జ	ಜ
jh	....	𑌝	ഝ	ఝ	ಝ
ñ	ஞ	𑌞	ഞ	ఞ	ಞ
ṭ	ட	𑌟	ട	ట	ಟ
ṭh	....	𑌠	ഠ	ఠ	ಠ
ḍ	....	𑌡	ഡ	డ	ಡ
ḍh	....	𑌢	ഢ	ఢ	ಢ
ṇ	ண	𑌣	ണ	ణ	ಣ
t	த	𑌤	ത	త	ತ
th	...	𑌥	ഥ	థ	ಥ
d	....	𑌦	ദ	ద	ದ
dh	....	𑌧	ധ	ధ	ಧ
n	ந	𑌨	ന	న	ನ
p	ப	𑌪	പ	ప	ಪ
ph	....	𑌫	ഫ	ఫ	ಫ
b	....	𑌬	ബ	బ	ಬ
bh	....	𑌭	ഭ	భ	ಭ
m	ம	𑌮	മ	మ	ಮ
y	ய	𑌯	യ	య	ಯ
r	ர	𑌰	ര	ర	ರ
l	ல	𑌲	ല	ల	ಲ
v	வ	𑌵	വ	వ	ವ
ś	....	𑌶	ശ	శ	ಶ

ரோமன்	தமிழ்	கிரந்தம்	மலையாளம்	தெலுங்கு	கன்னடம்
ṣ	....	ஷ	ഷ	ష	ಷ
s	...	ஸ	സ	స	ಸ
h	...	ஹ	ഹ	హ	ಹ
ḷ	ள	𑌳	ള	ళ	ಳ
ḻ	ழ	...	ഴ	...	....
ṟ	ற	....	റ	ఱ	ಱ
ṉ	ன	....	....	...	....

கிரந்தம், தமிழ் ஆகிய இருவகை லிபிகளுள், உ, ஊ, க, ண, த, ந, ய, வ, என்னும் எழுத்துக்கள் ஒரேவிதமாக எழுதப்படுவன. அ, ஆ, ஈ, ஒ, ஔ, ட, ர, ல, ள, என்னும் எழுத்துக்களுள் காணப்படும் வேறுபாடு மிகவும் சொல்பமானது. அன்றிப் பொதுவாக நோக்குமிடத்தும், கிரந்தம், தமிழ் ஆகிய இரண்டு லிபிகளும் ஒன்றாகவே காணப்படும்.

இனி, கிரந்த லிபிக்கும் மலையாள லிபிக்கும் அதிக வித்தியாசம் கிடையாது. கிரந்த லிபியில் காணப்படும் நேர்கோடுகளும், கோணங்களும், மலையாள லிபியில் வளைவுகளாக ஆகிவிட்டன.

தெலுங்கும் கன்னடமும் ஒரேவகை எழுத்துக்களை உடையன. அவ்விருவகை லிபிகளுக்கும் உள்ள வித்தியாசம் எழுத்துக்களிற் காணப்படும் தலைக்கட்டே; அதாவது எழுத்துக்களின் தலையில், நாகர எழுத்துக்களுக்குள்ள கோடுகளைப் போல எழுதப்படும் கோடேயாகும். தலைக்கட்டு, கன்னடத்தில், வலதுபக்கத்தில் மேல்புறமாக ஒரு சிறிய கொக்கியையுடைய படுத்தகோடாகக் காணப்படும். தெலுங்கில் அது மேல்புறம் வாய்திறந்து அடிப்புறம் கோணத்தைப் பெற்று ஒன்று சேர்ந்துள்ள இருகோடுகளால் ஆனது. இந்தத் தலைக்கட்டை எடுத்துவிட்டால், மலையாள கிரந்த எழுத்துக்களுக்கும், தெலுங்கு கன்னட எழுத்துக்களுக்கும் அதிக ஒற்றுமை காணப்படும்.

இ, ஒ, ய, ர, ல, வ, என்னும் எழுத்துக்களின் உருவங்களை நன்கு கவனித்தால், தென்னிந்தியாவில் கையாளப்படும் ஐந்து வகை லிபிகளிலும் அவை சற்றேறக்குறைய ஒரேவிதமான வடிவத்தைப்பெற்றுள்ளனவென்பது புலப்படும். ஐ யின் வடிவமானது தெலுங்கிலும் கன்னடத்திலுங்கூடத் தமிழ் வடிவத்தையே பெரிதும் ஒத்திருக்கின்றது. இவ்வகையாக ஆராய்ந்து பார்த்தால் இவ்வைந்து வகை எழுத்துக்களுக்கும் உள்ள நெருங்கிய சம்பந்தம் தெரியவரும்.

இனி, அகரத்துக்குத் தமிழ் லிபியில் உள்ள வடிவத்துக்கும் நாகர லிபியில் உள்ள अ என்னும் வடிவத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. நாகரத்தில் உள்ள தலைக்கட்டை நீக்கிவிட்டால் இது எளிதில் தெரியவரும்.

இவ்விடத்தில் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது ஒன்று உண்டு. ஓர்எழுத்துக்கும் மற்றோர் எழுத்துக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கவனிக்கும் பொருட்டுஎழுத்துக்களைத் துண்டு துண்டாக வெட்டிச் சித்திரவதை செய்யக்கூடாது. அங்ஙனம் செய்தால், எந்த எழுத்தினின்றும் வேறு எந்த எழுத்தையும் பிறப்பிக்கலாம். சமீபத்தில் வேடிக்கையாகச் சில ஆசிரியர்கள் நாகர எழுத்துக்களைஆங்கில எழுத்துக்களினின்றும், அவ்வாங்கில எழுத்துக்களைச்சிலுவைக் குறியினின்றும் சிருஷ்டித்துக் காண்பித்தார்கள். இப்படிச் செய்வது பக்ஷபாதமற்ற சாஸ்திர ஆராய்ச்சிக்குப் பயன்படாது.

தென்னாட்டிலுள்ள லிபிகளைச் சேர்ந்த எழுத்துக்களுக்கு இப்பொழுது உள்ள வரிவடிவங்களைப் பார்த்தாலே அவற்றின் ஒற்றுமை தெரியும். பழைய சாஸனங்களிலுள்ள வடிவங்களை ஆராய்ந்தால் இஃது இன்னும் அதிகமாகக் காணப்படும். ஆதலின் இவைகளுள் ஒன்று மற்றொன்றி னின்றும் பிறந்து, சிறிதளவே வேறுபட்டு வளர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்; அல்லது, இவை யாவும் மூலாதாரமான வேறொரு வகை எழுத்தினின்றும் தோன்றி வெவ்வேறான வகைகளில் வளர்ச்சி யடைந்திருத்தல் வேண்டும் என்பது பெறப்படும். உண்மையில், இந்தியா வெங்கும் ஆதியில் உபயோகப்பட்டுவந்த ஒருவகை லிபியைச் சேர்ந்த எழுத்துக்களே பல இடங்களில் பல்வேறு காலங்களில் பலவிதமாக வளர்ச்சியடைந்து இப்பொழுது உள்ளனபோலப் பலவகை லிபிகளின் எழுத்துக்களாக ஆயின.

மிகப் பழங்காலத்தனவாக இந்தியாவிற் கிடைக்கும் கல்வெட்டுக்களில் இரண்டு விதமான லிபிகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று ப்ராமி (*Brahmi*) எனவும், மற்றொன்று கரோஷ்டி (*Kharosthi*) எனவும் வழங்குகின்றன. பிராமி என்பது நாம் எழுதுவதுபோல இடது புறத்திலிருந்து வலதுபுறமாக எழுதப்பட்டுள்ளது. ஆயினும் வலது புறமிருந்து இடதுபுறமாக எழுதப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் சிலவும், ஒரு வரி இடது புறமிருந்து வலதுபுறமாகவும், மற்றொரு வரி வலது

புறத்திலிருந்து இடதுபுறமாகவும் எழுதப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் ஒன்றிரண்டும் பழங்காலத்தனவாகக் கிடைத்துள்ளன. கரோஷ்டியோ அராபிய, பாரசீக எழுத்துக்களைப் போல வலதுபுறத்திலிருந்து இடது புறமாக எழுதப்பட்டுள்ளது. பிராமி, கரோஷ்டி இவ்விரண்டு லிபிகளுக்கும் எழுதும் முறையில் மட்டுமன்றி வரி வடிவம் முதலிய வேறு வகைகளிலும் வித்தியாசங்கள் உண்டு. கரோஷ்டி லிபியின் எழுத்துக்களையுடைய கல்வெட்டுக்கள் இந்தியாவின் வடமேற்குப் பாகத்திலேதான் காணப்படுகின்றன. அப்படிப்பட்ட சாஸனங்களும் கி.பி. நான்காம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்தனவாகவே உள்ளன அக்காலத்துக்குப் பிறகு அவ்வகை எழுத்து இந்தியாவில் இறந்து ஒழிந்தது.

பிராமியோ இந்தியா முழுவதும், கரோஷ்டி லிபி கையாளப்பட்டு வந்த நாடுகளையும் உள்ளிட்டு வழங்கிவந்துள்ளது. கி.பி. நான்காம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்தனவாக இந்தியாவின் வடமேற்குப் பாகத்தில் உள்ள சாஸனங்களிற் சில பிராமி லிபியிலும், சில கரோஷ்டி லிபியிலுமாகக் காணப்படுகின்றன. ***இந்தப் பிராமி லிபிதான் இந்திய லிபிகள் யாவற்றுக்கும் மூலாதாரமாகும்.***

எழுத்துக்களின் வரி வடிவத்தில் வேறுபாடுகள் ஏற்பட்டு அவை வளர்ச்சி யடைந்ததற்கு மூன்று முக்கிய காரணங்கள் கூறலாம். அவை, எழுதப்பட்டுள்ள சாமான், எழுதுபவர்களின் கைலாகவம், சித்திர உணர்ச்சி ஆகியவைகளாகும்.

முற்காலத்தில் சாஸனங்கள் கல்லிலும் செம்பிலும் பொறிக்கப் பட்டுவந்தன. இவற்றைத் தவிர்த்து எழுதுவதற்குப் பனை ஓலையும் அதிகமாக உபயோகப்பட்டு வந்தது. ஓலையில் எழுதும் போது நேர் கோடுகளை எழுதுவது சிரமம். எழுதும்போதே அவை சிறிதளவாவது வளைவுகளைப் பெற்றுவிடும். கல்லில் எழுத்துக்களைப் பொறிக்கும்போது வட்டங்களையும் வளைந்த கோடுகளையும் சரியாக எழுதுவது மிகவும் சிரமம். வளைந்த கோடுகள் நேர் கோடுகளாகவும் வட்டங்கள் சதுரங்களாகவும் மாறுவது இயற்கை. 'ட' என்று இப்பொழுது எழுதப்படும் எழுத்துப் பிராமியில் 1-ல் உள்ளதைப் போல் வளைவாக எழுதப்பட்டது. பிற்காலத்தில் 2-ல் உள்ளதைப்போல் இருகோடுகளாக மாறிவிட்டது.



1 2

ஓலையில் எழுதுபவர்கள் இடதுபுறத்தில எழுத்தாணியை ஊன்றினால், அந்த வரி முழுமையும் எழுதி வலது ஓரத்தை அடைந்தபிறகுதான் ஏட்டை விட்டு ஆணியை எடுப்பார்கள். எழுத்துக்கு எழுத்து ஆணியை எடுத்தெடுத்துத் தனித்தனியாக எழுத்துக்களை எழுதமாட்டார்கள். ஓலையை விட்டு ஆணியை எடுக்காமலே எழுதிக்கொண்டு போவதால், அதிகப்படியான பல கோடுகள் விழுந்து, காலக் கிரமத்தில் அக்கோடுகளும் எழுத்துக்களின் பாகங்களாக மாறிவிடுகின்றன. உதாரணமாக, ககரத்துக்கு 3-ல் உள்ளதைப்போல் பிராமி வடிவம். ஓலையில் எழுதுபவர்கள் அதை 4-ல் உள்ளதைப்போல் மாற்றிவிடுவார்கள். 'டக' என்று இரண்டு எழுத்துக்களைச் சேர்ந்தாற் போல எழுதவேண்டியபொழுது அவை 5-ல் உள்ளதைப் போன்ற வடிவத்தைப் பெறும். இவ்விதம் படிப்படியாக மாறின பிறகே க என்னும் எழுத்தானது இப்பொழுது உள்ள உருவத்தை யடைந்திருக்கிறது.

3 4 5

இ என்னும் எழுத்துப் பிராமியில் 6-ல் உள்ளதைப்போல எழுதப்பட்டு வந்தது. ஆனால் அதை அவசரமாக எழுதும்பொழுது இகரக் குறி ஒரு அரைவட்டமாக 7-ல் உள்ளதைப்போல் மாறிக் காணப்படுகிறது. காலக் கிரமத்தில் உயிர்மெய்யெழுத்துக்களின் உயிர்க் குறிகள் தனியாகப் பிரிக்கப்பட்ட காலத்தில் இவ்வெழுத்து 8-ல் உள்ளதைப் போல மாறியது. பிற்காலத்தில் உயிர்க்குறி இடதுபுறம் ஒட்டப்பட்டு 9-ல் உள்ளதைப் போல் இ என்னும் இக்கால வடிவத்தைப் பெற்றது.



6 7 8 9

இங்ஙனமாக எழுதுபவர்களின் கை லாகவத்தால் எழுத்துக்கள் அடைந்துள்ள வேறுபாடுகள் பல.

எழுத்துக்களைக் கல்லிலும் செம்பிலும் வெட்டுபவர்கள் அவை கண்ணுக்கு அழகாகக் காணப்படவேண்டும் என்னும் எண்ணத்துடன் பல சமயங்களில் எழுத்துக்களின் வடிவங்களைச் சிறிது மாற்றிச் சித்திரித்துப் பொறித்துள்ளார்கள். அப்படிச் சித்திரித்து எழுதப்பட்டுள்ள எழுத்துக் களையுடைய சாஸனங்களும் கல்லில்தான் அதிகமாகக் காணப்படுகின்றன. காஞ்சீபுரம் கைலாஸநாதர் கோயிலில் ஒரு சாஸனம் இருக்கிறது. மேற்பார்வைக்கு அது அழகிய பூக்கள் சித்திரிக்கப்பட்டது போலக்

காணப்படுமே யொழிய, எழுத்துக்களைக் கொண்டதாகக் காணப்படாது. ஆனால் ஊன்றிப்பார்த்தால், அதனுள் உள்ள பூக்களில் அக்ஷரங்கள் அடங்கியிருப்பது தெரியவரும். இங்ஙனம் எழுத்துக்களை அழகாக அமைப்பதில் நேர்கோடுகள் வளைவுகளாகவும், வளைவுகள் நேர் கோடுகளாகவும் மாறிவிடும். உதாரணமாக, 'வ' என்று இப்பொழுது எழுதப்படும் கிரந்த எழுத்துப் பிராமியில் 10-ல் உள்ளதைப்போல் எழுதப்படும். அது சித்திர எழுத்தாக எழுதப்படும் போது 11-ல் உள்ளதைப் போல் படிப்படியாக மாறிவிடுகின்றது.

10

11

அநேகமாகத் தென்னாட்டு எழுத்துக்கள் யாவும் இடதுபுறமிருந்து வலதுபுறம் செல்லும் ஒரே கோட்டால் ஆனவை. ஒரே கோட்டால் எழுதப்படும் எழுத்துக்களைப் பிரதக்ஷிணம், அப்பிரதக்ஷிணம் என்ற இருவிதமாகவும் எழுதலாம். அப்பிரதக்ஷிணமாக எழுதினால் எழுத்துக்களின் நேர்கோடுகளும் கோணங்களும் அதிகமாக அமையா. அப்பொழுது கைவழி வட்டமாகவே செல்லும். வட்டெழுத்து, தெலுங்கு, கன்னடம், ஆகிய வகை எழுத்துக்கள் பெரும்பாலும் அப்பிரதக்ஷிண மாகவே செல்லுவதால், அவை அதிகமாகச் சுழிகளையும் வட்டங்களையும் பெற்றுள்ளன. பண்டைக் காலத்தில் தமிழ் மக்கள் அப்பிரதக்ஷிண மாகத்தான் எழுதிவந்தார்கள் போலும்.

கிரந்தமும் தமிழும் பொதுவாகப் பிரதக்ஷிணமாகவே எழுதப்படு கின்றன. அதனால்தான் அவையிரண்டும் தெலுங்கு கன்னட எழுத்துக் களைப் போல அவ்வளவு வட்டமாக இல்லை.

எழுத்துக்களின் வரிவடிவ வளர்ச்சிக்கு மற்றொரு காரணமும் உண்டு. அது பிறதேச மக்களுடன் ஏற்படும் கூட்டுறவாகும். உதாரணமாக ஐரோப்பியர்களுடைய கூட்டுறவால், நம் நாட்டு எண்கள் அராபிய எழுத்து என்று வழங்கப்படும் வடிவங்களில் எழுதப்பட்டுவருகின்றன. அவைதான் இப்பொழுது அதிகமாக வழங்கிவருகின்றன.

அச்சுவித்தையை நம்முடைய நாட்டுக்குக் கொணர்ந்து நம் நாட்டு நூல்களை அச்சிடத் தொடங்கியவர்களும் ஐரோப்பியர்களே. அச்சுவித்தையே எழுத்துக்களின் வரி வடிவத்தை ஸ்திரமாக்கியது. இனி அவை மாறுவதற்கு அதிக மார்க்கமில்லை.

2
தமிழ்நாட்டுச் சரித்திரம்

எழுத்துக்களின் வரிவடிவம் மாறுதல் அடைந்து வளர்ச்சி பெற்றதற்கும், இலக்கியம் முதலிய கலைகளின் வளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இலக்கியம் முதலிய கலை வளர்ச்சிக்கு நாட்டின் அமைதியும், அரசர்கள் அளித்த ஆதரவும் தூண்டுகோல்காளாக இருந்தன. அவற்றோடு, பிறநாட்டினருடன் ஏற்பட்ட கூட்டுறவால், கலைகளுக்குப் புத்துயிரும், மறு மலர்ச்சியும் உண்டாயின. உதாரணமாக மலைச்சரிவுகளில் குடைந்து ஒரே கல்லால் அமைக்கப்பட்ட கோயில்களைப் பிறநாடுகளிற் கண்டு அகமகிழ்ந்த பல்லவ அரசனான மஹேந்திரவர்மன் அவற்றைப் போன்ற 'குடைவரைக் கோயில்'களைத் தமிழ் நாட்டிலும் சமைத்தான். தமிழ் நாட்டிற் கட்டப்பட்டிருந்த கோயில்களின் அழகைக் கண்டு வியந்த் சளுக்கிய அரசனான இரண்டாம் விக்ரமாதித்தன் அக்கோயில்களைக் கட்டிய சிற்பிகளைத் தன்னாட்டுக்கு அழைத்துச் சென்று பல கோயில்களைக் கட்டச் செய்தான்.

நந்திவர்ம பல்லவமல்லன் ஒரு ராஷ்டிரகூட வமிசத்துப் பெண்ணை மணந்துகொண்டான். அவன் மகன் நந்திவர்மன் கங்க வமிசத்துப் பெண் ஒருத்தியை மணம் செய்துகொண்டான். சோழ அரசர்களும் சளுக்கியர் களும் தங்களுக்குள் அடிக்கடி மணவினை புரிந்துகொண்டார்கள். இராஜராஜசோழன் தன் மகளைக் கீழைச் சளுக்கிய அரசனான விமலாதித்தனுக்குக் கலியாணம் செய்துகொடுத்தான். அவன் மகன் இராஜேந்திரன் அதைப் போலவே தன் மகளை விமலாதித்தன் மகனான

இராஜ ராஜேந்திரனுக்கு மணம் செய்து கொடுத்தான். வீரராஜேந்திர சோழன் மகளை மேலைச் சளுக்கிய அரசனான ஆறாம் விக்கிரமாதித்தன் கலியாணம் செய்துகொண்டான். பிற்காலத்தில் சோழ நாட்டை ஆண்ட சோழ சளுக்கிய மன்னர்கள் கொங்கு நாட்டை ஆண்ட ஹொய்சலர்களுடன் மணவினை செய்துகொண்டார்கள். இவ்வகையான தொடர்புகள் ஏற்பட்ட காலங்களில் தமிழர்கள் தெலுங்கு கன்னட மொழிகளில் உள்ள நயங்களைத் தெரிந்து தமிழில் அமைத்துக்கொண்டார்கள். இதேபோலப் பிறமொழியாளர்களும் தமிழில் உள்ள நயங்களைத் தங்கள் மொழிகளில் அமைத்துக்கொண்டார்கள்.

இந்திய சரித்திரத்தில் தமிழ்நாடு தனிப்பகுதியாகவே விளங்கினாலும், அது தக்காணத்துடன் உறவு பெற்றே யிருந்தது. இங்ஙனம் பலவகையாகத் தமிழ்நாட்டிலே கலைகள் வளர்ச்சியடைந்ததை ஒருவாறு நாம் உணர்வதற்குத் தமிழ்நாட்டுச் சரித்திரத்தை அறியவேண்டுவது அவசியமாகும்.

கிழக்கு மேற்குக் கடல்கள், குமரி, வேங்கடம் இவற்றின் மத்தியில் உள்ள தமிழ்நாடு பண்டைக்காலத்தில் முடியுடை வேந்தர் மூவர் எனப்படும் சேர சோழ பாண்டியர்களாலும், வேளிர் போன்ற சில குறுநில மன்னர் களாலும் ஆளப்பட்டு வந்தது. பண்டைத் தமிழ்நாட்டுச் சரித்திரத்தை நாம் ஒருவகையாகத் தெரிந்து கொள்ளக்கூடிய காலத்திலேயே ஆரியர்கள் தமிழ் நாட்டிற் குடியேறிவிட்டனர். அவர்களுடைய நாகரிகமும் தமிழர்களுக்குள் சிறிது சிறிதாகப் பரவ ஆரம்பித்துவிட்டது. ஆரியர்களும் தமிழர்களும் இரண்டறக் கலந்தே வாழ்ந்துவந்தார்கள்.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில், மகதநாட்டு மன்னனான அசோகன் இந்தியாவின் பெரும் பகுதியைத் தன் ராஜ்யத்துள் அடக்கி ஆண்டு வந்தான். அவனுடைய கல்வெட்டுக்கள் தமிழ் நாட்டு எல்லைப்புறத்தில் குத்தியிலும், மைசூர் ராஜ்யத்துள்ள ஸித்தபுரத்திலும் கிடைக்கின்றன. அக்காலத்தில் தமிழ்நாட்டைச் சோழர், பாண்டியர், ஸத்யபுத்ரர், கேரள புத்திரர் என்னும் நான்கு வகையினர் தனியரசர்களாக ஆண்டு வந்தார்கள்.

புத்த தர்மத்தை நிலைநிறுத்தும் பொருட்டு நாட்டின் பலபாகங்களுக்கும் வெளி நாடுகளுக்கும் புத்த பிக்ஷுக்களை அசோகன் அனுப்பிவைத்தான். அவன் அனுப்பிய பிக்ஷுக்களிற் சிலர் தமிழ் நாட்டுக்கும் வந்தார்கள்.

அசோகனுக்குப் பிறகு மௌரிய வம்சம் வலி இழந்தது. ஆந்திரர்கள் என்று புராணங்களில் வழங்கப்பெறும் சாதவாகன மன்னர்கள் தக்காணத்தில் பேரரசர்களாக விளங்கினார்கள். அவர்களது வலிமையும் அதிக நாள் நீடித்திருக்கவில்லை. மத்திய ஆசியாவிலிருந்து வந்த சகவகுப்பினர்கள் தக்காணத்துள் புகுந்து **கி.பி. முதல் நூற்றாண்டில்** மேற்குப் பகுதியைத் தங்கள் வசமாக்கிக் கொண்டார்கள். மத்திய இந்தியாவிலும், தக்காணத்திலும் அரசு செலுத்திய சகர்களுக்குச் சரித்திர நூல்களில் க்ஷத்ரபர்கள் என்ற பெயர் வழங்கும். க்ஷத்ரபர்களுக்கும் சாதவாகனர்களுக்கும் அடிக்கடி போர் நிகழ்ந்து வந்தது. கடைசியில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் சாதவாகனர்களின் ஆட்சி தக்காணத்தின் கீழைக் கடற்கரையோரமாகவே ஒதுங்கிவிட்டது.

அக்காலங்களில் ஆண்ட தமிழ் மன்னர்களுள், சோழர்களில் கரிகாலனும், பாண்டியர்களில் நெடுஞ்செழியனும், சேரர்களில் செங்குட்டுவனும் பேரரசர்களாக விளங்கினார்கள். செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் சமைப்பதற்காக மேற்கொண்ட வடநாட்டு யாத்திரை பிரசித்தமானது.

அக்காலத்தில் தமிழ்நாடும் தக்காணமும், மேற்கே கிரீஸ், ரோம், எகிப்து முதலிய தேசங்களுடனும், கிழக்கே சீனா, ஸுமத்ரா, ஜாவா முதலிய நாடுகளுடனும் வியாபாரம் செய்துவந்தன. தமிழ் நாட்டிலே வைதிக மதமும், சமண பௌத்த மதங்களும் சேர்ந்தே வளர்ந்து வந்தன. தமிழ் நாடும் இலங்கையும் நெருங்கிய ஸம்பந்தம் பெற்று விளங்கின.

இதற்குப் பிறகு ஏழாம் நூற்றாண்டின் ஆரம்பம் வரையில் தமிழ்நாட்டுச் சரித்திரத்தை முறையாகக் கூறுவதற்கு வேண்டிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில், தக்காணத்தில் ஆண்டு வந்த சாதவாகனர்கள் வலி இழந்தார்கள். அவர்கள் நாடு சிதறுண்டது. கீழைக் கடற்கரையோரமாகப் பல்லவர்கள் காஞ்சீபுரத்தைத் தலைநகராகக் கொண்டு வடக்கே கிருஷ்ணாநதிக்கரை வரையில் ஆண்டு வந்தார்கள். வடக்கே விந்தியமலைச் சாரலில் வாகாடகர்கள் 'தக்ஷிணாபதி' களாக விளங்கினார்கள். வேறு சில சிறு ராஜ்யங்களும் ஏற்பட்டன.

கி.பி. நான்காம் நூற்றாண்டின் மத்தியில் சமுத்திரகுப்தன் என்னும் வட நாட்டு அரசன் கிருஷ்ணாநதிக் கரைவரையில் தண்டு எடுத்துவந்து தன் ஜயக்கொடியை நாட்டிச் சென்றான். அதன் பயனாகத் தென்னாட்டு அரசியல்நிலைமை சிலகாலம் நிலைகுலைந்திருந்தது. மேலைக் கடற்கரை யோரமாக வனவாசியைத் தலைநகராகக் கொண்டு கதம்பர்களும், கொங்கு நாட்டில் சில காலம் கோலாலபுரத்தையும் பிறகு தலைக்காட்டையும் தலை நகர்களாகக் கொண்டு கங்கர்களும் புதிதாகக் கிளம்பி ஆண்டுவந்தார்கள்.

ஐந்தாம் ஆறாம் நூற்றாண்டுகளில், தக்காணத்தில் பல அரசுகளும் ஒன்றோடொன்று புரிந்துவந்த போர்களைத் தவிர விசேஷமான செய்திகள் ஒன்றும் தெரியவில்லை. மேற்கே ஆண்ட கதம்பர்களும், கிழக்கே வேங்கியை ஆண்டுவந்த விஷ்ணுகுண்டி வமிசத்தார்களும் வாகாடகர்களுடன் நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொண்டிருந்தார்கள். தமிழ்நாட்டைக் களப்பிரர்கள் என்பவர் பிடித்துக்கொண்டு ஆண்டனர் என்று தெரிகிறது. அக்காலத்தில் வாழ்ந்து வந்த பௌத்தமதப் பெரியார்களான நாகார்ஜுனர், புத்ததத்தர் முதலியோர் தென்னாட்டினர் என்பதும் தெரியவருகின்றது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து சரித்திர நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாகத் தெரிகின்றன. தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் இந்நூற்றாண்டு ஒரு முக்கியமான காலமாகும்.

மதுரையில் பாண்டியர்கள் மறுபடியும் கிளம்பிக் களப்பிரர்களை வென்று தங்கள் அரசை மீண்டும் ஸ்தாபித்தார்கள்.

பல்லவ அரசனான ஸிம்ஹவிஷ்ணு தெற்கே கண்வைத்துச் சோழ நாட்டைக் கைப்பற்றிக்கொண்டான். வடமொழிப் புலவனான பாரவி அவனுடைய சபையில் சிலகாலம் வாழ்ந்துவந்தான் என்று தெரிய வருகின்றது. பழைய காலத்திலிருந்தே காஞ்சீபுரமானது கல்விக்கு ஓர் உறைவிடமாக விளங்கிவந்தது.

ஸிம்ஹவிஷ்ணுவின் புத்திரனான மஹேந்திரவர்மன் ஒரு கலா நிபுண னாக விளங்கினான். மலையைக் குடைந்து கோயில்கள் நிர்மாணிக்கும் வழக்கத்தைத் தென்னாட்டுக்குக் கொணர்ந்தவன் அவனே. அவன் காலத்தி லிருந்துதான் தமிழ்நாட்டிற் சாஸனங்கள் தொடர்பாகக் கிடைக்கின்றன.

மேற்கே கதம்ப ராஜ்யம் நிலைகுலைய, அதன் ஸ்தானத்தில் வாதாபி யிலிருந்து ஆண்டு வந்த சளுக்கியர்களால் ஒரு புதிய அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது. வடநாட்டுப் பேரரசனான ஹர்ஷவர்த்தனனைப் புறங்கண்ட புலிகேசி, தக்காணம் முழுவதையும் வென்று வேங்கிநாட்டிற்கு அரசனாகத் தன் தம்பி விஷ்ணுவர்த்தனனுக்கு முடிசூட்டிவைத்தான். அவன் வமிசத்தார்கள் தான் கீழைச் சளுக்கியர்கள் என்று கூறப்படுபவர்கள்.

புலிகேசி தமிழ்நாட்டிலும் புகுந்து பல்லவர்களை முறியடித்தான். ஆயினும், மஹேந்திரவர்மன் மகனான நரஸிம்ஹவர்மன் சளுக்கிய நாட்டின்மேல் படையெடுத்துச் சென்று வெற்றிபெற்று வாதாபியையும் அழித்தான். புலிகேசியின் மகனான விக்கிரமாதித்தன் பல்லவர்களிட மிருந்து மறுபடியும் தங்கள் நாட்டைக் கைப்பற்றி, தன் தந்தைக்கு நேர்ந்த அவமானத்தைப் பொறாது தமிழ் நாட்டினுள் புகுந்து சோழநாட்டில் காவிரிக்கரை வரையில் தண்டு எடுத்துச் சென்றான். பல்லவர்களுக்கும் சளுக்கியர்களுக்கும் அடிக்கடி நடந்த சண்டைகளில் பாண்டியர்களும் கங்க அரசர்களும் கலந்துகொண்டார்கள்.

இந்த நூற்றாண்டிலேதான் சைவ வைஷ்ணவ மதங்கள் வளர்ச்சி பெற்றன. அப்பர், சம்பந்தர் ஆகிய சைவ சமய குரவர்களும், நாயன்மார் களில் பலரும் வாழ்ந்தது இக்காலத்திலேதான். சமணர்கள் தமிழ் நாட்டை

விடுத்துக் கொங்குதேசத்தைத் தலைமை ஸ்தானமாகக் கொண்டார்கள். சீனதேச யாத்ரிகரான யுவான் சுவாங் தமிழ் நாட்டுக்கு வந்து போனதும் இக்காலத்தில் தான். தண்டி முதலிய வடமொழிக் கவிகளும் தமிழ்நாட்டில் இக்காலத்தில் வாழ்ந்து வந்தனர்.

எட்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில் பல்லவ சிங்காதனம் ஏறிய நந்தி வர்ம பல்லவமல்லன் காலத்திலே பல்லவ ராஜ்யம் மகோந்நத ஸ்திதியில் விளங்கியது. ஆயினும் அவன் ஆட்சியின் அந்தியத்தில் அரசு நிலை குலைந்துவிட்டது.

தக்காணத்தில் சளுக்கியர் ஆதிக்கம் வீழ்ச்சியடைய, அவர்களுடைய இராஜ்யம் முழுவதையும் இராஷ்டிரகூடர்கள் கைப்பற்றினார்கள். இராஷ்டிரகூடர்கள் ஒருபுறமும், பாண்டியர்களின் பேரரசனான ஜடிலவர்மன் பராந்தகன் ஒரு புறமுமாக நந்திவர்ம பல்லவமல்லனைத் தாக்கி வெற்றி கொண்டார்கள். அவனுக்குப்பின் பல்லவர்கள் ஒரு நூற்றாண்டுகாலம் ஆண்டுவந்தபோதிலும் அவர்கள் அவ்வளவு பலிஷ்டர்களாக இல்லை. ஆனால் அந்தக்காலத்தில் நாட்டில் கலை வளர்ச்சியடைந்தது. வைஷ்ணவ ஆழ்வாரான திருமங்கைமன்னன் என்பவர் நந்திவர்ம பல்லவமல்லன் காலத்தவர். தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்தில்தான் பாரதவெண்பா பாடப்பெற்றது. ஆதிசங்கரர் எனப்படும் சங்கராச்சாரியர் வாழ்ந்த காலமும் இதுவே எனக் கூறலாம். சீவகசிந்தாமணி, பெருங்கதை முதலிய நூல்களைத் தமிழில் எழுதிய காலமும் இதுவேயாகும்.

ஒன்பதாம் நூற்றாண்டில் பாண்டியர்கள் வலிமை மிகுந்தவர்களாக இருந்தார்கள். அவர்கள் அடிக்கடி பல்லவர்களுடன் போர் நிகழ்த்தி வந்ததோடு இலங்கையிலும் தங்கள் வலிமையைக் காண்பித்தார்கள். அந்நூற்றாண்டின் கடைசியில் திருப்புறம்பயத்தில் நடந்த சண்டையில் பல்லவர்கள் முறியடிக்கப்பட்டார்கள். அத்துடன் அவர்கள் ஆட்சி முடிவடைந்ததென்றே கூறவேண்டும். அச்சண்டையில் முடிவாகச் சோழர்கள் மீண்டும் தங்கள் நாட்டைப் பெற்றார்கள். சோழர்களின்

ஆதிக்கத்தை நிலைநிறுத்திய ஆதித்தன், தொண்டைநாடு முழுவதையும் கைக்கொண்டு கொங்கு நாட்டையும் வென்று கீழ்ப்படுத்தினான்.

பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சிங்காதனம் ஏறிய அவன் மகனான பராந்தகன், பாண்டியர்களை முறியடித்து இலங்கையையும் வென்று 'மதுரையும் ஈழமும் கொண்டவன்' என்ற விருதுடன் விளங்கினான். அவனது ஆட்சியின் கடைசியில், இராஷ்டிரகூட அரசன் கன்னர தேவன் தொண்டை நாட்டைத் தாக்கிச் சோழர்களை வென்றாலும், அவன் அதிககாலம் அந்நாட்டைப் பரிபாலிக்க முடியவில்லை.

கி.பி. 985-ஆம் ஆண்டில் சோழ அரசனாக முடிசூட்டப் பெற்ற இராஜ-ராஜனும், ***பதினோராம் நூற்றாண்டின்*** முற்பகுதியில் சோழ சிங்காதனத்தில் அமர்ந்திருந்த அவன் மகனான கங்கை கொண்ட சோழன் எனப்படும் இராஜேந்திரனும், எண்டிசையும் புகழ் பரக்க ஆண்டார்கள். அக்காலத்தில் சோழராஜ்யமானது சென்னை இராஜதானி, நிஜாம் ராஜ்யம். மைசூர் ஸம்ஸ்தானம், பம்பாய் ராஜதானியின் தென்பகுதியில் கர்நாடகம் என இக்காலத்தில் வழங்கப்படும் பிரதேசங்களையும், இலங்கையையும், ஸுமத்ரா, ஜாவா முதலிய தீவுகளையும் கொண்டதாக விரிந்திருந்தது. இராஜேந்திரன் கங்கைக்கரை வரையில் தண்டு எடுத்துச் சென்று தன் புகழை நிலைநாட்டினான்.

அக்காலத்தில் தமிழ்நாடு செழிப்புற்று விளங்கியது. தஞ்சைப் பெரியகோயிலும், கங்கைகொண்ட சோழபுரமும், அவ்வூர்க் கோயில் முதலியனவும் அப்பொழுதுதான் நிர்மாணிக்கப்பட்டன. சைவத் திருமுறைகள் வகுக்கப்பட்டதும் அக்காலமே.

பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சோழர்களுக்கும், தக்ஷிணத்தில், ராஷ்டிரகூடர்களை வென்று தங்கள் நாட்டைத்திரும்பப் பெற்றுக் கலியாணியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த மேலைச் சளுக்கியர்களுக்கும் அடிக்கடி போர் நிகழ்ந்தது. ஆயினும் கங்கைகொண்ட சோழனுடைய பேரனும் கீழைச் சளுக்கிய வமிசத்தவனுமான குலோத்துங்கன்

சோழ சிங்காதனத்திற்கு வருமுன் மேலைச்சளுக்கிய அரசனான ஆறாம் விக்கிரமாதித்தன் தன் மைத்துனன் அதிராஜேந்திரனுக்குப் பெரிதும் உதவி செய்தான். எனினும் அவ்வரசன் தன் பிரஜைகளால் கொல்லப்பட்ட போது குலோத்துங்கன் பட்டம் எய்தினான். கலிங்கத்தை வென்று ஜயங்கொண்டாரால் பரணிகொண்டவன் அவனே. அவனுக்குப் பின் சிங்காதனம் ஏறிய இரண்டு மூன்று அரசர்கள் காலத்தில் சோழ ஸாம்ராஜ்யம் புகழுடனே விளங்கியது. அக்காலத்திலேதான் வைஷ்ணவப் பெரியாரான இராமாநுஜர் வாழ்ந்துவந்தார். கவிச்சக்கரவர்த்தியான ஒட்டக்கூத்தரும், பெரியபுராணம் செய்த சேக்கிழாரும், இராமாயணம் பாடிய கம்ப நாடரும் வாழ்ந்தது பன்னிரண்டாம் நூற்றாண்டிலேதான்.

இந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் பராக்கிரமன், குலசேகரன் ஆகிய இருவர்களுக்குள் பாண்டியசிங்காதனத்துக்கு உரியவன்யார் என்பது காரணமாக நடந்த ஒரு சண்டையில், சோழர்கள் ஒருபுறமும், இலங்கை அரசன் பராக்கிரமபாஹு ஒரு புறமுமாகப் பெரும்போர் புரிந்தனர். அக்காலத்தில் கங்கராஜ்யத்தை வென்று துவாரசமுத்திரத்தைத் தலை நகராகக்கொண்டு ஆண்டுவந்த ஹொய்சலர்களும் சமயம் நேர்ந்த பொழுதெல்லாம் சோழநாட்டிற்குள் புகுந்து வந்தார்கள்.

அந்நூற்றாண்டில் தக்காணத்திலும் மேலைச்சளுக்கியர்களின் வலி குன்றியதால் அவர்கள் நாட்டை பிஜ்ஜலன் என்னும் கலசூரி வமிசத்தவன் கைப்பற்றிக்கொண்டான். அவன் காலத்தில்தான் வீரசைவ மதஸ்தாபகரான பஸவர் வாழ்ந்தது. கலசூரி வமிசமும் அதிகநாள் ஆளவில்லை. அவர்கள் நாடு மேல்புறம் தேவகிரியிலிருந்து ஆண்டுவந்த யாதவர்களாலும், கீழ்புறம் வாரங்கல் என்னுமிடத்திலிருந்து ஆண்டுவந்த காகதீயர்களாலும் பிரித்துக் கொள்ளப்பட்டது.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் சோழராஜ்யம் சிதறுண்டு போக ஆங்காங்கே சிறுராஜ்யங்கள் ஏற்பட்டன. மத்திய அரசாங்கமும் வலியிழந்தது. பாண்டியர்கள் வலிமிகுந்து மதுரையில் தங்கள் அரசை மறுபடியும் பலமாக ஸ்தாபித்துக்கொண்டார்கள். ஹொய்சலர்கள்,

திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள கண்ணனூரைத் தங்கள் தலைநகராக வைத்துக்கொண்டு சோழர்களுக்கு உதவியாக இருந்து அவர்களைப் பாதுகாத்து வந்தார்கள். ஆயினும் கடைசியாக, நாடு பாண்டியர்கள் வசமாயிற்று. மாறவர்மன் ஸுந்தரபாண்டியன், ஜடாவர்மன் ஸுந்தர பாண்டியன் என்பவர்கள் தமிழ்நாடு முழுவதையும் ஏகசக்ராதிபதிகளாக ஆண்டுவந்தார்கள்.

பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மறுபடியும் மதுரைச் சிங்காதனத்துக்கு இருவர் போட்டியிட்டனர். அவர்களில் ஒருவன், டில்லி சுல்தானான அல்லாவுதீன் கில்ஜியைத் தனக்கு உதவி செய்யுமாறு வேண்டிக்கொண்டான். அவன் தன் தளகர்த்தனான மாலிக்காபூரைக் கொண்டு மதுரையைத் தாக்கி ராமேசுவரம் வரையில் தண்டு எடுத்துச் சென்று திரும்பினான். அதன் பயனாக நாடு மிகவும் குழப்பத்தை யடைந்தது. இது கடந்த இருபது வருஷங்களுக்குள் டில்லியை ஆண்டுவந்த முகம்மதுபின் துக்ளக் மறுபடியும் மதுரை வரையில் தண்டு எடுத்துவந்தான். இச்சண்டைகளின் பயனாக ஹொய்சல அரசாங்கம் ஒழிந்தது. மதுரையிலும் முகம்மதியர் ஆட்சி நிறுவப்பெற்று ஐம்பது வருஷகாலம் சுல்தான்கள் ஆண்டுவந்தார்கள்.

ஹொய்சல ராஜ்யம் அழிந்தபிறகு அதன் ஸ்தானத்தில் விஜயநகரத்தில் ஒரு ஹிந்து அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது. அந்நூற்றாண்டின் பிற்பகுதியில் அவர்கள் மதுரை சுல்தானை வென்று தமிழ்நாட்டை அடிப்படுத்தினார்கள். அக்காலங்களில் மாவலிவாணர் முதலியவர்கள் விஜயநகரத்து அதிகாரிகளாகத் தமிழ் நாட்டை ஆண்டு வந்தார்கள்.

பதினைந்தாம் நூற்றாண்டில் தமிழ் நாடு சிறு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு அவற்றில் விஜயநகர ஸாம்ராஜ்யத்தின் பிரதிநிதிகள் 'மண்டலாதிபதி'களாக அரசுசெலுத்தி வந்தனர். விஜயநகரத்து அரசர்களுள் பேர்பெற்ற கிருஷ்ணதேவராயரைப் பற்றிய கதைகள் பல இன்றும் தமிழ்நாட்டில் வழங்கிவருகின்றன.

பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் மதுரை, திருவண்ணாமலை ஆகிய இரண்டு இடங்களில் இருந்த மாகாணங்கள் மூன்றாகப் பிரிக்கப்பட்டுத் தஞ்சையில் ஒருபுதிய அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது. 'கவர்னர்'கள் சிற்றரசர்களாக மாறி அந்தந்த நாடுகளைத் தலைமுறை தலைமுறையாக ஆள ஆரம்பித்தார்கள்.

கி.பி. 1565-ஆம் ஆண்டில் தக்காணத்தை ஆண்டுவந்த சுல்தான்கள் ராக்ஷஸ-தங்கடி என்னுமிடத்தில் விஜயநகர மன்னனை முறியடித்து அவன் தலைநகரையும் அழித்துவிட்டார்கள். அதன் பின் அவர்கள் தலைநகரம் பெனுகொண்டாவுக்கு மாற்றப்பட்டுக் கடைசியில் சந்திரகிரியாக மாறியது. அவர்களுடைய பழைய வலியும் புகழும் போய்விட்டன. மாகாணங்களை ஆண்டுவந்த சிற்றரசர்களும், பெயரளவில் சக்கரவர்த்திகளை மதித்து வந்தார்களே யொழிய, உண்மையில் தனியரசர்களாகவே விளங்கினார்கள்: ஒருவருக்கொருவர் சண்டைகள் போட்டும் வந்தனர்.

தஞ்சை, மதுரை முதலிய இடங்களில் ஆண்டுவந்த நாயக்க மன்னர் சபைகளில் பல வித்துவான்கள் வாழ்ந்துவந்தார்கள். அரசகுடும்பத்தினர்களிலும் பலர் கலாநிபுணர்களாக விளங்கினார்கள். வடமொழி, தெலுங்கு, தமிழ் ஆகிய மூன்றும் ஒருங்கே வளர்ச்சியடைந்தன. அம்மொழிகளிற் பலநூல்கள் எழுதப்பட்டன. பாண்டிய வமிசத்தார்கள் தென்காசியைத் தலைநகராகக் கொண்டு விஜய நகர மன்னர்களுக்குச் சிற்றரசர்களாகத் திருநெல்வேலிச் சீமையை ஆண்டுவந்தனர். அவர்களில் அதிவீரராமன், வரதுங்கராமன் ஆகியவர்கள் தமிழில் நல்ல புலமை வாய்ந்தவர்கள் என்பது தெரிந்ததே.

இந்நூற்றாண்டில் பரங்கிகள் (போர்ச்சுகல் தேசத்தவர்கள்) வியாபாரம் செய்வதற்குத் தமிழ் நாட்டிற்கு வந்தார்கள். அவர்களுடன் வந்த கிறிஸ்தவ மதப் பாதிரிகள் மதப்பிரசாரம் செய்வதற்காகத் தமிழ், வடமொழி முதலியவற்றைக் கற்றுப் பண்டிதர்களாக ஆனார்கள். வீரமாமுனிவர் எனப்படும் பெஸ்கி, தத்துவ போதக ஸ்வாமிகள் எனப்படும் ராபர்ட் நொபிலி ஆகிய பாதிரிகள் இலக்கியத்துறையில் அரிய தொண்டுகள்

ஆற்றியிருக்கிறார்கள். தமிழில் எழுதப்பட்ட நூல் ஒன்றும் முதன் முதலாகக் கிறிஸ்தவப் பாதிரிகளால் கி.பி. 1579-ஆம் ஆண்டில் அச்சிடப்பெற்றது.

பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தக்காணத்தில் சிவாஜி மஹாராஷ்டிர ஸாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தான். பெயரளவில் ஒட்டிக் கொண்டிருந்த விஜயநகர ஸாம்ராஜ்யமும் அவன்காலத்தில் ஒழிந்தது. அவன் தம்பியான வெங்காஜி தஞ்சையைப் பிடித்து அதில் ஒரு மஹாராஷ்டிர ராஜ்யத்தை ஏற்படுத்தினான். தஞ்சையை யாண்டுவந்த மஹாராஷ்டிரர்கள் காலத்திலும் தமிழ் நாட்டில் நற்கலைகள் யாவும் அதிகமாக வளர்ச்சி யடைந்தன.

சிவாஜியின் காலத்திற்குப் பிறகு தொண்டைநாடு தக்காணத்தை ஆண்டுவந்த முகம்மதிய அரசர்கள் வசமாகி, ஆற்காடு ஒரு ***'ஸுபா'*** வாக ஏற்படுத்தப்பட்டது. அக்காலத்தில் கீழைக்கடற்கரையோரமாக வியாபாரம் செய்வதற்காகப் பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், டச்சுக்காரர்கள் முதலியோர் வந்தனர்.

பதினெட்டாம் நூற்றாண்டில் பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் போட்டி நடந்ததையும் ஆற்காட்டுச் சண்டையில் கிளைவ் வெற்றி பெற்றதையும் யாவரும் அறிவார்கள். ஒரு சமயம் ஆற்காடு சுபேதார் சந்தாசாஹிபும், மற்றொருசமயம் மைசூரில் ஆண்டுவந்த ஹைதர் அலியும் அவன் மகன் திப்பு ஸுல்தானும் தமிழ்நாட்டின் தென் பகுதியைத் தாக்கிச் சூறையாடினர். ஆங்கிலேயர்கள் சிறிது சிறிதாகப் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்தை ஒடுக்கித் தமிழ்நாட்டைப் பகுதி பகுதியாகக் கைக்கொண்டு ஆளத் தொடங்கினார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் நாடு முழுவதும் அவர்கள் வசமாகிவிட்டது.

3

தமிழ்நாட்டுப் பழைய கல்வெட்டுக்கள்

தமிழ் நாட்டிற் கிடைக்கும் சாஸனங்கள் பொதுவாகத் தமிழ், கிரந்தம், வட்டம் என்று வழங்கப்படும் மூன்று வகை லிபிகளில் உள்ளன. நாகர லிபியில் உள்ள சாஸனங்களும் சில கிடைத்துள்ளன. அவற்றைப்பற்றிப் பின்னாற் கூறுவோம்.

கிரந்தலிபி வடமொழிச் சாஸனங்களையும் தமிழ்மொழிச் சாஸனங்களில் வரும் வடமொழிச் சொற்களையும் எழுதுவதற்கு உபயோகப்பட்டுவந்தது. தமிழ் மொழியில் உள்ள சாஸனங்கள் தமிழ், வட்டம் என்னும் இரு வகை லிபிகளிலும் பொறிக்கப்பட்டு வந்தன.

இவ்விடத்தில் நாம் கூறவேண்டுவது ஒன்றுண்டு. இப்பொழுது வழங்கி வரும் தமிழ் எழுத்துக்களையும், அவற்றின் பழைய வடிவங்களையுமே நாம் இந்த நூலில் 'தமிழ்' என்னும் பெயரால் குறித்துள்ளோம். வட்டெழுத்தும், தமிழ்மொழிச் சாஸனங்களை எழுதுவதற்கே உபயோகப்பட்டுவந்தாலும், அவ்வகைக்கு, வட்டம் என்ற பெயர் பழைய வழக்கிலேயே காணப் படுவதால், அதை அங்ஙனம் வேறாகவே குறித்துள்ளோம்.

கிரந்தம், தமிழ் ஆகிய இரண்டுவகை லிபிகளில் உள்ள சாஸனங்கள் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்துதான் கிடைக்கின்றன. வட்டெழுத்தில் உள்ளனவும் கி.பி. எட்டாம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து கிடைக்கின்றன. இவற்றிற்கு முற்பட்ட காலத்தனவாகத் தமிழ்நாட்டிற் கிடைக்கும் சாஸனங்கள் அசோக மன்னனுடைய கல்வெட்டுக்களின்

எழுத்துக்களைப் போன்ற பிராமி எழுத்துக்களில்தான் உள்ளன. திருநாதர் குன்று என்னும் இடத்தில் கிடைக்கும் சிறு வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்றைத்தவிர, இந்தப் பிராமி கல்வெட்டுக்களுக்கும், ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்துக்கும் இடைப்பட்ட காலத்துச் சாஸனங்கள் தமிழ் நாட்டில் இதுகாறும் கிடைக்கவில்லை.

அசோக மன்னன் காலத்திற் பொறிக்கப்பட்ட சாஸனங்கள் தான் இந்தியாவில் கிடைப்பவற்றுள் பழமையானவை. அவன் காலத்திலேயே பிராமி லிபி நன்கு வளர்ச்சி பெற்றிருந்தது. அப்பொழுதே பிராமியின் வரிவடிவத்தில் 'வடவமைப்பு' 'தென்னமைப்பு' என இரு பிரிவுகள் ஏற்பட்டுவிட்டன. அன்றி, கி.மு. நான்காம், ஐந்தாம் நூற்றாண்டுகளைச் சார்ந்தனவாகக் கூறக்கூடிய சில நாணயங்களும், சிறு ஞாபகச் சின்னங்களும் வடநாட்டிற் கிடைத்திருக்கின்றன. அவற்றில் காணப்படும் எழுத்துக்களும் பிராமி லிபியைச் சேர்ந்தனவே. ஆகையால் அசோகன் காலத்துக்கு முந்தியும், பிராமி லிபி இந்தியாவில் வழக்கில் இருந்து வந்தது என்பது நிச்சயமாகின்றது.

தமிழ்நாட்டிற் கிடைக்கும் பிராமிக் கல்வெட்டுக்கள் ஒன்றிரண்டு வரிகளையுடையனவாக மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களில் அதிகமாகக் காணப்படுகின்றன. கருவூர்ப் பக்கத்திலும் புதுக்கோட்டை ஸமஸ்தானத்திலும் சில அகப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்கள் யாவும் குன்றுகளின் உச்சியிலும் சரிவுகளிலும் உள்ள பஞ்சபாண்டவர் படுக்கை எனப்படும் குகைகளிலும், படுக்கைகளிலும், அவற்றின் பக்கங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளன. இவை அசோக மன்னன் காலத்தையோ அல்லது அதற்குச் சற்று முந்திய காலத்தையோ சேர்ந்தனவாகக் கருதப்படுகின்றன.

அக்குகைகளும், படுக்கைகளும் முற்காலத்தில் பௌத்த பிக்ஷுக்களோ ஜைன முனிவர்களோ வசித்துவந்த பாழிகளாகும் என்றும், இக் கல்வெட்டுக்கள் அவற்றை வெட்டுவித்த செய்தியைத் தெரிவிக்கின்றன வென்றும் கருதப்படுகின்றது. அவற்றைப் போலவே உள்ள குகைகளும், கல்வெட்டுக்களும் இலங்கைத் தீவிலும் கிடைத்துள்ளன.

இக் கல்வெட்டுக்களுள் பெரும்பாலனவற்றுக்குப் புகைப்படங்கள் சென்னை சிலாசாஸன இலாக்காவின் 1912, 1915, 1918-ஆம் வருஷ அறிக்கைகளில் வெளியிடப்பட்டுள்ளன. அந்த இலாக்கா உத்தியோகஸ்தர்கள் மிகுந்த ஊக்கத்துடன் உழைத்து வாசித்துள்ள அவற்றின் தாற்காலிகமான பாடங்களை அகில இந்திய கீழ்த்திசை மகாநாட்டு நடவடிக்கைகளில் (Proceedings of the All India Oriental Conferences) காணலாம். முதல் மகாநாட்டு நடவடிக்கைகளில் ராவ்சாகிப் H. கிருஷ்ண சாஸ்திரிகளுடைய கட்டுரையும், மூன்றாம் மகாநாட்டு நடவடிக்கைகளில் ஸ்ரீமான் K.V. சுப்பிரமணிய ஐயர் அவர்களுடைய கட்டுரையும் அடங்கியுள்ளன. ஆயினும் இவை இன்னும் சரிவர வாசிக்கப்படவில்லையென்றே கருத வேண்டும்.

தமிழ்நாட்டில் வழங்கிவரும் லிபிகள் பிராமியினின்றுமே வளர்ந்தன வாதலாலும், இக் கல்வெட்டுக்களே தமிழ்நாட்டிற் கிடைப்பவற்றுள் மிகவும் பழமையானவை யாதலாலும் இவை திருப்திகரமாக வாசிக்கப்படாத நிலையில் இருந்தாலும், இவற்றை நாம் அறியவேண்டுவது அவசியம்.

இக்கல்வெட்டுக்களில் காணப்படும் பிராமி லிபியின் முக்கிய அம்சங்களாவன:-

(1) க, ச, ட, த, ப, ஆகிய வல்லெழுத்துக்கள் மட்டுமே காணப்படும். வடமொழியில் உள்ள அவற்றின் வர்க்க எழுத்துக்கள் அதிகமாகக் காணப்படா. [o (ṭha) என்னும் எழுத்து சில இடங்களிலும், ᴅ(dha) என்னும் எழுத்து ஓர் இடத்திலும் உள்ளன.]

(2) ஶ, ஷ ஆகிய எழுத்துக்கள் உபயோகிக்கப்படவில்லை.

(3) ஸ என்பது சிற்சில இடங்களில் மட்டுமே காணப்படுகின்றது.

(4) உயிரெழுத்துக்களுள் ஐ, ஔ ஆகிய இரண்டும் காணப்படவில்லை. அதேபோல வடமொழியில் உள்ள (ஊ அது ஸ்வாரம், (ஃ) விஸர்க்கம் ஆகிய இரண்டும் காணப்படவில்லை.

(5) உயிர்மெய்யெழுத்துக்களுள் எகர ஒகரங்களின் நெடில் வடிவங்களினின்றும் வேறாகக் குறில்வடிவங்களும் காணப்படுகின்றன வென்பர் ஒருவர். ஆயினும் வெளியிடப்பட்டுள்ள இக் கல்வெட்டுக்களுடைய புகைப்படங்களின் உதவியால், எகர ஒகரங்களுக்கு இடப்பட்ட புள்ளிகளையோ வேறு குறிகளையோ நாம் நிச்சயிக்க முடியவில்லை.

(6) இவற்றைத் தவிர, வடநாட்டுப் பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படாத சில எழுத்துக்கள் கிடைக்கின்றன. அவை அசோகன் கல்வெட்டுக்களில் காணப்படாமையால் அக்கல்வெட்டுக்கள் எழுதப்பட்ட மொழியினின்றும் வேறான மொழியில் இத்தமிழ் நாட்டுக் கல்வெட்டுக்கள் எழுதப்பட்டவை என்பதைக் குறிக்கின்றன. இவை பாலி போன்ற ஒரு பிராகிருத மொழிச் சொற்கள் கலந்த தமிழ்மொழியில் பொறிக்கப்பட்டவையென்று நினைக்க இடமுண்டு.

இக் கல்வெட்டு எழுத்துக்களும் கிருஷ்ணா ஜில்லாவில் உள்ள பட்டிப்ரோலு (Bhattiprolu) என்னுமிடத்தில் கிடைத்த எழுத்துக்களும் நெருங்கிய தொடர்பு உடையன. பட்டிப்ரோலு எழுத்துக்கள் அசோக மன்னன் காலத்து எழுத்துக்களைப்போலவே பெரிதும் உள்ளன. ஆயினும் அவை பிராமியின் தென்னமைப்பைச் சார்ந்தவை. அவற்றை ஆராய்ச்சி ஆசிரியர்கள் அவை கி.மு. 200-ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்தவனவாகவே இருத்தல் வேண்டும் என்று கருதுகிறார்கள்.

ஆயினும் வடநாட்டு எழுத்துக்களுக்கும் பட்டிப்ரோலு எழுத்துக்களுக்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் உண்டு. வடமொழியில் மெய்யெழுத்துப் பொதுவாகத் தனித்துஎழுதப்படாமல் பின்வரும் உயிர் மெய்யெழுத்துடன் சேர்த்தே 'த்வந்த்வாக்ஷரம்' - அதாவது கூட்டெழுத்தாக எழுதப்படும். அதனால் தனித்து எழுதப்படும் மெய்யெழுத்து அகரத்துடன் சேர்ந்தே ஒலிக்கும். அகர நெடிலைத் தெரிவிக்கவே அதிகப்படியான குறியைச் சேர்க்க வேண்டும்.

1 2 3

பிராமியில் 1 என்னும் இடத்தில் காட்டப் பட்டது ககரத்தின் வடிவம். 'கா' என்பதை தெரிவிக்க, 2-ல் உள்ளதைப் போல, அதன் தலையில் ஒரு சிறிய படுக்கைக் கோடு சேர்க்கப்பட்டுவந்தது. ஆனால் பட்டிப்ரோலு எழுத்துக்களில் 2-ல் காட்டியுள்ள உருவமே ககரத்தைக் குறிக்கின்றது. 'கா' என்பதைத் தெரிவிக்க 3-ல் உள்ளதைப்போல, தலைக்கோட்டின் வலதுபுறமாக மற்றொரு சிறிய கோடு தொங்கவிடப்பட்டுள்ளது.

'மெய்யி னியற்கை புள்ளியோடு நிலையல்'' என்று ஆசிரியர் தொல்காப்பியர் கூறுகிறார். அதனால் புள்ளி யிடப்பட்ட மெய்யெழுத்து, தமிழில் தனி மெய்யெழுத்தைக் குறிக்கும், வடமொழியிலோ எழுத்தின்மேல் இடப்பட்ட புள்ளி 'ம்' ( ) என்பதுபோல உச்சரிக்கப்படும் அநுஸ்வாரத்தைக் குறிக்கும்.உதாரணமாக, 'க' என்னும் எழுத்தின்மேல் புள்ளியிட்டால், தமிழில் 'க்' என்றும், வடமொழியில் 'கம்' என்றும் ஒலிக்கும். பட்டிப்ரோலு சாஸனம் திராவிட நாகரிகம் உள்ள நாட்டில் வடமொழியில் எழுதப்பட்டது; ஆதலின் மேலேகூறிய இரண்டு விதிகளையும் திருப்தி செய்யவேண்டித் தனி எழுத்தை மெய்யெழுத்து என்று வைத்து, அகரக் குறிலையும் நெடிலையும் குறிப்பதற்காக இரு வேறு குறிகள் அமைத்து எழுதப்பட்டனவோ என்று ஊகிக்க இடமுண்டாகின்றது.

தமிழ் நாட்டுப் பிராமிக் கல்வெட்டுக்களிலும் இப்பழக்கம் ஒரு சிறிது காணப்படுகின்றது. 'ஆ' ஊர்ந்த மெய்யெழுத்துக்கு ஆகார நெடிலைக் குறிக்கப் பட்டிப்ரோலுவில் உள்ளதைப் போன்ற உருவம் இதுகாறும் கிடைக்கவில்லை; ஆயினும் அந்நெடிலைக் குறிக்க இரு கோடுகள் இடப்பட்ட உருவம் கிடைக்கின்றது. உயிர்மெய் யெழுத்துக்கள் சிற்சில இடங்களில் முதலில் மெய்யெழுத்தும் பிறகு உயிரெழுத்தும் ஆக இரண்டு எழுத்துக்களும் தனித்தனியாக எழுதப்பட்டுள்ளன.

உதாரணமாக, யூ என்பது 4-ல் உள்ளதைப்போல 'ய ஊ' எனவும், 'டா' என்பது 5-ல் உள்ளதைப்போல 'டஆ' எனவும் எழுதப்பட்டுள்ளன.

4 5

இதனால் தமிழ்நாட்டுப் பிராமிக் கல்வெட்டுக்களிலும் பெரும்பான்மை யான இடங்களில் புள்ளியில்லா மெய்யெழுத்தைத் தனி மெய்யெழுத்தாகவே கருதவேண்டியிருக்கிறது.

தமிழ்நாட்டுப் பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படும் புதிய குறிகளாவன:-

6 என்னும் இடத்தில் உள்ளகுறி: இக்குறி வடநாட்டில் கிடைக்கும் கிறிஸ்து அப்தத்திற்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்த கல்வெட்டுக் களில் காணப்படவில்லை. ஆனால்



6 7 8 9 10 11

க்ஷத்ரபசாதவாகன சாஸனங்களிலும் குப்த சாஸனங்களிலும் காணப்படுகின்றது. அவ்விடங்களில் இக்குறி 'ஈ' காரமாகவே வாசிக்கப்படுகின்றது. தமிழ்ச்சாஸனங்களுள் இது கி.பி. எட்டாம் நூற்றாண்டில் காணப்படு கின்றது. அப்பொழுதும் இது 'ஈ' காரமாகத்தான் உள்ளது. ஆனால் தமிழ்நாட்டுப் பிராமிக் கல்வெட்டுக்களில் இது இகரமாக வாசிக்கப் படுகின்றது. இலங்கையில் கிடைக்கும் இதே காலத்தைச் சார்ந்த கல்வெட்டுக்களிலும் இக்குறி காணப்படுவதுடன் அவ்விடத்திலும் இகரமாகவே வாசிக்கப்படுகின்றது என்பது கவனிக்கத்தக்கது.

அசோக சாஸனத்தில் உயிர் எழுத்தான இகரத்தைக் குறிக்க இப்பொழுது நாம் ஆய்த எழுத்தை எழுதுவதுபோல மூன்று புள்ளிகளால் ஆன உருவம் காணப்படுகின்றது. அதே போன்ற உருவம் தமிழ் நாட்டுப் பிராமிக் கல்வெட்டுக்களிலும் காணலாகும். ஆனால் இங்கே முப்புள்ளியால் ஆன உருவம் ஈகாரமாக வாசிக்கப்படுகின்றது.

இந்தக் குறில் நெடில் மாறுபாடு எப்பொழுது எவ்விதம் ஏற்பட்டது என்பதை நாம் நன்கு அறியக்கூடவில்லை.

7 என்னும் இடத்தில் உள்ளகுறி: இது கல்ஸி (Khalsi) என்னும் இடத்தில் உள்ள அசோக மன்னன் கல்வெட்டில் காணப்படும் 'ஜ' என்னும் எழுத்தின் உருவத்துடன் ஒப்பிடக்கூடியதாக இருக்கின்றது. தற்காலத்தில் 'ழ' என்னும் எழுத்து எழுதப்படும் உருவத்தை ஒத்திருக்கின்றது. இது 'ழ' என்றே வாசிக்கப்படுகின்றது.

8 என்னும் இடத்தில் உள்ளகுறி: இது 'ல' என்னும் எழுத்தின் பிராமி உருவத்தினின்றும் ஒரு சிறிதே வேறுபட்டுள்ளது. வலதுபுறத்தில் உள்ள கோட்டில் ஒரு சிறிய கொக்கி ஒட்டப்பட்டிருப்பதே அதிகப்படி யாகும். இது லகரத்தின் ஒலியைப் பெரும்பாலும் ஒத்த 'ள'கரமாகக் கொள்ளப்படுகின்றது. 'ள'கரம் வடமொழியில் கிடையாது. பட்டிப் ரோலுவில் இவ்வெழுத்துக் காணப்படுகின்றது. ஆயினும் அதன் உருவம், தமிழ்நாட்டுப் பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படும் வடிவத்தினின்றும் வேறுபட்டுள்ளது.

9 என்னும் இடத்தில் உள்ளகுறி: இது பிராமியில் சரியாக எழுதப்படாத 'டு' என்பதைப்போலத் தோற்றுகின்றது. டகர ஒலிக்கு ஒரு சிறிது ஸம்பந்தம் கொண்ட 'ற' என்று இது வாசிக்கப்படுகின்றது.

10 என்னும் இடத்தில் உள்ளகுறி: இதே போன்ற உருவம் பட்டிப்ரோலு சாஸனத்திலும் இருக்கின்றது. அவ்விடத்தில் இது 'நா' என்று வாசிக்கப்படுகின்றது. ஆயினும் தமிழ்நாட்டுப் பிராமிக் கல்வெட்டுக் களிலே ஒன்றில் 'நா' என்பதன் பிராமி உருவமும் இவ்வடிவமும் சேர்ந்து காணப்படுகின்றன. அதனால் இது 'ந' என்றே ஒலிக்கும் 'ன' கரமாகக் கொள்ளப்படுகின்றது.

11 என்னும் இடத்தில் உள்ளகுறி: இக்குறி கருவூர்ப் பக்கத்தில் உள்ள புகழியூர் என்னுமிடத்தில் கிடைக்கும் பிராமிக் கல்வெட்டுகளிற் கிடைக்கின்றது. அக் கல்வெட்டுக்கள் மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களில் கிடைக்கும் கல்வெட்டுக்களை விடச் சிறிது பிற்பட்ட காலத்தைச் சார்ந்தன

படம் - 1


க k
ங ṅ
ச c
ஞ ñ
ட ṭ
ண ṇ
த t
ந n
ப p
ம m
ய y
ர r
ல l
வ v
ழ ḻ
ள ḷ
ற ṟ
ன ṉ
ꯁ ṭh
ஸ s
அ a
ஆ ā
இ i
ஈ ī
உ u
ஊ ū
எ e
ஐ ai
ஒ o

வென்று கூறலாம். இக் குறியையும் 'ன' கரமாகவே வாசிக்க வேண்டியிருக்கிறது. இது வட்டெழுத்தில் உள்ள னகரக்குறியைப் போலவே உள்ளது. புகழியூர்க் கல்வெட்டுக்களில் 10 என்னும் இடத்தில் உள்ள 'ன' கரக்குறியும், இவ்விரண்டு 'ன'கரக் குறிகளுக்கும் மத்தி யெனக் கூறக்கூடிய ஒன்றிரண்டு வடிவங்களும் காணப்படுகின்றன. அவற்றைப் முன்னே சேர்த்துள்ள படத்திற் காண்க.

இந்தப்படம், மேலே நாம் கூறியுள்ள வேறுபாடுகளைத் தவிர, அசோக மன்னன் சாஸனங்களில் காணப்படும் எழுத்துக்களின் மதிப்பைப் பின்பற்றியே அமைக்கப்பட்டுள்ளது.

இக் கல்வெட்டு எழுத்துக்களில் நாம் கவனிக்கவேண்டிய வேறு சில அம்சங்களும் உள.

உயிர் எழுத்துக்கள்:-

அசோக சாஸனங்களில் அகரத்தின் இருகைகளும் ஒன்று சேர்ந்து, திருப்பி எழுதப்பட்ட K என்னும் ஆங்கில எழுத்தைப்போலக் காணப்படும். இதே உருவம் தமிழ்நாட்டிலும் காணப்பட்டாலும், இருகைகளும் பிரித்து மடித்து எழுதப்பட்ட உருவம் பொதுவாகக் காணப்படுவதாகும்.

மெய்யெழுத்துக்கள்:-

o (tha) என்னும் வடமொழி எழுத்து 'ட்ட' போட வேண்டிய இடங்களில் உபயோகிக்கப்பட்டுள்ளது.

அசோகசாஸனங்களில் மகரம், மேலே இரண்டு நேர்கோடுகளைக் கொண்ட ஒரு சுழியைப்போல எழுதப்பட்டுள்ளது. தமிழ் நாட்டிலோ, பக்கக் கோடுகளை மிக உயரமாக உடைய பகரத்தைப் போல அது வரையப்பட்டு, நடுவில் ஒரு குறுக்குக் கோடு இடப்பட்டுள்ளது.

வடநாட்டுப் பிராமியில் யகரம் நங்கூரம்போல நடுக்கோடு மிகவும் உயர்ந்து காணப்படும். அப்படிப்பட்ட உருவம் சில இடங்களில் இங்கே

காணப்பட்டாலும் பொதுவாக அவ்வெழுத்தின் மூன்று கோடுகளும் சமமாகவே எழுதப்பட்டுள்ளன.

றகர, னகரங்களில் ஒவ்வொன்றும் பல வடிவங்களுடன் காணப்படுகின்றன.

ய (dha) என்னும் வடமொழி எழுத்து எகரத்தைப் போலவே எழுதப்பட்டுள்ளது.

உயிர்மெய்யெழுத்துக்கள்:-

வடநாட்டுப் பிராமியில் அகர நெடிலுருவம் எழுத்தின் வலதுபுறம் ஒட்டப்பட்ட ஒரு சிறு படுத்த கோட்டால் தெரிவிக்கப்படும். தமிழ் நாட்டில் இரண்டு கோடுகள் ஒட்டப்பட்ட உருவங்களும் காணப்படுகின்றன.

இகரக்குறி சில இடங்களிற் வளைவு கொண்டுள்ளது.

ஓகரக்குறி சில இடங்களில் இடதுபுறம் வலதுபுறம் இரண்டிலும் நீண்டுள்ள ஒரே கோட்டால் அமைந்துள்ளது: வேறு சில இடங்களில் இடதுபுறம் ஒரு கோடும் வலதுபுறம் ஒரு கோடுமாக இரண்டு தனிக்கோடுகளாக எழுதப்பட்டுள்ளது.

குறிப்பு:

படத்தில் அடி இரண்டு வரிசையில் உள்ள எழுத்துக்கள், அப்படத்தின் மேலே உள்ள எழுத்துக்களின் வேறுபட்ட உருவங்களைக் காட்டுகின்றன. அவ்வெழுத்துக்களாவன:-

முதல் வரிசை: அ, கொ, டு, தி, பி, ய, லா, வா, ற, ன, ன.

இரண்டாம் வரிசை: பா, யு, று, ன், ன்.

4

பிராமியும் பழைய கிரந்தமும்

தமிழ் நாட்டிற் கிடைக்கும் பிராமிக் கல்வெட்டுக்களுக்குப் பிறகு ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்துச் சாஸனங்கள் தமிழ் நாட்டிற் கிடைக்கவில்லை யென்பதை முன்னமே கூறியிருக்கிறோம். ஆயினும் கிரந்தம் தமிழ் முதலிய லிபிகள் பிராமியினின்றுமே வளர்ந்தனவாதலின் அதன் உருவவேறுபாடுகளை நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

பிராமியும் சிறிது சிறிதாக மாறுதல் அடைந்து வந்தாலும் நான்காம் நூற்றாண்டு வரை அதை எழுதுவதில் அதிக வித்தியாசம் ஏற்படவில்லை. அதனால் சுமார் கி.பி. 350 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்த எழுத்துக்கள் பிராமி என்னும் பெயராலேயே இப்போது குறிக்கப்பட்டு வருகின்றன. இவ்வகை லிபியில் பொறிக்கப்பட்டுள்ள சாஸனங்கள் ஆந்திர தேசத்தின் ஒரு பகுதியான வேங்கிநாட்டிற் கிடைக்கின்றன.

தமிழ்நாடு சம்பந்தப்பட்ட வரையில் பின்வரும் பிராமிச் சாஸனங்களை அவ்வகை லிபியின் வளர்ச்சிமுறையைத் தெரிவிப்பனவாகக் கொள்ளலாம். முதன் முதலாக வருபவை அசோக மன்னனுடைய சாஸனங்கள் (பத்தி I). அவற்றிற்கு அடுத்து வருபவை பட்டிப்ரோலுவில் கிடைத்த சாஸனங்கள் (பத்தி II). மூன்றாவதாக, க்ஷத்ரப மன்னர்கள் சாதவாகன மன்னர்கள ஆகியவர்களுடைய காலத்துச் சாஸனங்களைக் கூறலாம் (பத்தி III). அவை சுமார் கி.பி. 200 ஆம் ஆண்டு வரையில் உள்ள காலத்தைச் சார்ந்தவை. நான்காவதாக வருபவை, அமராவதி, ஜக்கய்ய

பேட்டை, நாகார்ஜுனிகொண்டா முதலிய இடங்களிற் கிடைக்கும் சாஸனங்களும் (பத்தி IV), பிராகிருத மொழியில் உள்ள பல்லவ அரசர்களுடைய சாஸனங்களும் (பத்தி V, VI) ஆகும்.

கி.பி. 350 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தைச் சார்ந்த சாஸனங்களின் எழுத்துக்களைப் பழைய கிரந்தம், பழைய கன்னடம் என்பன போன்ற அந்தந்த வகைகளின் பெயர்களால் குறிப்பது வழக்கம். ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்துக்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்த பழைய கிரந்த எழுத்துக்களை VII, VIII ஆம் பத்திகளிற் காணலாம்.

இந்த எழுத்துக்களின் வளர்ச்சி முறையை அறிவதற்காக எழுத்துக்களைத் தனித்தனியாகப் பார்த்து ஒப்பிட வேண்டும். எந்த எந்த சாஸனங்களின் படங்களிலிருந்து இந்த எழுத்துக்கள் பொறுக்கி எடுக்கப்பட்டன வென்பதையும் அவை வெளியிடப்பட்டுள்ள இடங்களையும் கீழே கொடுத்துள்ளோம்.

பத்தி I : அசோக மன்னனுடைய சித்தபுரக் கல்வெட்டு சுமார் கி.மு. 250-ஆம் ஆண்டு (எபிகிராபியா இந்திகா, 2ஆவது வால்யூம்: அசோக சாஸனங்கள், கார்பஸ் இன்ஸ்க்ருப்ஷனம் இந்திகேரம், முதல் வால்யூம்.)

வரி 11 . அசோக மன்னன் காலத்தில் கயையில் வெட்டப்பட்டுள்ள (Trial alphabets) பரீக்ஷார்த்த எழுத்துக்கள் (பீலர் எழுதிய 'இந்திய பிராசீன எழுத்துக்கள்': இந்தியன் ஆண்டிகுவரி 33-ஆவது வால்யூம் அனுபந்தம், பக்கம் 35.)

வரி 49. அசோக மன்னனுடைய கல்ஸி கல்வெட்டு (எபி. இந்., 2-ஆவது வால்யூம்)

வரி 50. வடமதுரையில் கிடைத்த ஸ்தம்பத்தில் உள்ள கல்வெட்டு.

பத்தி II : பட்டிப்ரோலு சாஸன எழுத்துக்கள். சுமார் கி.மு. 200-ஆம் ஆண்டு (எபி. இந். 2-ஆவது வால்யூம்)

வரி 49. காரவேல மன்னனுடைய ஹதிகும்பா சாஸனம்.

வரி 50. பர்ஹூத் ஸ்தூபத்தில் கிடைக்கும் கல்வெட்டுக்கள்.

வடநாட்டுப் பிராமி எழுத்துக்களுக்கும் பட்டிப்ரோலு எழுத்துக்களுக்கும் உள்ள ஒரு முக்கியமான வேறுபாட்டை முன்னமேயே குறித்துள்ளோம்.

பட்டிப்ரோலு எழுத்துக்களின் இதர வித்தியாசங்கள் பின் வருமாறு:

வ (kha. 8) இடதுபுறம் கொக்கியை உடைய ஒரு நேர்கோடாக உள்ளது.

ற (ga. 9) வடநாட்டு எழுத்துக்களில், இரு கோடுகளும் உச்சியில் ஒன்று சேர்ந்து ஒரு கோணத்தைப் பெற்றுக் காணப்படுவது. இவ்விடத்தில் கோணம் மழுப்பப்பட்டு அரைவட்டமாக உள்ளது.

ஃப (gha. 10) வடநாட்டு உருவத்தை விடுத்து வடிவத்துக்கு வலதுபுறமாக ஒரு வளைவை அதிகமாகச் சேர்த்து அமைக்கப்பட்ட புதிய வடிவம்.

ஃ (ca.12) வலதுபுறம் உள்ள நேர்கோடு கீழேயும் இழுக்கப்பட்டுள்ளது.

ஐ (ja. 14, 45) மத்தியில் உள்ள படுக்கைக்கோடு காணப்படவில்லை.

.ҿ (da. 24), ய (dha. 25), ஃ (bha. 30), ஷ(sha) ஆகிய எழுத்துக்கள் இடதுபுறத்திலிருந்து வலதுபுறமாக எழுதுவதற்கு அநுகூலமாகத் திருப்பி எழுதப்பட்டுள்ளன.

8 (ma. 31) தலைகீழாகக் காணப்படுகின்றது.

ஈ (ra. 33) பல வளைவுகளுடைய கோடாக இராமல், ஒரே கோடாக உள்ளது.

ஓ (la.34) வடநாட்டுப் பிராமியினின்றும் மிகவும் வேறுபட்டுள்ளது.

ஃ (ḷa. 40) வடநாட்டில் இல்லாத புதிய வடிவம் தமிழ் நாட்டுப் பிராமியில் காணப்படும் உருவத்தினின்றும் வேறுபட்டுள்ளது.

பத்தி III : க்ஷத்ரப அரசனான ருத்ரதாமனுடைய கிர்நார் கல்வெட்டு- சுமார் கி.பி. 160-ஆம் ஆண்டு.

(பர்ஜஸ் எழுதியுள்ள மேற்கிந்திய புராதனச் சின்ன ஸர்வே அறிக்கை: 2-ஆவது வால்யூம்)

இவ்வெழுத்துக்கள் கத்தியவார்ப் பிரதேசத்தில் கிடைப்பனவாயினும் பிராமியின் தென்னமைப்பைச் சேர்ந்தனவே: வேங்கி நாட்டில் வளர்ச்சி பெற்ற எழுத்துக்களின் வடிவங்களைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. கீழைக்கடற் கரையோரமாகச் சாதவாகனர்களுக்கு ஏற்பட்ட ஆதிக்கமே இவ்வகை வேங்கியில் பிராபல்ய மடைந்ததற்குக் காரணம்போலும்.

ஊ (1), ஞு (2), ஈ (7), ஞ (ña. 16) ர (ra. 33) ஆகிய எழுத்துக்கள், உயிர்மெய்யெழுத்துக்களின் உகர ஊகாரக்குறிகள் ஆகியவற்றின் நேர்கோடு நீட்டப்பட்டு, உட்புறமாக வளையும் ஒரு சிறிய கொக்கியை நுனியில் கொண்டுள்ளது.

ல (ḍa. 19)இதன் முதுகு வட்டமாகக் காணப்படுகின்றது.

ஸ (ba. 29) இதன் இடதுபுறத்துக் கோடு நடுவில் ஒரு பள்ளத்தைக் கொண்டுள்ளது.

ஜ (34) வலதுபுறக்கோடு சிறிது இடதுபுறம் சாய ஆரம்பித்துவிட்டது.

வ (pa. 27) ஹ (39) முதலிய மேல்புறம் வாய் திறந்துள்ள எழுத்துக்கள் இடதுபுறம் வயிறு பருத்து எழுதப்பட்டுள்ளன.

பத்தி IV : இக்ஷ்வாகு வமிசத்து அரசனான ஸ்ரீ வீரபுருஷதத்தனுடைய நாகார்ஜுனிகொண்டா கல்வெட்டுக்கள் (எபி. இந். 20-ஆவது வால்யூம்) சுமார் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதி.

வரி. 49. அல்லூரு சாஸனம் (சென்னை சிலாசாஸன இலாகாவின் 1924-ஆம் ஆண்டு அறிக்கை.)

இவ்வெழுத்துக்கள் நன்கு வளர்ச்சி பெற்றுக் காணப்படுகின்றன. அக்காலத்தில் இரண்டு வகை எழுத்துக்கள் வழங்கிவந்தன. பார்வைக்கு அழகாக, நேர்கோடுகள் மிகவும் நீளமாக எழுதப்பட்டு முதல் 40 வரிகளில்

படம் 2—தற்கால வடிவம்





படம் - 2



காணப்படும் வகை ஒன்று. அவ்வளவு சித்திரிக்கப்படாமல், சதுரத்துக்குள் அடங்கும்படியாக எழுதப்பட்டுள்ள வகை மற்றொன்று. (45-ஆவது முதல் உள்ள வரிகளில்.) நாம் மேலே கூறியபடி இவ்வெழுத்துக்கள் கிர்நார் எழுத்துக்களைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. அவ்விடத்தில் நாம் குறித்துள்ள நேர்கோடுகளும் (வரிகள் 1, 2, 7, 16, 27, 31, 33), உயிர் மெய்யெழுத்துக்களின் இகரக்குறிகளும் (வரிகள் 9, 15, 17), ஜ (jha - 15) என்னும் எழுத்தின் நேர் கோடும், மிகவும் நீளமாக எழுதப்பட்டிருப்பதுடன், நுனியில் கொக்கியையும் கொண்டுள்ளன. அக்கொக்கிகள் சில சமயங்களில் சிறிய சுழிகளாக உட்புறமாகவோ வெளிப்புறமாகவோ எழுதப்படுவதும் உண்டு.

ஓ (34) வலதுபுறக்கோடு அதேபோல் நீட்டப்பட்டுள்ளது.

த (22) ந (26) ஆகிய இரண்டு எழுத்துக்களுக்கும் வேறுபாடு காணப்படவில்லை.

கு (47), து (48) ஆகியவற்றின் உகரக்குறி நேர்கோடாக இல்லாமல் வலதுபுறம் வளைந்துள்ள கோடாக அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது.

ஐ (3, 46) இரண்டு விதமான வடிவங்கள் கொண்டுள்ளது. 46-ஆவது வரியில் உள்ள உருவத்தில், புள்ளிக்குப் பதிலாக ஓர் இளம்பிறை வடிவம் காணப்படுகின்றது. இதுவே பிற்காலத்திய வடிவத்துக்கு ஆதாரம்.

ஜ (14, 45) இந்த எழுத்துக்கும் இரு வடிவங்களைக் காண்கிறோம். பிந்தியது பட்டிப்ரோலு வகையைச் சார்ந்தது என்று தோன்றுகின்றது.

ஞ(49) இது வடநாட்டுப் பிராமியில் காணப்படாத வடிவம். II-ஆவது பத்தியில் காணப்படும் உருவத்துக்கும் இதற்கும் ஒருவித சம்பந்தமும் கிடையாது. திரிசூலம் போன்றுள்ள இதுவே வட்டெழுத்தில் காணப்படும் ஐகாரவடிவம் ஆகும்.

பத்தி V : இதுவும் இதற்கு அடுத்த பத்தியும் ஒரே அரசனான பல்லவ சிவஸ்கந்தவர்மனுடைய காலத்தைச் சார்ந்த இருவேறு சாஸனங்களின்

எழுத்துக்களைக் காட்டுவன. ஆயினும் இவையிரண்டும் இருவேறு வகைகளாகும். இந்தப் பத்தியில் உள்ள எழுத்துக்கள் மயிதவோலுச் செப்பேடுகளினின்றும் எடுக்கப்பட்டவை. இதன் காலம் சுமார் கி.பி. 300 ஆம் ஆண்டு (எபி. இந். 6-ஆவது வால்யூம்).

வரி 6, 10, 20, 28, 47, 48. பிரஹத்பாலாயன வமிசத்து அரசனான ஜயவர்மனுடைய கொண்டமுடிச் செப்பேடுகள் (ஷெ).

இவ்வெழுத்துக்கள் பட்டிப்ரோலு வகையைச் சார்ந்தவை என்று கூறலாம்.

வஈ (e-5.) எகரத்தின் தமிழ் வடிவத்தைப்போல உள்ளது.

ஜ (14, 45.) நாகார்ஜுனிகொண்டாவில் உள்ளதைப் போல இவ்விடத்திலும் இரண்டு வகைகள் உண்டு.

ஸ (38) ஒன்றின் கீழ் ஒன்றாக அமைந்துள்ள இரண்டு வளைந்த கோடுகளால் ஆகியது.

ச (ma - 31) இதுவும் இருபாகங்களாக உள்ளது. மேலே 'ஸ' வுக்கு உள்ளதைப் போன்ற ஒரு வளைவையும் அதன் கீழே வலதுபுறம் ஆரம்பித்து மறுபடியும் அங்கேயே வந்துசேரும் முக்கோணம் போன்ற ஒரு சுழியையும் கொண்டது.

ஹ (39) பிராமியில் வலதுபுறம் காணப்படும் கோடும் கொக்கியும் இங்கே அடிப்புறமாகக் காணப்படுகின்றன.

ഄ (ḍa - 19), ஓ (ḍa - 24), ஐ(26), ண ஆகியவை ஒரேவிதமாக எழுதப்பட்டுள்ளன: இடத்தைக்கொண்டே எந்த எழுத்து என்று நிச்சயிக்க வேண்டும்.

பத்தி VI : ஹீரஹடகள்ளிச் சாஸனம் (எபி. இந். முதல் வால்யூம்.) இவ்வகை மிகவும் வட்டமாக உள்ளது.

ெோ (34) என்பதில் ஒகரக்குறி ஒரு சுழியாக அமைந்திருக்கின்றது.

(Śa - 36) என்பதில் நடுக்கோடு படுக்கைக்கோடாக மாற்றப்பட்டு இடதுபுறம் உள்ள கோட்டுடன் ஒட்டப்பட்டுள்ளது.

 (ṇḍam - 41) என்பதில் டவுக்கு ஒரு வால் காணப்படுகின்றது.

பத்தி VII : பல்லவ அரசனான ஸிம்ஹவர்மனுடைய பிகிராச் செப்பேடுகள். (எபி. இந். 8-ஆவது வால்யூம்) சுமார் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்தவை.

வரி 1, 4, 5. பல்லவ யுவமஹாராஜா விஷ்ணுகோபவர்மனுடைய உருவப்பள்ளிச் செப்பேடுகள் (இ. ஆ. 5-ஆவது வால்யூம்)

வரி 8, 11, 40. பல்லவ ஸிம்ஹவர்மனுடைய மாங்களூர்ச் செப்பேடுகள் (ஷை).

வரி 6. பல்லவ ஸிம்ஹவர்மனுடைய ஓங்கோடுச் செப்பேடுகள் (எபி. இந். 15-வது வால்யூம்)

இவ்வகை பெட்டித்தலை (Box-headed) எழுத்துக்கள் என்று கூறப்படும் தக்காணத்து வகையை ஒரு சிறிது ஒட்டினாற்போலச் சதுரமாக எழுதப் பட்டும், தலைப்பில் கொண்டை யுடனும் காணப்படுகின்றது. (முக்கியமாக உருவப்பள்ளிச் செப்பேடுகளைப் பார்க்க.)

த(22) அடியில் சுழியுடனும், ந (26) சுழியில்லாமலும் எழுதப்பட்டு வந்தன. சில சமயங்களில் இரண்டும் ஒரேவிதமாகச் சுழித்து எழுதப் படுவதும் உண்டு.

(tha. 23) நடுப்புள்ளியைக் கொக்கிபோல மாற்றி அதை வலது புறத்துக் கோட்டுடன் சேர்த்து எழுதப்பட்டது.

(Śa. 36) ஷ (37) நடுக்கோடு வலதுபுறத்துக் கோட்டுடன் ஒட்டப்பட்டு ஒரு சிறிய கொக்கியைப்போல் மாறியது.

மொழிக்கு இறுதியில் வரும் மகர ஒற்று (ꞓ) மிகச் சிறிய வடிவமாக வரி 47ல் உள்ளதைப் போலக் காணப்படுகின்றது. உயிர்மெய்யெழுத்துக்களில்,

இகரக்குறி (8) ஒரு முழு வட்டமாகவும் ஈகாரக்குறி (32) உள்ளே ஒரு சுழியைக் கொண்ட வட்டமாகவும் உள்ளன.

உகர 9, 42 ஊகாரக் குறிகள் 40, 43 ஒவ்வொன்றும், இரண்டு விதமாக எழுதப்பட்டன.

பத்தி VIII : பல்லவ அரசனான குமாரவிஷ்ணுவின் செந்தலூர்ச் செப்பேடுகள் (எபி. இந். 8-ஆவது வால்யூம்). சுமார் ஆறாம் நூற்றாண்டின் தொடக்கம்.

வரி 2, 6, 8, பல்லவ ஸ்கந்த வர்மனுடைய ஓங்கோடு செப்பேடுகள் (எபி. இந். 15-ஆவது வால்யூம்)

எழுத்துக்களுக்கு இடப்பட்ட தலைக்கட்டு இவ்விடம் காணப்படவில்லை. இவ்வெழுத்துக்கள் பெரும்பாலும் தமிழ் நாட்டிற் கிடைக்கும் பல்லவ கிரந்த எழுத்துக்களையே ஒத்திருக்கின்றன.

ச (1), ஆ (2), ஐ (7), ர (33, 14), உயிர் மெய்யெழுத்துக்களின் உகரக்குறி (40, 42; 45) ஆகியவற்றின் நேர்கோடு இரட்டிக்கப்பட்டு விட்டன. எகரத்தின் வலதுபுறக் கோடு பிறை போல வளைவுபெற்றுக் காண்கிறது.

ஷ (45) ஷ (37), ஜ (39) என்பன போன்ற எழுத்துக்களில் இடதுபுறமாகக் காணப்பட்ட வயிறு சற்று உள்ளடங்கியே இருக்கின்றது.

இதுகாறும் நாம் கூறியவற்றால், இவ்விடைப்பட்ட காலத்துச் சாஸன எழுத்துக்களின் வளர்ச்சி முறையில் பின்வரும் முக்கிய அம்சங்கள் விளங்கும்.

(1) எழுத்துக்களின் தலைப்புறம் சிறிது தடித்து எழுதப்படலாயிற்று. இப்பழக்கம் அசோக சாஸனங்களில் அதிகம் காணப்படவில்லை. இதுவே பிற இடங்களில் தலைக்கட்டாக மாறியது.

(2) எழுத்துக்களை இடதுபுறமிருந்து வலதுபுறமாகவே எழுத ஆரம்பித்ததால், எழுத்துக்களின் வரிவடிவங்களில் சில மாறுதல்கள் செய்யப்பட்டன. அவையாவன:

(i)  (e), (da), (dha), ஷ என்பன போன்ற எழுத்துக்களை முழுமையும் திருப்பி எழுதியது.

(ii) (Śa) ஷ என்பன போன்ற எழுத்துக்களில் சில பாகங்களை மட்டில் மாற்றி எழுதியது.

(3) (pa), , , ஆகிய எழுத்துக்களில் உள்ள நேர்கோடுகள் ஒரே உயரமானவைகளாக இல்லாமையால் அவற்றைச் சமம் ஆக்கியது.

(4) , , , என்பன போன்ற எழுத்துக்களில் நேர்கோடுகளை மிகவும் நீட்டி நுனியில் ஒரு வளைவுடன் எழுதியது. இதுவே பிற்காலத்தில், அவை இரட்டைக் கோடுகளாக அமைவதற்கு அனுகூலமாக இருந்தது.

(5) ,  முதலிய மேல்புறம் வாய்திறந்த எழுத்துக்களுக்கு இடதுபுறம் வயிறு பருத்து எழுதப்பட்டது.

(6) (i), (ṭha) என்னும் எழுத்துக்களில் வரும் புள்ளிகளைச் சிறு சுழிகளாக மாற்றி அவற்றை வலதுபுறம் வரும் கோடுகளுடன் ஒட்டியது.

(7) உயிர்மெய்யெழுத்துக்களில் வரும் இகர உகரக்குறிகளை முறையே மேலேயும் கீழேயம் நன்றாக நீட்டி அவற்றின் நுனியையும் கொக்கிபோல அமைத்தது.

தெலுங்கு நாட்டில் கிடைக்கும் பிராமிச் சாஸனங்களிலும் வடநாட்டுப் பிராமியிற் கிடைக்காத சில புதிய வடிவங்கள் கிடைக்கின்றன. அவற்றுள் முக்கியமானது ஐகாரக் குறியேயாகும்.

5

கிரந்த எழுத்துக்கள்

பொதுவாக நோக்குமிடத்துத் தமிழும் கிரந்தமும் ஒரேவிதமாகக் காணப்படும் என்பதை முன்னமே கூறியுள்ளோம். அதனால் இவ் விருவகை லிபிகளும் வளர்ச்சி பெற்ற முறை ஒரே விதமான்து என்பதை நாம் அறியலாம். கிரந்த எழுத்துக்களின் வளர்ச்சியை நாம்முதலில் கவனிப்போம்.

தமிழ்நாட்டில் வடமொழியை எழுதுவதற்குப் பழைய காலம் முதலாக உபயோகிக்கப்படும் லிபியே **கிரந்தம்** எனப்படும். வடமொழியில் கிரந்தம் என்னும் சொல் நூலைக் குறிக்கும். வடமொழி நூல்களை எழுதுவதற்கு உபயோகித்த லிபியையும் தமிழ் மக்கள் கிரந்தம் எனவே வழங்கி வந்தார்கள் போலும்.

ஒரு காலத்தில் இந்த லிபி தென்னிந்தியா முழுமையிலும் வழக்கில் இருந்துவந்தது. மலையாளத்தவர்கள் தங்கள்மொழியில் வடமொழிச் சொற்களை அதிகமாகக் கலந்து மணிப்பிரவாளமாகச் செய்த பின்னர், அவர்கள் இந்த லிபியையே சிறிதுமாற்றி 'ஆர்ய எழுத்து' என்று பெயரிட்டுத் தங்கள் மொழிக்கு அமைத்துக் கொண்டார்கள். துளுலிபியும் அதே போலக் கிரந்தத்திலிருந்து உண்டானதே .

மலையாளமும் துளுவும் தனி லிபிகளாக அமைந்த பின்னர், கிரந்தம் தமிழ்நாட்டில் மட்டும் வழங்கி வருகிறது. வடமொழிக்கு இப்பொழுது வழங்கிவரும் நாகர லிபி விஜயநகர மன்னர்கள் காலத்திலிருந்துதான்

தமிழ்நாட்டில் பிரபலமாக வழங்க ஆரம்பித்தது. ஆயினும் அக்காலத்தில் கிரந்தமும் மறைந்துவிடல்லை. தமிழ்நாட்டின் தென்பாகங்களில் கிரந்தமே அதிகமாக வழக்கில் இருந்தது. விஜயநகர மன்னர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட வடபாகத்தில்தான் நாகரலிபியில் சாஸனங்கள், முக்கியமாகச் செப்பேடுகள், எழுதப்பட்டு வந்தன. மஹாராஷ்டிரர்கள் தமிழ்நாட்டிற்கு வந்த பிறகு அவர்கள் நாகர லிபியையே பெரிதும் போற்றி வந்தார்கள். இப்பொழுது கிரந்தலிபி அநேகமாய் மறைந்துகொண்டே வருகிறது என்று கூறலாம்.

தமிழ்நாட்டிற் கிடைக்கும் கிரந்த எழுத்துக்களை அவற்றின் வளர்ச்சியைக் கொண்டு பழையகாலம், வரிவடிவம் வேறுபடும் காலம், மத்தியகாலம், தற்காலம் என நான்கு பிரிவுகளாக வகுக்கலாம்.

i. *பழையகால எழுத்துக்கள்* (Archaic variety) சுமார் கி.பி.700-ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்தவை. இவை வேங்கி நாட்டிற் கிடைக்கும் பழைய கிரந்த வகையைச் சார்ந்தனவே. பல்லவ அரசர்களுள் மஹேந்திரவர்மன் வமிசத்தைச் சேர்ந்தவர்களுடைய சாஸனங்களே இவ்வகையிற் கிடைப்பன. I, II, III, V பத்திகளில் உள்ள எழுத்துக்கள் இந்த வகையைச் சேர்ந்தவை.

இவ்வகை பெரும்பாலும் சித்திரித்தே எழுதப்பட்டுள்ளன. இப்படிச் சித்திரிக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் சாதாரணமாகத் தினசரிப் பழக்கத்தில் இருந்திருப்பதற்கில்லை. இவை சாஸனங்களைப் பொறிப்பதற்கே உபயோகப்பட்டு வந்தனபோலும்.

பத்தி I: இதுவும் இதற்கு அடுத்தபத்தியும், பல்லவ மஹேந்திரவர்மன் காலத்தை, அதாவது கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முதற்பாதத்தைச் சார்ந்தவை. அவன்காலத்தில் இரண்டுவகை எழுத்துக்கள் வழக்கி லிருந்தன. ஒன்று சாதாரணமானது; மற்றொன்று சித்திரிக்கப்பட்டது. இந்தப் பத்தியில் உள்ள எழுத்துக்கள் சாதாரணமான வகையைச் சார்ந்தவை: மண்டகப்பட்டு (எபி. இந். 18-வது வால்யூம்), மஹேந்திரவாடி (ஷெ - 4-

வது வால்யூம்), சீயமங்கலம் (ஷை - 6-வது வால்யூம்), தளவானூர் (ஷை - 12-வது வால்யூம்) ஆகிய ஊர்களில் உள்ள கல்வெட்டுக்கள் இவ்வகை யெழுத்துக்களாகும்.

பத்தி II : இது சித்திரிக்கப்பட்ட வகை: திருச்சிராப்பள்ளி மலைக் கோயில் கல்வெட்டு எழுத்துக்களைக் காட்டுகின்றது. (தென்னிந்திய சாஸனங்கள், மூலம்: முதல் வால்யூம், படம்: இரண்டாம் வால்யூம்; புதுச்சேரி டாக்டர் ழுவோ துப்ராய் எழுதிய 'பல்லவர் கோயில்கள்' முதல் வால்யூமும் பார்க்க.)

பத்தி III : மாமல்லபுரம் தர்மராஜ ரதத்தில் காணப்படும் கல்வெட்டு எழுத்துக்கள் (எபி.. இந். 10-வது வால்யூம்) கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இரண்டு, மூன்றாம் பாதங்களில் ஆண்டு வந்த வாதாபி கொண்ட பல்லவ நரஸிம்ஹவர்மன், அவன் மகன் பரமேச்வரவர்மன் ஆகியவர்கள் காலத்தைச் சார்ந்தவை. இந்த வகையில் வளைந்த கோடுகள் காணப்படவில்லை. அநேகமாக எல்லா எழுத்துக்களும் நேர்கோடுகளாலேயே ஆனவை.

பத்தி V : பல்லவ அரசனான ராஜஸிம்ஹனுடைய கைலாஸ நாதர் கோயில் கல்வெட்டு (தென்னிந்திய சாஸனங்கள், மூலம்: முதல் வால்யூம் , படம்: இரண்டாம் வால்யூம்), மாமல்லபுரம் கல்வெட்டு (எபி. இந். 19-வது வால்யூம்) ஆகியற்றின் எழுத்துக்களைக் காட்டுகின்றது.

காலமுறையில் இவ்வெழுத்துக்கள் IV பத்தியில் காட்டப்பட்டுள்ள கூரம் செப்பேடுகளின் எழுத்துக்களுக்குப் பிற்பட்டன வாயினும், இவை பழைய வடிவங்களையே காட்டுகின்றன. இராஜஸிம்ஹன் காலத்தில் நான்கு வகை எழுத்துக்கள் வழக்கில் இருந்தன என்பது காஞ்சீபுரம் கைலாஸநாதர் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களால் தெரியவருகின்றது. அந்தக்கோயிலைச் சுற்றி ஒரு சாஸனம் நான்குவகை எழுத்துக்களால் நான்கு தடவை பொறிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் ஒன்று நாகரலிபியைச் சார்ந்தது. மற்றவை, கிரந்த லிபியில் சாதாரண வகை சித்திரிக்கப்பட்டவகை

ஆகியவற்றால் ஆனவை. அவன் காலத்தில் சித்திர எழுத்துக்களிலே இரண்டுவகைகள் இருந்தன. அவற்றுள் முக்கியமாக ஞ (10, 46), ஜ(15, 17) ண(20, 22), ஸ (30,49), ம (37, 47) ஆகிய எழுத்துக்கள் எழுது முறையில் ஒன்றற்கொன்று வேறுபடும்.

இராஜஸிம்ஹன் காலத்துக்குப் பிறகு இவ்வகை எழுத்துக்கள் காணப்படவில்லை. இவ் வகையில் வ(5), உ(13), வ (36) ஆகிய எழுத்துக்கள் சற்றேறக்குறைய ஒரேவிதமாக எழுதப்பட்டு உள்ளன. சித்திரிக்கப்பட்ட இவ்வகை வழக்கொழிந்ததற்கு ஒரே வடிவத்தாற் பல எழுத்துக்களை எழுதிவந்ததும்ஒரு காரணம் போலும்.

பழைய காலத்துக் கிரந்த எழுத்துக்களின் முக்கிய அம்சங்களாவன:

1. அ (1); ஆ (2), க(8), ர (34) ஆகிய எழுத்துக்களின் நேர்கோடுகளும், உயிர்மெய்யெழுத்துக்களின் உகரக் குறிகளும் (II-18, 27) நன்கு இரட்டிக்கப்பட்டுவிட்டன.

2. ஜ : மூன்று புள்ளிகளாலான இவ்வுருவத்தின் மேற்புள்ளி இடது புறம் ஒரு சுழியைக் கொண்ட வளைந்த படுக்கைக் கோடாக மாறியது (II-3). அந்தக் கோட்டை இழுத்து அடிப் புள்ளிகளில் இடதுபுறம் உள்ளதுடன் சேர்த்து. (VI -47) பிறகு வலது புள்ளியையும் சேர்த்து (VII - 3) அமைக்கப்பட்டதே இப்பொழுதுள்ள வடிவம். ஆனால் பழைய கிரந்தத்தில் (2-வது படத்தில் III - 47 -வரியில் காண்பிக்கப்பட்ட உருவம்போல) இடதுபக்கம் இரண்டு புள்ளிகளைக் கொண்டுள்ள ஒரு கோடாகவும், அவ்விரு புள்ளிகளுள் மேலே உள்ளது அக்கோட்டுடன் சேர்க்கப்பட்டும் காணப்படுகின்றது.

3. வ (9) அடிப்புறமாக இடது பக்கத்தில் ஒரு சுழியைப் போல அமைக்கப்பட்டுள்ள வயிறு காணப்படுகின்றது.

4. ஊ (5 - I, V.), ய (24 - I, III, V) ஆகிய எழுத்துக்களின் மேற்புறம் சிறியவாக வாய் திறக்கப்பட்டுள்ளன.

5. உயிர்மெய்யெழுத்துக்களில் ஆ, (I - 17, 18), எ (II -23), ஐ (II - 37) ஆகியவற்றின் குறி தனியாகப் பிரிக்கப்பட்டு, மெய்யெழுத்து வடிவத்தை ஒட்டியே எழுதப்பட்டு வந்தது.

6. உயிர்மெய்யெழுத்துக்களின் ஆகாரக்குறி, மெய்யெழுத்து வடிவத்துக்கு வலதுபுறமாகக் கீழ்நோக்கிச் செல்லும் வளைவுகளையுடைய கோடாகவும் (II -24, 41), மேல்நோக்கிச் செல்லும் வளைவுகளையுடைய கோடாகவும் ஆக இருவிதமாய் எழுதப்பட்டு வந்தது. மேல் நோக்கிச் செல்லும் கோட்டிற்கும், அடியில் இடதுபுறம்மட்டிலோ (V - 8-20) அல்லது இரு புறங்களிலுமோ (V-18) ஒரு சிறிய கொக்கிபோன்ற வடிவம் காணப்படும்..பல சமயங்களில் இவ்வகைகள் கலந்தே எழுதப்பட்டு வந்தன.

(7) உயிர்மெய்யெழுத்துக்களின் ஈகாரக் குறி இடதுபுறம் ஒருசுழியைக் கொண்ட ஓர் அரைவட்டமாக மாறியது. (III-44).

ii. ***வரிவடிவம் வேறுபடும் காலத்து எழுத்துக்கள்*** (Transitional variety) சுமார் கி.பி. 650-ஆம் ஆண்டிலிருந்து சுமார் கி.பி. 950-ம் ஆண்டு வரையில் உள்ள காலத்தைச் சார்ந்தவை. பொதுவாக, பல்லவ அரசர்களுள் நந்திவர்மன் வமிசத்தார்கள், பாண்டியர்களில் முதல் ஸாம்ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள்,சோழர்களில் பாண்டியர்களை வென்று அடிப்படுத்திய சுந்தரசோழன் காலத்துக்கு முன்பு ஆண்ட அரசர்கள் ஆகியவர்களுடைய சாஸனங்களிற் காணப்படும் எழுத்துக்கள் இவ்வகையாகும். IV, VI முதல் IX வரையில் உள்ள பத்திகளின் எழுத்துக்கள் இவ்வகையைக் காட்டுவனவாகும். இவ்வகை எழுத்துக்கள் ஓலையில் எழுத்தாணிகொண்டு எழுதுவதற்கே உபயோகமானவை போலத் தோற்றுகின்றன.

பத்தி IV : பல்லவ அரசனான பரமேச்வரவர்மனுடைய கூரம், செப்பேடுகள் (தென்னிந்திய சாஸனங்கள், மூலம் : முதல் வால்யூம், படம், இரண்டாம் வால்யூம். எபி. இந். 17-வது வால்யூமும் பார்க்க.) இதன் காலம் சுமார் 680 -ஆம் ஆண்டு.

இதில் உயிர்மெய்யெழுத்தின் ஆகாரக்குறி (18, 32) இரண்டு விதமாகவும் எழுதப்பட்டுக் காணப்படுகின்றது.

பத்தி VI : பல்லவமல்லனான நந்திவர்மனுடைய கசாக்குடிச் செப்பேடுகள் (தென்னிந்திய சாஸனங்கள், இரண்டாம் வால்யூம்) சுமார் கி.பி. 750-ம்ஆண்டு. இதுவும் ஒருவகையில் அலங்கரிக்கப்பட்ட எழுத்து என்றே கூறவேண்டும்.

பத்தி VII : அதே அரசனுடைய தண்டந் தோட்டம் செப்பேடுகள் சுமார் கி.பி. 780-ம் ஆண்டு. (ஷை)

பத்தி VIII : இதுவும் இதற்கு அடுத்த பத்தியும் அதே காலத்தில் மதுரையினின்றும் ஆண்டுவந்த பாண்டிய மன்னனான ஜடிலவர்மன் பராந்தகனுடைய காலத்தைச் சார்ந்த இருவேறு சாஸன எழுத்துக்களைக் காட்டுகின்றன. இந்தப் பத்தியில் உள்ளவை வேள்விக்குடிச் செப்பேடுகளினின்றும் எடுத்தவை. (எபி. இந். 17வது வால்யூம்.) உபத்மாநீயம் (44), ஜிஹ்வாமூலியம் (45), மகரக்குறுக்கம்போன்று ஒலிக்கும் அநுநாஸிகை (43) ஆகியவற்றுக்குக் காணப்படும் உருவங்கள் கவனிக்கத்தக்கவை.

பத்தி IX : அதே அரசனுடைய சென்னைக் கண்காட்சிச்சாலை (வேலங்குடி)ச் செப்பேடுகள் (இந். ஆண். 22-வது வால்யூம்)

கூரம் செப்பேடுகளில் (பத்தி IV) உ (4), ஊ (5), ஐ (15), ண (22), வ(30) ஶ(31), ஸ (39) ஆகிய எழுத்துக்கள் மிகவும் வளர்ச்சி பெற்றுக் காணப்படுகின்றன. மஹேந்திரவர்மன் காலத்துக்கும் பரமேச்வரவர்மன் காலத்துக்கும் இடைப்பட்ட சுமார் ஐம்பதுஆண்டுகளுக்குள் இவ்வேறுபாடுகள் ஏற்பட்டிருப்பதற்கில்லை. எழுத்துக்களின் வளர்ச்சிமுறையை நாம் நன்கு கவனித்தால், மஹேந்திரவர்மன் காலத்து எழுத்துக்கள் வேறுபாட்டைப் பெற்று இந்த உருவங்களை அடைவதற்குக் குறைந்தது ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலமாவது வேண்டும் என்பது தெரியவரும். அன்றி, இவ்வகை வேங்கி நாட்டில் கிடைத்த எழுத்துக்களைப் போல்

அல்லாமல், தமிழ் எழுத்துக்களின் முறையைப் பின்பற்றி வளர்ந்துள்ளன. முக்கியமாக உ, ண, ய முதலிய எழுத்துக்களை அங்ஙனம் கூறலாம். ஆதலின் இவ்வகை எழுத்துக்களைத் தமிழ்நாட்டிலேயே பழைய காலத்திலிருந்து தனியாக வளர்ந்து வந்த ஒருவகையாகக் கூறலாமோ என்றும் தோன்றுகின்றது. ஆயினும், இப்பொழுது உள்ள ஆதாரங்களைக் கொண்டு, இந்தவகை பிராமியினின்றோ பழைய கிரந்தத்தினின்றோ எப்பொழுது பிரிந்தது என்பதை நாம் நிச்சயமாகக் கூறமுடியாது.

இந்தவகையின் முக்கிய அம்சங்களைப் பின்வருமாறு கூறலாம்:

(1) எழுத்துக்கள் இடதுபுறத்திலிருந்து வலதுபுறமாகச் செல்லும் ஒரே கோட்டால் அமைந்தன.

(2) ஐ (3) அடிப்புறத்தில் ஒருபடுக்கைக் கோடு இழுக்கப்பட்டு மூன்றாவது புள்ளியும் மறைந்தது.

(3) ண (5) மேற்புறம் வாய் நன்கு திறந்து வட்டமாக எழுதப்பட்டது.

(4) வ (9) வலதுபுறத்தில் வயிறு திறந்துவிடப்பட்டது.

(5) ஒ (10), ம (37) ஆகிய எழுத்துக்களின் இடது பக்கக் கோட்டுடன் அடியிலிருந்து மேல்புறம் நோக்கி வளைந்து இழுக்கப்பட்ட மற்றொரு கோடும் சேர்க்கப்பட்டது.

(6) ஊ (14) இதன் அடியில் உள்ள கொக்கி பிரிக்கப்பட்டதுடன் வ (13) ஊ (14) ஆகிய எழுத்துக்களின் வயிறு வலது புறம் வாய்திறந்து விடப்பட்டது. அன்றி, வயிறு இடதுபுறம் கூர்மையான கோணத்தைக் கொண்டுள்ளது.

(7) ஐ (12) ஜ (15) ஞ (30) ஆகிய எழுத்துக்களின் இடது புறக்கோடு போய்அதற்குப்பதிலாக மேற்கோட்டின் இடதுபுறத்தில் ஒரு சிறிய கொக்கி அமைக்கப்பட்டது. தலைக் கோட்டின் வலதுபுறமும்,

அடிக்கோட்டின் இடதுபுறமும் ஒரு குறுக்குக் கோட்டால் சேர்க்கப்பட்டுள்ளது.

(8) ய (24) வலதுபுறக்கோட்டில் ஒட்டப்பட்ட சிறிய சுழி அக்கோட்டின் நுனிக்கு மாற்றப்பட்டு, ஒரு சிறிய கொக்கியாக அமைந்தது.

(9) ய (26) மேல்புறம் வாய் திறந்துள்ளது.

(10) ஐ (31) எழுத்தின் மத்தியில் மேலேயிருந்த நேர்கோடு இடதுபுறத்துக்கு மாற்றப்பட்டு விட்டது.

(11) வ (36) மேல்புறம் வாய் திறக்கப்பட்டுள்ளது.

(12) ண (22) ஒரே கோட்டால் எழுதப்பட்டு மூன்று சுழிகளைக் கொண்டதாக அமைந்தது.

(13) ட (18), ப (20) ம (25) ஆகிய எழுத்துக்களின் முடிவில் வால் ஒட்டப்பட்டது.

(14) ல (21) இதன் அடிக்கோடு நடுவில் ஒரு நல்ல வளைவை அடைந்து இருபாகங்களாகக் காணப்படுகின்றது.

(15) ஷ (38) வலதுபுறக் கோட்டில் ஒட்டப்பட்டிருந்த சுழி அக்கோட்டின் நுனியில் வெளிப்புறமாக மாற்றப்பட்டு விட்டது.

(16) ஸ (39) இடதுபுறத்து மேல்கோடு முதலில் எழுதப்பட்டு எழுத்தின் பிறபாகங்கள் அதனுடன் ஒட்டப்பட்டு இந்த உருவத்தை யடைந்தது.

(17) ஹ (40) அடிக்கோட்டின் வளைவு நீங்கிச் சமமாக ஆகியது. இது சற்றேறக்குறைய ஐ (31) என்னும் எழுத்தின் உருவத்தையே ஒத்திருக்கிறது. இவ்விரண்டுக்கும் உள்ள வித்தியாசம்: ஐ சிறிது வலதுபுறம் சாய்ந்து நடுக்கோடு குட்டையாகக் காணப்படும். ஹ படுக்கையாக எழுதப்பட்டு நடுக்கோடு நீண்டு இருக்கும். சில சமயங்களில்

இவ்விரண்டும் ஒரேவிதமாக எழுதப்படுவதும் உண்டு.

(18) வாக்கியங்களின் முடிவில் வரும் தனி மெய்யெழுத்துக்களைக் குறிக்க மெய்யெழுத்தின் தலைப்பிலோ, வலது புறத்திலோ புள்ளியிடப் பட்டுக் காணப்படுவது. (43, 45 வரிகளில் வரும் ச், 44-ம் வரியில் வரும் ழ் ஆகியவற்றைப் பார்க்க.)

(19) எழுத்துக்களின் ஆரம்பத்தில் மேலிருந்து கீழ்நோக்கி வரும் கோடுகளின் தலைப்பில் காணப்பட்ட தடித்தபாகம், இடது புறம் நோக்கும் ஒரு சிறிய கோடாகவோ, கொக்கியாகவோ எழுதப்பட்டுள்ளது.

(20) உயிர்மெய்யெழுத்துக்களின், ஆ, எ, ஐ, ஒ, ஔகாரக் குறிகள் மெய்யெழுத்துக்களினின்றும் நன்கு பிரிக்கப்பட்டன.

(21) உயிர்மெய்யெழுத்தின் ஔகாரக்குறியின் வலதுபாகம் (IX - 25 ; VIII - 31) ஒரு தனி உருவமாக அமைக்கப்பட்டது.

iii. ***மத்தியகாலத்து எழுத்துக்கள்*** (Middle variety) சுமார் கி.பி. 950-ம் ஆண்டிலிருந்து சுமார் 1250-ம் ஆண்டு வரையில் உள்ள காலத்தைச் சார்ந்தவை. தஞ்சையிலிருந்து பெரும்புகழுடன் ஆண்ட சோழ அரசர்களுடைய காலத்துச் சாஸனங்கள் இவ்வகையைச் சார்ந்தவை. X முதல் XIV வரையில் உள்ள பத்திகள் இந்த வகை எழுத்துக்களைக் காட்டுவன.

பத்தி X : சுந்தர சோழனுடைய அன்பில் செப்பேடுகள். (எபி. இந். 15-வது வால்யூம்) சுமார் கி.பி. 960-ம் ஆண்டு.

பத்தி XI : சுமார் பத்தாம் நூற்றாண்டின் மத்தியைச் சார்ந்தன வென்று கூறக்கூடியவை; பாண்டிய மன்னனான ராஜஸிம்ஹனுடைய பெரிய சின்னமனூர்ச் செப்பேடுகள். (தென்னிந்திய சாஸனங்கள்: மூன்றாம் வால்யூம், நான்காவது பாகம்.)

பத்தி XII : ராஜராஜசோழன் காலத்தைச் சார்ந்த காஞ்சீபுரத்துக் கல்வெட்டு. (சக 993) கி.பி. 1001-2-ம் ஆண்டு (எபி. இந். 21-வது 'வால்யூம்.)

பத்தி XIII : ராஜேந்திரனுடைய திருவாலங்காட்டுச் செப்பேடுகள் சுமார் கி.பி. 1025-ம் ஆண்டு (தென்னிந்திய சாஸனங்கள், மூன்றாம் வால்யூம், மூன்றாம் பாகம்.)

பத்தி XIV : விக்கிரம சோழனுடைய செவிலிமேட்டுக் கல்வெட்டு. கி.பி. 1134-ம் ஆண்டு (எபி. இந். 6-வது வால்யூம்.)

இவ்வகை எழுத்துக்களின் முக்கிய அமசங்களாவன:

(1) ம (10), ஊ (31), ஹ (40) ஆகிய எழுத்துக்களின் வலதுபுறத்தில் முடிவடையும் கோடு அடியில் இடதுபுறமாக இழுக்கப்பட்டுள்ளது.

(2) வ (9), உ (13), ய (24), ய (26), ப (30)ஆகிய எழுத்துக்கள் மேல்புறம் நன்கு வாய்திறந்து, படுக்கையாக எழுதப்பட்டன.

(3) ஜ (32) மேல்புறம் மூடி '8' என்னும எண்ணைப்போல் ஆகிவிட்டது.

(4) ய (33) இடதுபுறமாகக் காணப்பட்ட வளைவும் சுழியும் போய் மூன்று கோடுகளால் ஆகிய பழைய உருவத்தையே திரும்பவும்பெற்றது.

(5) க (8), த (25), ந (27), ന (34)ஆகிய எழுத்துக்களின் தலைப்பில் உள்ள படுக்கைக் கோடு சில சமயங்களில் இடதுபுறம் கீழ்நோக்கி வளைந்தும் காணப்படும்.

(6) ட (18) இதன் அடி வால் நன்கு நீட்டப்பட்டுவிட்டது.

(7) ஊ (41)தலை பருத்து வால் சிறுத்து எழுதப்பட்டு வந்தது.

(8) உயிர்மெய்யெழுத்துக்களின் ஈகாரக்குறியின் சுழி இடதுபுறத்தி லிருந்து வலதுபுறத்துக்கு மாறிவிட்டது.

iv. ***தற்கால எழுத்துக்கள்*** (Modern variety) சுமார் கி.பி. 1250-ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தைச் சார்ந்தவை. சோழர்களின் ஆதிக்கத்தைத் துறந்து தனியரசு ஸ்தாபித்துப் பெரும்புகழ் பெற்ற இரண்டாவது ராஜ்யத்துப் பாண்டியர்கள், பிறகு தமிழ்நாட்டை வென்று ஆண்டுவந்த விஜயநகர மன்னர்கள், அவர்களின் மஹாமண்டலேசுவரர்கள் முதலியோர் சாஸனங்களிற் காணப்படும் எழுத்துக்கள் இப்போது வழக்கில் உள்ளவற்றைப் போலவே உள்ளன. கடைசி இரண்டுபத்திகள் இவ்வகையைக் காட்டுவன.

பத்தி XV : பாண்டிய அரசனான ஜடாவர்மன் ஸுந்தரபாண்டியனுடைய ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயில் கல்வெட்டு (எபி. இந். 3-வது வால்யூம்) சுமார் கி.பி. 1260-ம்ஆண்டு.

பத்த XVI : திருநெல்வேலி ஜில்லாவில் ஆண்டுவந்த வரதுங்கராம பாண்டியனுடைய தளவாய் அக்கிரஹாரம் (2-நெ.) செப்பேடுகள். (சக. 1510-ம்) கி.பி. 1588-ம் ஆண்டைச் சார்ந்தவை. (திருவாங்கூர் ஆர்க்கியாலஜிகல் ஸீரிஸ், முதல் வால்யூம்.)

இதுகாறும் நாம் கூறியவற்றினின்றும், தமிழ்நாட்டில் கிரந்த எழுத்துக்கள் அடைந்த வளர்ச்சியைப் பின்வருமாறு வகுத்துக்கூறலாம்:

(1)ஃ, ஜ, ஸ, ஊ,ஸ என்பன போன்ற எழுத்துக்களை இடதுபுறம் தலைப்பில் ஆரம்பித்து ஒரே கோட்டில் முடிக்க விரும்பிச் செய்யப்பட்ட மாறுதல்.

(2) வா, ஆ, ஃ, ய, வ, வ என்பன போன்ற எழுத்துக்களில் மேல்புறம் வாய் திறக்கப்பட்டது.

(3) ற, ம ஆகிய எழுத்துக்களுக்குக் கீழ் புறமிருந்து மேல்புறம் நோக்கிச் செல்லும் கோடுகளுக்கு இடதுபுறமாக மேலிருந்துகீழ் நோக்கிவரும் ஒரு கோடு சேர்க்கப்பட்டது.

(4)  ஹ. முதலிய வலதுபுறத்தில் சிறு கோடுகளைக் கொண்டு முடிவடையும் எழுத்துக்களுக்கு வால் ஒட்டப்பட்டது.

(5)  ஆகிய எழுத்துக்களின் நேர்கோடுகளுக்கு இடதுபுறமாக மற்றொரு கோடும் சேர்க்கப்பட்டது.

(6) மற்ற எழுத்துக்களில் நேர் கோடுகளுடன் ஆரம்பிப்பவைகளுக்கு இடதுபுறமாக ஒரு சிறிய கொக்கி சேர்க்கப்பட்டது.

(7) உயிர் மெய்யெழுத்துக்களின் குறிகள் மெய்யெழுத்துக்களினின்றும் பிரிக்கப்பட்டுத் தனியாக எழுதப்பட்டுவந்தன.

கிரந்த எழுத்துக்களின் வளர்ச்சியில் பிராமிலிபியே உபயோகப்பட்டிருந்தாலும், இரண்டு இடங்களில் தென்னாட்டு எழுத்துக்களும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. ஒன்று : இது வடமொழியில் கிடையாது. அதனால் தமிழ் எழுத்தையே கொள்ள வேண்டியதாயிற்று. மற்றொன்று  வட நாட்டு பிராமியில் இதற்கென வேறு உருவம் ஒன்று இருந்தும் அதைவிடுத்துத் தமிழ்நாட்டு உருவத்தையே கொண்டிருக்கிறார்கள்.

6
தமிழ் எழுத்துக்கள்

தமிழ் லிபியிற் பொறிக்கப்பட்டுள்ள சாஸனங்கள் கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்துதான் கிடைக்கின்றன. கி.பி. பத்தாம் நூற்றாண்டு வரையில் அவை தொண்டைநாட்டிலும், சோழமண்டலத்திலும், கொங்கு தேசத்திலுமே அகப்படுகின்றன. பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சோழஸாம்ராஜ்யம் ஆதிக்கம்பெற்றுப் பாண்டிமண்டலத்தைக் கைக் கொண்ட காலத்திலிருந்து, அம் மண்டலத்திலே அதற்கு முன்பு வழக்கி லிருந்த வட்டெழுத்து வீழ, இவ்வகையில் சாஸனங்கள் பொறிக்கப் படலாயின. இங்ஙனம் பதினோராம் நூற்றாண்டிலிருந்து தமிழ்நாடு முழுவதும் இவ்வகை லிபியே வழங்கி வருகின்றது.

சோழமன்னர்கள் மகோந்நதஸ்திதியில் வாழ்ந்த காலங்களில் மைசூர் சமஸ்தானத்தின் சில பகுதிகளிலும், நெல்லூர் ஜில்லா போன்ற தெலுங்கு தேசத்திலும், இலங்கையிலும் தமிழில் பொறிக்கப்பட்டுள்ள சாஸனங்கள் காணப்படுகின்றன. ஆயினும் அவ்விடங்களில் இந்த லிபி அதிகநாள் வழக்கில் இருக்கவில்லை.

ஆராய்ச்சிமுறையில் இந்தவகை கிரந்தத்தமிழ் என்று வழங்கப் பெறும். பாண்டிமண்டலத்திலும், மலைநாட்டிலும் வடமொழிப் பகுதி கிரந்த லிபியிலும், தமிழ்மொழிப் பகுதி வட்டெழுத்திலும் பொறிக்கப் பட்டுள்ள சாஸனங்களில், வடமொழிப் பகுதியின் நடுவில் வரும் தமிழ்ச் சொற்கள், வட்டெழுத்தில் இல்லாமல் இந்தவகை லிபியிலேதான் எழுதப்பட்டுள்ளன.

உதாரணமாகப் பாண்டிய மன்னனான ராஜஸிம்ஹனுடைய பெரிய சின்னமனூர்ச் செப்பேடுகளைக் கூறலாம். (தென்னிந்திய சாஸனங்கள்: மூன்றாம் வால்யூம், நான்காவது பாகம்) இதனால் பண்டைமக்கள் தமிழ் லிபியைக் கிரந்தத்தின் ஒருவகையாகவே மதித்து வந்தார்கள்போலும் என்று எண்ண இடமுண்டாகின்றது.

கூரம் செப்பேடுகளின் தமிழ் எழுத்துக்களை (படம் 4. பத்தி II) அதே சாஸனத்தின் கிரந்த எழுத்துக்களுடன் (படம். 3. பத்திIV)ஒப்பிட்டுப் பார்த்தால் இருவகையிலும், உ, ட, ண, த, ந, ய, வ ஆகிய எழுத்துக்களும், உயிர்மெய்யெழுத்துக்களின் ஆ, இ, ஈ, எ, ஒ ஆகிய உயிர்க்குறிகளும் ஒரேவிதமாக எழுதப்பட்டுள்ளன வென்பதும், க, ர என்னும் எழுத்துக்களும் உயிர்மெய்யெழுத்துக்களின் உகரக்குறியும் நேர்கோடுகள் இரட்டிக்கப்படாமல் ஒற்றைக் கோடுகளாக இருப்பதைத்தவிர வேறு வித்தியாசம் கிடையாது என்பதும் தெரியவரும். ஞ என்னும் எழுத்தும் (3-ம் படத்தில் 17-ம் வரியின் V முதல் VIIவரையில் உள்ள பத்திகளைக் கவனிக்க)ஒகரமும் இருவகைக்கும் பொதுவான உருவங்களைப் பெற்றுள்ளன.

தமிழ் எழுத்துக்களுள் மற்றவை கிரந்த எழுத்துக்களினின்றும் சிறிது வேறுபட்டு எழுதப்பட்டுள்ளன. அத்தமிழ் எழுத்துக்கள் ஏழாம் நூற்றாண்டிற் பெற்றிருந்த உருவங்களை எவ்விதம் அடைந்தன வென்பதைக் கவனிப்போம்.

அ, ஆ ஆகிய எழுத்துக்களின் நேர்கோடுகள் ஒற்றையாகவே இருக்கின்றன. அவற்றின் இடதுபுறமுள்ள பாகம் கிரந்தத்தில் உள்ளதைப் போல மிகவும் வளைவு பெறாமல் காணப்படுகின்றது.

இ: பிராமியில் உள்ள (படம் 2. பத்தி IV. வரி 3) இவ்வெழுத்தின் மூன்று கோடுகளையும் ஒரே கோட்டால், மேலிருந்து கீழே பிரதக்ஷிணமாக எழுதியதால் பெறப்பட்டது இது.

எ: முக்கோணம் போன்ற பிராமியின் வடிவத்தை மேலே நாம் கூறியதுபோல் ஒரே கோட்டால் எழுதப்பட்டதால் அடைந்த உருவமாகும். (படம் 2. பத்தி V. வரி 5-ல் உள்ள உருவத்தைக் கவனிக்க.)

ஐ: இது திரிசூலம் போன்ற தமிழ்நாட்டு வடிவத்தைக் கொண்டு பெறப்பட்டதன்று: வடநாட்டு வடிவ (படம் 2. பத்தி II. வரி 49)த்தை இடதுபுறத்திலிருந்து வலதுபுறமாக ஒரே கோடாக எழுதுவதால் பெறப்பட்ட உருவம்.

ங: கிரந்த எழுத்துக்களில் ஊ, ஐ, வை முதலியன பெற்ற வளர்ச்சியைப் போல ஒரேகோட்டால் இடதுபுறத்திலிருந்து வலது புறமாக எழுதுவதற்கு அநுகூலமாகப் பெற்ற மாறுதல்களாலே இவ்வுருவம் வந்தது.

ச: இது பிராமியின் உருவமே.

ப: பிராமி உருவத்தின் இரு கோடுகளையும் சமமாக்கியதால் பெறப்பட்ட உருவம் இது.

ம: இது தென்னாட்டு பிராமி உருவத்தினின்றும் பெறப்பட்டது. நடுவில் இருந்த படுக்கைக் கோடு (படம் 1 பார்க்க) வலதுபுறத்துக் கோட்டுடன் ஒட்டப்பட்டதால் படம் 4. பத்தி I வரி 19-ல் உள்ள உருவத்தைப் பெற்று அது அக்கோட்டின் நுனியில் ஒரு கொக்கியாக மாறியது.

ல: பிராமியில் மிகவும் உயரமாக இருந்த வலதுபுறக்கோடு குட்டையாக்கப்பட்டு இவ்வுருவத்தை அடைந்தது.

ழ, ற: இவ்வுருவங்கள் படம் 1-ல் காட்டப்பட்ட தமிழ்நாட்டுப் பழைய வடிவங்களினின்றும் பெறப்பட்டவை. ழகரத்தின் பல வளைவுகள் நீக்கப்பட்டு எழுதுவதற்குச் சுலபமாகவும், றகரத்தின் அடிப்புறத்தில் வலது பக்கத்தில் உள்ள பக்கக்கோடு நீக்கப்பட்டும் இவ்வுருவங்களைப் பெற்றன.

ள: படம் 1-ல் உள்ள பழைய வடிவத்தில் வலதுபுறம் கீழ் நோக்கிச்

செல்லும் கோட்டை நன்கு நீட்டி எழுத்தின் முடிவில் ஒட்டியதால் இவ்வுருவத்தை யடைந்தது.

ன: படம் 1-ல் அடியில் உள்ள முதல் வரிசையில் கடைசி உருவத்தினின்றும் இது பெறப்பட்டதுபோலும்.

கூரம் செப்பேடுகளின் கிரந்த எழுத்துக்களைப் பற்றிக்கூறும் பொழுது, அவை தமிழ்நாட்டிலேயே தனியாக வளர்ந்து வந்த ஒருவகையாகச் சொல்லும்படியுள்ளன என்பதைத் தெரிவித்தோம். மிகவும் பழையனவாகக் கிடைக்கும் தமிழ் எழுத்துக்களின் உருவங்களைக் கவனித்தால், அவை தமிழ் நாட்டிலேயே கிரந்த எழுத்துக்களை ஒட்டியே வளர்ந்தனவென்று கூறலாம்.

இதுகாறும் கிடைத்துள்ள தமிழ்எழுத்துக்களை அவற்றின் வளர்ச்சியைக்கொண்டு பழையகாலம், மத்தியகாலம், தற்காலம் என மூன்று பிரிவுகளாக வகுக்கலாம்.

i. ***பழைய எழுத்துக்கள்*** (Archaic variety): சுமார் கி.பி. 900-ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்தவை. மூன்று பல்லவ அரசர்கள், அவர்களுடைய சிற்றரசர்கள், சோழ ராஜ்யத்தை ஸ்தாபித்த முதலரசர்கள் முதலியோர்களுடைய சாஸனங்கள் இவ்வகையில் பொறிக்கப்பட்டுள்ளன. முதல் ஏழு பத்திகள் இவ்வகை எழுத்துக்களைக் காட்டுவன.

பத்தி I: பல்லவ மஹேந்த்ரவர்மனுடைய வல்லம் கல்வெட்டு, கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முதற்பாதத்தைச் சார்ந்தது. (தென்னிந்திய சாஸனங்கள், 2-வது வால்யூம்.)

பத்தி II: பல்லவ அரசனான முதலாம் பரமேச்வரவர்மனுடைய கூரம் செப்பேடுகள். சுமார் கி.பி. 680-ஆம்ஆண்டு (தென்னிந்திய சாஸனங்கள்; மூலம் முதல் வால்யூம்; படம் இரண்டாம் வால்யூம்).

பத்தி III: இரண்டாம் பரமேச்வரவர்மனுடைய திருவதிகைக் கல்வெட்டு,

படம் 3—தற்கால வடிவம்




13
14
15
16
17
18
19
20
21
22
23
24
25
I
II
III
IV
V
VI
VII
VIII
IX
X
XI
XII
XIII
IV
XXV
XVI



I II III IV V VI VII VIII IX X XI XII XIII XIV XV XVI
26
27
28
29
30
31
32
33
34
35
36
37


38
39
40
41
42
43
44
45
46
47
48
49
50
I
II
III
IV
V
VI
VII
VIII
IX
X
XI
XII
XIII
XIV
XV
XVI

படம். 3.




I II III IV V VI VII VIII IX X XI XII XIII XIV XV XVI
26 27 28 29 30 31 32 33 34 35 36 37 38 39 40 41 42 43 44 45 46 47 48 49 50

சுமார் 710-ம் ஆண்டு (சென்னைச் சாஸன இலாகாவின் 1903-ஆம் வருஷத்திய 56-நெ. கல்வெட்டு. படம் வெளியிடப்படவில்லை. மூலம் மட்டில் தென்னிந்திய சாஸனங்கள் 8-வது வால்யூமில் வெளியிடப்பட்டுள்ளது.)

பத்தி IV: இதுவும் இதற்கு அடுத்த பத்தியும் பல்லவமல்லனான நந்திவர்மனுடைய காலத்து இருவேறு சாஸன எழுத்துக்களைக் காட்டுவன. இந்தப்பத்தியில் உள்ளவை கசாக்குடிச் செப்பேடுகளினின்றும் எடுக்கப்பட்டவை. இவை சித்திரிக்கப்பட்ட வகை என்று கூறலாம். சுமார் கி.பி. 750-ஆம் ஆண்டு (தென்னிந்திய சாஸனங்கள், இரண்டாம் வால்யூம்).

ஆய்தத்துக்குக் கிடைத்துள்ள உருவம் (37)கவனிக்கத்தக்கது.

பத்தி V : அவ்வரசனுடைய திருவல்லம் கல்வெட்டு எழுத்துக்கள் சுமார் கி.பி. 780-ம் ஆண்டு (தென்னிந்திய சாஸனங்கள், மூன்றாம் வால்யூம், முதல்பாகம்).

பத்தி VI : அதேகாலத்தைச் சார்ந்தவன் என்று கூறக்கூடிய 'பெரும்பிடுகு முத்தரையனாயின சுவரன் மாற'னுடைய செந்தலைக் கல்வெட்டு எழுத்துக்கள். மிகவும் சித்திரிக்கப்பட்ட வகை. (ஸௌத் இந்தியன் அஸோஸியேஷன் ஜர்னல்,2-வது வால்யூம்.)

பத்தி VII : பல்லவ அரசனான நிருபதுங்கவர்மனுடைய லால்குடிக் கல்வெட்டு கி.பி.9-ம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியைச் சார்ந்தது. (தென்னிந்திய சாஸனங்கள், நான்காம் வால்யூம்).

வரி 4: தெள்ளாறெறிந்த நந்திவர்மனுடைய வேலூர்ப்பாளையம் செப்பேடுகளினின்றும் எடுத்தது (ஷை 2-வது வால்யூம்.)

வரி 40-42: திருவாங்கூர் சமஸ்தானத்தில் கிடைத்த திருப்பறப்புச் செப்பேடுகளினின்றும் எடுக்கப்பட்டவை (திருவாங்கூர் ஆர்க்கியலாஜிகல் ஸீரிஸ், முதல் வால்யூம். நெ. 13.)

வரி 8-ல் உள்ள ஐகார உருவம் முதலில் அகரமாய் எழுதப்பட்டுப் பிறகு ஐகாரமாகத் திருத்தப்பட்டது போலத் தோன்றுகிறது.

இக்காலத்து எழுத்துக்களின் முக்கிய அம்சங்களாவன:

1. மெய்யெழுத்துக்கள் பொதுவாகப் புள்ளியிடப்பட்டு வந்தன.

2. ''மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்'' (எழு. 15)

''எகர ஒகரத் தியற்கையு மற்றே'' (எழு. 16)

என்னும் தொல்காப்பிய விதிப்படி உயிரெழுத்துக்களிலும், உயிர் ஏறிய மெய்யெழுத்துக்களிலும் எகர ஒகரக் குறில்கள் சில சமயங்களிற் புள்ளியிடப்பட்டு வந்தன (பத்தி VI பார்க்க).

3. மு(33), மு (34) ஆகிய இரண்டு எழுத்துக்களும் ஒன்றைப்போலவே எழுதப்பட்டு வந்தாலும், வேறுபாடுதோன்ற 'மு' என்னும் எழுத்தின் நடுக்கோடு நீளமாக எழுதப்பட்டு வந்தது.

4. அ (1), ஆ (2) வளைந்த கொக்கி போன்று இடதுபுறமாக இருந்தகோடு பிரதக்ஷிணமாக எழுதுவதற்கு அநுகூலமாக மாற்றி அமைக்கப்பட்டது.

5. ஊ (6) நெடிற்குறி தனியாகப் பிரிக்கப்பட்டுக் 'கால்' போல எழுதப்பட்டது.

6. ச (12) அடிவயிறு மேல்புறம் வாய்திறக்கப்பட்டுள்ளது.

7. ம (19) நடுக்கோடு கொக்கிபோலவே அடிக்கோட்டைத் தொடாமல் மேலே தொங்கிக்கொண்டு இருக்கின்றது.

8. ய (20) இரண்டுவிதமாக எழுதப்பட்டு வந்தது.

9. கிரந்தத்தில் ஒன்றன்மேல் ஒன்றாக இரு கொம்புகளைக் கொண்ட உயிர்மெய்யெழுத்தின் ஐகாரக்குறி தமிழில் அக்கொம்புகளை ஒன்றன்

பக்கத்தில் ஒன்றாக (III-38)க் கொண்டதாய் அமைந்தது. இவ்விரு கொம்புகளும் ஒன்றையொன்று ஒட்டி நெருக்கமாக எழுதப்பட்டதால் பல சமயங்களில் தற்காலத்து வடிவத்தையே ஒத்திருக்கக் காணப்படும். ணை, லை (III-37), ளை, னை, (VII-38) ஆகிய எழுத்துக்களின் ஐகாரக்குறியின் தனியமைப்புக் கவனிக்கத்தக்கது.

10. து (VI-35; V-36), னு (II-36 ; IV-36), லு என்பன போன்ற எழுத்துக்களின் உகரக்குறிகள் இருவிதங்களாக எழுதப்பட்டு வந்தன. அடியில் வலதுபுறமாகச் சாய்ந்து செல்லும் கோட்டையுடைய வடிவம் பழமையானதாயினும் இருவகை உருவங்களும் சேர்ந்தே காணப்படுகின்றன.

11. உயிர்மெய்யெழுத்துக்களின் ஆ, இ, ஈ, எ, ஐ, ஒ ஆகியவற்றின் குறிகள் மெய்யெழுத்துக்களினின்றும் பிரித்தே எழுதப்பட்டு வந்தன.

12. எழுத்துக்களுக்கு ஆரம்பத்தில் மேலிருந்து கீழ்நோக்கிவரும் கோடுகளின் தலைப்பிற் காணப்பட்ட தடித்த பாகம் இடது புறம் நோக்கும் ஒரு சிறிய கோடாக மாறியது.

ii. ***மத்தியகாலத்து எழுத்துக்கள்*** (Middle variety): சுமார் கி.பி. 900-ஆம் ஆண்டிலிருந்து சுமார் 1250-ஆம் ஆண்டு வரையில் உள்ள காலத்தைச் சார்ந்தவை. தஞ்சைச் சோழர்களும் அவர்களுடைய சிற்றரசர்களும் பொறித்த சாஸனங்கள் இந்த வகையைச் சேர்ந்தனவே. VIII முதல் XII வரையில் உள்ள பத்திகள் இந்த வகை எழுத்துக்களைக் காட்டுவன.

பத்தி VIII: இதுவும் இதற்கு அடுத்தபத்தியும் முதலாம் இராஜராஜ சோழனுடைய இரு வேறு சாஸனங்களின் எழுத்துக்களைக் காட்டுவன. இந்தப் பத்தியில் உள்ளவை தஞ்சைப் பெரிய கோயிற் கல்வெட்டுக்களி னின்றும் எடுக்கப்பட்டன. கி.பி. 1011-ம் ஆண்டைச் சார்ந்தவை (தென்னிந்திய சாஸனங்கள், இரண்டாம் வால்யூம்).

பத்தி IX : மேல்பாடி சோழேச்வராலயத்தில் பொறிக்கப்பட்டுள்ள அதே அரசனுடைய கல்வெட்டு எழுத்துக்கள். கி.பி. 1014-ம் ஆண்டு (ஷை.

மூன்றாவது வால்யூம், முதல்பாகம்). இவ்வகை எழுத்துக்கள் சித்திரிக்கப்பட்ட வகையைச் சார்ந்தன. பெரிய லீடன் பட்டயங்களின் (Larger Leiden grant) எழுத்துக்களும் இவற்றைப் போலவே உள்ளன.) எபி. இந். 22-வது வால்யூம் பார்க்க).

பத்தி X : முதலாம் இராஜேந்திரசோழனுடைய திருவாலங்காட்டுச் செப்பேடுகளின் எழுத்துக்கள், சுமார் கி.பி. 1025-ம் ஆண்டு (தென்னிந்திய சாஸனங்கள், மூன்றாம் வால்யூம், மூன்றாம் பாகம்).

பத்தி XI : முதற் குலோத்துங்க சோழனுடைய திருக்கழுக்குன்றத்துக் கல்வெட்டு. கி.பி. 1112-ம்ஆண்டு (ஷை. மூன்றாம் வால்யூம், இரண்டாம் பாகம்).

பத்தி XII : மூன்றாம் குலோத்துங்க சோழனுடைய திருக்களர்ச் செப்பேடுகள். கி.பி. 1204-ம் ஆண்டு (ஷை. மூன்றாம் வால்யூம், நான்காம் பாகம்).

இவ்வகை எழுத்துக்களின் முக்கிய அம்சங்களாவன:

1. மெய்யெழுத்து, எகர ஒகரக் குறிகள் ஆகியவற்றுக்கு இடப்பட்டு வந்த புள்ளி வழக்கு ஒழிந்தது.

2. உயிர்மெய்யெழுத்துக்களில், இகரம், ஈகாரம் ஆகியவற்றின் குறிகள் பொதுவாக வேறுபாடு இல்லாமல் ஒரேவிதமாக எழுதப்பட்டு வந்தன. வேறுபாடு காணப்படும் இடங்களில் ஈகாரக்குறியின் சுழி வலதுபுறத்தில் காணப்படும் (XI-14).

3. மு, மு ஆகிய இரண்டும் ஒரேவிதமாக எழுதப்பட்டு வந்தன.

4. த, ந ஆகியவற்றில் வலதுபுறத்தில் முடிவு அடையும் கோடு அடியில் இடதுபுறமாக வால் போல இழுக்கப்பட்டுள்ளது.

5. ண, ன ஆகியவற்றின் வலதுபக்கக் கோடுகள் நன்கு நீட்டப் பட்டுள்ளன.

படம் - 4




I II III IV V VI VII VIII IX X XI XII XIII XIV
22 23 24 25 26 27 28 29 30 31 32 33 34 35 36 37 38 39 40 41 42

படம்—4 தற்கால வடிவம்



	I	II	III	IV	V	VI	VII	VIII	IX	X	XI	XII	XIII	XIV	
22	ல	ல்	ல	ல	ஸ்	ஜெ	ு	ல	[illegible]	ல	ல	ல	ல	ல	22
23	ல	வ	வெ	வ	வ	வ	வ	வி	வி	வ	வு	வ	வ	வ	23
24	...	ழ	ழ்	ழ்	ழ	ழ	ழ	ழ	ழ	ழ	ழ	ழ	ழ	ழ	24
25	ளி	ள்	ள்	ளு	ள	ளு	ள	ள	ள	ள	ளு	ள	ள	ள	25
26	...	ற	ற்	று	று	று	ற	ற	ற	றி	ற	ற	ற	ற	26
27	ன்	ன்	னு	ன	ன	ன்	ன	ன	ன	ன	ன	ன	ன	ன	27
28	யா	பா	...	ஒ	ஒ	ஒ	ஒ	...	...	ஒ	ஒ	ஒ	ஒ	...	28
29	டி	டி	டி	றி	டி	ஞா	ஞா	...	...	ஞ	ஞ	ஞ	ஞ	ஞ	29
30	ஞ	தீ	கா	தீ	தீ	தீ	க	கூ	ஞ	ஞ	ஞ	ஞ	ஞ	ஞ	30
31	செ	கு	யூ	கு	கு	கு	ஏ	ஏ	ஏ	கூ	று	கு	கூ	கூ	31
32	பொ	கூ	கூ	பூ	...	கூ	...	ஜ	ஜ	ஜ	ஜ	ஜ	ஜ	ஜ	32
33	...	மு	மு	மு	மு	மு	மு	மு	மு	மு	மு	மு	மு	மு	33
34	...	மு	மு	மு	..	மு	மு	மு	மு	மு	மு	மு	மு	மு	34
35	...	ஊ	ஊ	ஊ	ஊ	ஊ	ஊ	ஊ	ஊ	ஊ	ஊ	லொ	...	லொ	35
36	...	ஐ	ஐ	ஐ	ஐ	ஐ	ஐ	ஐ	ஐ	ஐ	ஐ	ஐ	ஐ	ஐ	36
37	...	க	லொ	ஃ	...	ஊ	ஐ	ஐ	பு	ஊ	...	பு	பு	பு	37
38	...	லொ	லைட	லைர	லொ	லொ	லொ	லொ	லொ	லொ	லொ	லொ	லொ	லொ	38
39	..	டெ	டெ	டெ	டெ	டெ	டெ	டெ	டெ	டெ	...	...	...	ட்ட	39
40	...	பொ	ஞ	...	பொ	பொ	உ	பொ	...	டொ	...	...	...	...	40
41	...	ஆ	ஆ	...	...	லொ	ஞ	...	க்த	...	க்த	...	...	...	41
42	...	உ	ஏ	...	...	கோ	கா	...	க்க	...	...	...	...	...	42

I II III IV V VI VII VIII IX X XI XII XIII XIV

6. இகரத்தின் அடிக்கோடு அப்படியே எழுத்தைச் சுற்றி இழுக்கப்பட்டு ஒரு சுழியைப்போல அமைந்தது.

7. ஊகாரத்தில் நெடில் உருவம் தனி உருவமாக மாறியது.

8. ய: பழையபடி மூன்று கோடுகளைக் கொண்ட உருவத்தையே அடைந்தது.

9. க, ச, த, ந, ர, முதலிய எழுத்துக்கள், உயிர்மெய்யெழுத்தின் ஆகாரக்குறி ஆகியவற்றின் தலைப்பில் உள்ள படுக்கைக் கோட்டின் இடதுபுறமாகக் கீழ்நோக்கித் தொங்கும் ஒரு சிறிய கோடு ஒட்டப்பட்டுள்ளது.

10. ச, ம, ஆகியவற்றின் கோடுகளைப் பக்கக் கோடுகளுடன் சேர்த்துச் சுழிகள் பூர்த்தி செய்யப்பட்டன.

11. ரகரமும் உயிர்மெய்யெழுத்தின் ஆகார நெடிற்குறியும் வேற்றுமையின்றி ஒரேவிதமாக எழுதப்பட்டு வந்தன.

iii. ***தற்கால எழுத்துக்கள்*** (Modern variety):சுமார் கி.பி. 1250-ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தைச் சார்ந்தவை. இரண்டாவது இராஜ்யத்துப் பாண்டியர்களும், விஜயநகர மன்னர்களும் அவர்களின் சிற்றரசர்களும் கொடுத்த சாஸனங்களிற் காணப்படும் எழுத்துக்கள் இப்போது வழக்கில் உள்ளவற்றைப் போலவே உள்ளன. கடைசி இரண்டு பத்திகள் இவ்வகையைக் காட்டுவன.

பத்தி VIII: இராஜநாராயண சம்புவராயனுடைய குன்றத்தூர்க் கல்வெட்டு. கி.பி. 1343-ம் ஆண்டு (சென்னைச் சாஸன இலாகாவின் 1930-ம்ஆண்டின் 195-நெ. கல்வெட்டு; இன்னும் வெளியிடப்படவில்லை).

பத்தி IX : விஜயநகர அரசனான அச்சுததேவராயருடைய ஸ்ரீரங்கம் கல்வெட்டு. கி.பி. 1534-ம்ஆண்டு (ஷை இலாகாவின் 1930-ம் ஆண்டின் 260-நெ. கல்வெட்டு; இன்னும் வெளியிடப்படவில்லை).

உயிர்மெய்யெழுத்துக்களில் ஏகார ஓகாரங்களை உணர்த்து இருசுழிகளைப் பெற்ற கொம்பு, பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியி தமிழ்நாட்டில் வாழ்ந்த வீரமாமுனிவர் என்னும் பெஸ்கி பாதிரியாரா அமைக்கப்பட்டதென்று கூறப்படுகின்றது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பெற்றிருந்த உருவங்களினின்றும் தற்கா வடிவங்களைப் பெறுவதற்குள் கிரந்தம், தெலுங்கு, கன்னடம் முதலி லிபிகள் அடைந்த மாறுதல்களை நோக்கினால், தமிழ்லிபி பெற்ற மாறுதல் மிகவும் சிறிது என்றே கூறவேண்டும்.

7

வட்டெழுத்து

வட்டெழுத்திற்குத் **தெக்கன்மலையாளம், நானாமோனம்** என்ற வேறு பெயர்களும் உண்டு. இவ்வகை லிபியிற் பொறிக்கப்பட்ட சாஸனங்கள் பாண்டிமண்டலத்திலும் மலைநாட்டிலும் காணப்படுகின்றன. தமிழ்நாட்டின் மற்றைப் பகுதிகளிலும் ஒன்றிரண்டு கிடைக்கின்றனவாயினும் அவ்விடங் களில் இவ்வகை லிபி, வழக்கில் இருந்ததாகத் தெரியவில்லை. அக் கல்வெட்டுக்களைப்பற்றிப் பின்னாற் கூறுவோம்.

சோழர்கள் ஆதிக்கம்பெற்றுப் பாண்டிமண்டலத்தைக் கைப்பற்றிக் கொண்ட பிறகும், இவ்வகை லிபி, சோழர்கள் ஆதிக்கத்திற்கு அதிகம் உட்படாத மலைநாட்டில் வழக்கில் இருந்துவந்தது. மலையாளத்தவர்கள் மணிப்பிரவாளமான தங்கள் மொழியில் வட மொழிச் சொற்களை அதிகமாகக் கலக்க ஆரம்பித்தவுடன், ஆர்ய எழுத்து என்று அவர்கள் கூறும் கிரந்தலிபியை வழக்கத்திற் கொணர்ந்தார்கள். ஆனால், ஆர்ய எழுத்துள் க, ச, ட, த, ப ஆகிய வல்லினங்களில் ஒவ்வொன்றுக்கும் ஒலியைப் பொறுத்து நான்கு எழுத்துக்கள் உள்ளமையால், வடமொழிச் சொற்கள் அதிகம் கலந்தமொழியை வழங்காத நாட்டுமக்கள் ஆர்ய எழுத்தை உபயோகிக்கவில்லை. வட்டெழுத்தின் ஒருவகையான 'கோலெழுத்து' என்பதை உபயோகித்து வந்தார்கள். இக்கோலெழுத்து சமீபகாலம் வரையில் 'மாப்பிள்ளைகள்' எனப்படும் மலைநாட்டு முகம்மதியர்களிடை வழக்கிலிருந்தது.

வளைந்த கோடுகளையே அதிகமாகப் பெற்றிருந்தமையால் இந்த வகைக்கு வட்டெழுத்து, வட்டம் என்ற பெயர்கள் உண்டாயின. சாஸனங்களிலும் இது இங்ஙனமே குறிக்கப்பட்டுள்ளது. சுமார் கி.பி. 1387-ஆம் ஆண்டில் பராக்கிரம பாண்டியதேவர் திருக்குற்றாலத்துக் குற்றாலநாதஸ்வாமி கோயிலின் கர்ப்பக்கிருகத்தைப் புதுப்பித்த பொழுது அதன் சுவர்களில் இருந்த சாஸனங்களைத் தனியாகப் பெயர்த்தெழுதிக் கொண்டு கட்டிடம் முடிந்த பிறகு மறுபடியும் அந்தச் சாஸனங்களை வெட்டியதை-

''திருமலை (யால் உத்தா?) ரணம் பண்ணினடத்து திருமலையிற் கல்வெட்டு வட்டமாகையினால் தமிழாகப் படிஎடுத்துக் கல்வட்.....''

என்று அக்கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்று கூறுகின்றது. (1917-ஆம் வருஷத்து 454 நெ. கல்வெட்டு) இவ்விடத்தில் உள்ள கல்வெட்டுக்களுள் ஒன்று அப்பொழுது வட்டத்தை ஒருவரும் படிக்கமுடியாமையால் அவற்றைத் தவிரப் பிறவற்றை வெட்டியதாகத் தெரிவிக்கின்றதென்று காலஞ்சென்ற து. அ. கோபிநாதராயர் கூறுகிறார் (திருவாங்கூர் ஆர்க்கியாலஜிகல் ஸீரீஸ்; முதல் வால்யூம், 283-ஆம் பக்கம்). இது உண்மையாயின், பாண்டி நாட்டில் முன்னமேயே இது வழக்கொழிந்ததுடன், இதை வாசிப்பவர்களும் இல்லாமற் போயினர் என்பது பெறப்படும்.

நமக்குக் கிடைக்கும் வட்டெழுத்துச் சாஸனங்களில் மிகவும் பழமையானது கி.பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்தது. அக்காலத்திலேயே இந்த லிபி நன்கு வளர்ச்சியடைந்து ஒரு தனி வடிவத்தைப் பெற்றிருந்தது. பிற்காலக் கல்லெழுத்துக்களில், ங, லு, து, று ஆகிய எழுத்துக்கள் ஒரேவிதமான உருவத்தைப் பெற்றிருந்தனவாயினும், பழைய சாஸனங்களில் அவற்றுள் ஒன்றற்கொன்று பெற்றிருந்த வேறுபாடுகள் நன்கு விளங்கும்படி உள்ளன. இதனாற் பழைய சாஸனங்களை வாசிப்பது மிகவும் சுலபம். கி.பி. 15, 16-ஆம் நூற்றாண்டுச் சாஸனங்களில் ந, ப, ம, ய, ல, வ ஆகிய எழுத்துக்களும் ஒரேவிதமான

உருவங்களைப் பெற்றிருந்தமையால் அவற்றை நாம் சந்தர்ப்பத்தை ஒட்டியே வாசிக்க வேண்டும். இல்லையேல் பல தவறுகள் நேரிடக் கூடும். இவ்வகையெழுத்து வழக்கொழிந்ததற்கான காரணங்களுள் இதுவும் ஒன்றாயிருக்கலாம்.

இனி இந்த லிபிக்கும் தமிழுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கவனிப்போம்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வழங்கி வந்த இவ்விருவகை லிபிகளையும் (படம் 4, பத்தி IV; படம் 5 பத்தி II, III, IV) ஒப்பு நோக்கினால், ஈ, க, ங, ஞ, ர, ல, வ, ழ, ள ஆகியவை ஒரே வடிவத்தைப் பெற்றுள்ளன வென்பது புலப்படும். அ, உ, ஒ, ச, ட, ய ஆகியவை ஒரு சிறு வேறுபாடுகளையே உடையன.

இவ்விருவகைக்கும் உள்ள முக்கியமான வேறுபாடுகள் பின் வருவனவாகும்.;

உயிர் எழுத்துக்கள்:-

அ, (1) ஆ (2): வட்டெழுத்தில் நடுக்கோடு குழிந்து அரை வட்டமாக ஆனதைத் தவிர இருவகை எழுத்துக்களும் ஒன்றே.

இ (3) : பிராமி உருவத்தில் மூன்று தனிக்கோடுகளையும் ஒரே கோட்டால் எழுதியதால் அடைந்த உருவம் போலும். முதலில் இடது புறத்துக் கோடுகள் இரண்டும், பிறகு வலதுபுறக் கோடும் எழுதப்பெற்றதால் உண்டானது இவ்வுருவம்.

உ (5) : தமிழில் கீழ்நோக்கிச் சாய்ந்துள்ளகோடு படுக்கையையடைந்து நடுவில் குழிந்துள்ளது. சில சமயங்களில் மேல்நோக்கிச் செல்வதாகவும் காணப்படும்.

ஊ (6) : தமிழில் தலைச்சுழியின் வலதுபுறமாகக் காணப்பட்ட நெடில் உருவம் இதில் வாலாக ஒட்டப்பட்டுள்ளது. இந்த லிபி இடது

புறத்திலிருந்து வலதுபுறமாக அப்பிரதக்ஷிணமாகச் செல்லும் ஒரே கோட்டால் அமைந்ததால், நெடில் உருவம் முக்கிய எழுத்தின் வலதுபுறமாக ஒட்டி வால்போல அமைந்ததுபோலும்.

எ (7) : முக்கோணம் போன்ற பிராமி வடிவத்தினின்றுமே பெறப்பட்டது. வட்டெழுத்தில் இது இடதுபுறம் சாய்ந்து முடிவில் ஒரு சுழியைக் கொண்டது.

ஐ (8) : திரிசூலம்போல உள்ள இது தமிழுக்கென அமைந்த தனி உருவம் போலும். இதை நாம் முன்னமேயே குறிப்பிட்டிருக்கிறோம்.

மெய்யெழுத்துக்கள்:-

ட (14) : தமிழில் வலதுபுறம் வாய்திறந்து பிறைச்சந்திரன் போன்றிருந்த உருவம் வட்டெழுத்தில் படுக்கையடைந்து மேல்புறம் வாய்திறந்து காணப்படுகின்றது.

ண (15) : தமிழில் ஒன்றன் பக்கத்தில் ஒன்றாக உள்ளஇரு சுழிகள் இதில் ஒன்றன்கீழ் ஒன்றாக அமைந்துள்ளன.

த(16) ந (17) : இவ்விரண்டு எழுத்துக்களுக்கும் ஆரம்பத்தில் ஒரு சிறிய கொக்கி காணப்படுகின்றது. தகரத்துக்குத் தமிழில் காணப்படும் நடுச்சுழி வட்டெழுத்தில் இல்லை. அன்றி அடிக்கோடு இடதுபுறம் நன்கு நீட்டப்பட்டுள்ளது. நகரமோ வலதுபக்கத்துக் கோடு நடுவில் வளைந்து அப்பிரதக்ஷிணமான வளைவைப் பெற்றுள்ளது.

ப (18) ம (19) : இவ்விரண்டு எழுத்துக்களுக்கும் அதே போல ஆரம்பத்தில் கொக்கி சேர்க்கப்பட்டுள்ளது. மகரத்தின் சுழி சிறியதாத வலதுபக்கத்துக் கோட்டில் ஒட்டப்பட்டுள்ளது.

ய (20) : இதற்கு இருவகை உருவங்கள் காணப்படுகின்றன. மூன்று கோடுகளாலான பிராமி உருவத்தையே இருவேறு விதமாக எழுதியதால் பெறப்பட்ட உருவங்களே அவை. அவற்றுள் ஒன்று தமிழ் வடிவத்தைப் போலவே உள்ளது.

படம் - 5




I II III IV V VI VII VIII IX X XI XII XIII XIV
22 23 24 25 26 27 28 29 30 31 32 33 34 35 36 37 38 39 40 41 42

படம்—5 தற்கால வடிவம்



	I	II	III	IV	V	VI	VII	VIII	IX	X	XI	XII	XIII	XIV	
22	..	லா	ல	லா	..	ளி	லி	ள	ள	லி	லி	ல	ளு	ள	22
23	..	ஆ	உ	வோ	வ	ஜ்	வெ	உ	உ	வெ	வெ	வு	உ	உ	23
24	ழ	ழொ	...	ழு	ழு	ழு	ழு	ழு	ழொ	ழு	ழு	ழு	ழு	ழு	24
25	...	ளி	ளி	ளி	ளு	ள	ள	ளா	ளு	ளு	ளு	ளா	ளு	ள	25
26	ற	று	ற	று	றி	றொ	று	ற	று	றி	று	...	ற	ற	26
27	ன	ன	ன	ன	...	னு	னு	னு	ன	ன	ன	ன	ன	ன	27
28	..	ஞ	ஞா	ஞ	...	ஞ	ஞ	ஞ	ஞ	ஞ	ஞ	...	ஞ	ஞ	28
29	தி	ஊ	ஷ	ஊ	..	ஊ	ஊ	ஊ	ஊ	ஊ	ஊ	சா	தி	ே	29
30	சீ	ளி	சீ	ஜொ	வீ	கொ	கொ	ஜொ	கெ	கொ	சொ	கெ	கெ	கெ	30
31	...	கு	கு	கு	கு	கு	கூ	கு	சொ	..	ஸை	ஸை	ஸை	டு	31
32	..	கூ	டூ	ளி	...	ளி	ளி	ஞ	கொ	ஞ	கூ	கொ	கொ	கொ	32
33	தே	பொ	செ	ஜ	...	டு	செ	கெ	ஸ	ஊ	ஊ	சொ	சொ	செ	33
34	ஸக	அ	ட	லெ	ஸை	ஸை	ஊ	ஸை	ஸை	கை	ஞெ	கு	கு	கு	34
35	தொ	ய	கொ	ய	சொ	...	லொ	லொ	னொ	லொ	லொ	நா	ஸை	கூ	35
36	..	ஞொ	ஸை	ஞொ	பொ	ஞொ	ஞொ	ஞொ	ஞொ	ஞொ	ஞொ	ஞ	ஓ	ஓ	36
37	...	ஊ	ஜ	ளு	மு	ஃ	...	மு	ஜ	ஜ	ஜ	ஊ	டை	ஜ	37
38	...	ஊ	ஞெ	ஊ	..	ஊ	ஊ	ஊ	ஜ	ஜ	ஜ	பொ	ஊ	ஜ	38
39	..	ஸ	ஸ	ஜி	...	ஜ	ஜ	ஜ	யொ	ஊ	ஊ	...	டு..	ஜி	39
40	...	கொ	ஊ	ஊ	ஊ	பொ	பொ	பொ	பொ	பொ	பொ	...	னொ	தெ	40
41	...	து	து	பொ	பொ	..	..	போ	ந	து	து	பொ	பொ	பொ	41
42	...	ஜ	...	ஜ	ஜ	ஜ	ஜ	ஜ	ஜ	ஜ	ஜ	ஜ	ஜ	ஜ	42
	I	II	III	IV	V	VI	VII	VIII	IX	X	XI	XII	XIII	XIV	

ற (26) : அடியில் எழுத்தின் முடிவில் இடதுபுறமாக இழுக்கப்பட்ட கோட்டைத்தவிர தமிழுக்கும் இதற்கும் வேறுபாடு காணப்படவில்லை.

ன (27) : படம் 1 ல் காட்டப்பட்ட தமிழ்நாட்டுப் பிராமி உருவத்தினின்றுமே பெறப்பட்டது.

உயிர்மெய்யெழுத்துக்கள்:-

ஆகாரக்குறி : பிராமி எழுத்துக்களின் தலைப்பில் ஒட்டப்பட்ட சிறிய படுத்த கோடு தமிழில் கீழ்நோக்கி வளைய ஆரம்பித்து முடிவில் நேர் கோடாக ஆயது; வட்டெழுத்திலோ நாம் மேலே உயிர் எழுத்தின் ஊகாரக்குறிக்குக் கூறியதுபோல அது படுக்கைக் கோடாகவே நின்றுவிட்டது. அநேகமாக அது சிறிது மேல் நோக்கிச் சாய்த்து எழுதப்பெறும்.

இகரக்குறி : தமிழில் எழுத்துக்களின் தலைப்பினின்றும் இடதுபுறமாக வாய்திறந்து எழுதப்பட்ட அரைவட்டம் இவ்வகையில் படுக்கையை அடைந்து மேல்நோக்கி வாய்திறந்து காணப்படும். இதனால் இக்குறி எப்பொழுதும் எழுத்துக்களின் வலதுபுறமே காணப்படும்.

எகரக்குறி : பிராமி எழுத்துக்களின் தலைப்பில் இடதுபுறமாகச் சேர்க்கப்பட்ட சிறியகோடு தமிழில் ஒரு கொம்பு ஆக மாறியது. ஆனால் வட்டெழுத்தில் கோடாகவே நின்றுவிட்டது. இக்கோடு கீழிருந்து மேல்நோக்கிச் சாய்வாகவே எழுதப்படும். க, ர போன்று நேர்கோடுகளையே முக்கியமான பாகங்களாக உடைய எழுத்துக்களுக்கு மட்டில் கொம்பு காணப்படுகின்றது.

ஐகாரக்குறி : தமிழில் இரு கொம்புகளாக உள்ள இது வட்டெழுத்தில் ஒரு கொம்பை மட்டில் பெற்றுள்ளது. கெ, ரெ போன்று எகரத்தைக் குறிக்க ஒரு கொம்பு வந்துள்ள இடங்களில் மட்டும் இது இரண்டு கொம்புகளைப் பெற்றுள்ளது.

ஒகரக்குறி : தமிழைப்போலவே எழுத்துக்கு முன்பு எகரக் குறியையும், பின்பு ஆகாரக்குறியையும் கொண்டு அமைந்துள்ளது.

இங்ஙனம் இவ்வகை கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரையில் பின்வரும் மாறுதல்களை பெற்றுப் பிராமியினின்று தனிலிபியாக வளர்ந்தது என்று கூறலாம்.

(1) எழுத்துக்கள் இடதுபுறமிருந்து வலதுபுறமாக எழுதப்பட்ட ஒரே கோட்டால் ஆனவை. பொதுவாக அக்கோடு அப்பிரதக்ஷிணமாகச் செல்லும்.

(2) எழுத்துக்கள் பொதுவாக இடதுபுறம் சாய்ந்தே எழுதப்பட்டன.

(3) எழுத்துக்களின் முடிவு மேலிருந்து கீழ்நோக்கிச் செல்லும் நேர்கோடுகளாக இருந்தால் அல்லது பிற இடங்களில் நேர்கோடுகள் உபயோகிக்கப்படவில்லை.

(4) படுத்தகோடுகள் நடுவில் குழிந்து அரைவட்டங்கள் ஆகிவிட்டன. உதாரணம் அ (1), உ (5), ங (11).

(5) எழுத்துக்களின் ஆரம்பத்தில் நிமிர்ந்த நேர்கோடு இருந்தால், அதன் தலைப்பில் இடதுபுறமாகக் கீழ்நோக்கி வாய்திறந்த ஒரு கொக்கி சேர்க்கப்பட்டுள்ளது. உதாரணம் : ப (18), ம (19).

(6) எழுத்தின் முடிவில் படுக்கையான கோடு வலதுபுறமாக முடிவடைந்தால், அது மேல்நோக்கி வாய்திறந்த ஒரு கொக்கி போல் மாறியது. உதாரணம் : ந (17).

(7) எழுத்துக்களின் முடிவில் படுக்கையான கோடு இடது புறமாக முடிவு அடைந்தால் அது இடதுபுறமாக நீட்டப்பட்டுப் படுத்தகோடாக அமைந்தது. உதாரணம் : த (16), ற (26), ன (27).

இதுகாறும் கூறியவற்றால் கிரந்தம், தமிழ் முதலிய லிபிகள் பிராமியினின்று வளர்ச்சிபெற்றதைப் போலவே வட்டெழுத்து பிராமியினின்று வளர்ந்து வந்தது என்பது புலப்படும். ஆனால் வட்டெழுத்தின் உற்பத்தியைப் பற்றிப் பலவிதமான அபிப்பிராயங்கள் இருந்துவருகின்றன.

கரோஷ்டியினின்றும் வளர்ச்சியடைந்து இந்தியாவில் வழக்கிலிருந்தது இவ் வட்டெழுத்து ஒன்றேயாகும் என்று காலஞ்சென்ற மஹாமஹோபத்யாய டாக்டர் ஹரப்பிரசாத சாஸ்திரி கூறுகிறார் (பீஹார் ஒரிஸா ரிஸர்ச் ஸொஸைட்டி ஜர்னல், முதல் வால்யூம், பக்கம் 58). அவர் இங்ஙனம் கருதுவதற்கான காரணம் ஒன்றையும் கூறவில்லை. இஃது அங்ஙனம் இருக்கமுடியாது. பிராமிக்கும் கரோஷ்டிக்கும் மிகுந்த வேறுபாடுகள் உளவென்பதை நாம் முன்னமே கூறியிருக்கிறோம். அன்றி வட்டெழுத்து பிராமியினின்றுமே வளர்ந்தது என்பதை நாம் மேலே காட்டியுள்ளோம் ஆதலின் இக்கொள்கையை நாம் அதிகமாக ஆராய வேண்டுவதில்லை.

இது பிராமியினின்றும் வளர்ச்சி யடைந்ததன்று என்றும், அந்தப் பிராமிக்கு மூலாதாரமாகக் கருதப்பட்ட பினிஷிய எழுத்துக்களின்றும் தமிழ் மக்களால் நேராக அமைத்துக்கொள்ளப்பட்டது என்றும் டாக்டர் பர்நெல் அபிப்பிராயப்படுகிறார் (Elements of South Indian Palaeography, ப. 49). தமிழ் நாட்டில் ஆரியர் குடியேறித் தங்கள் நாகரிகத்தைப் பரப்புவதற்கு முன்பு இது தோன்றியிருக்கவேண்டும் என்பதும் அதனால் இது பிராமியின் வழி வந்ததாக இருக்க முடியாது என்பதும் அவர் கொள்கை. ஆயினும் அவர் பிராமிக்கும் வட்டெழுத்துக்கும் உள்ள நெருங்கிய ஒற்றுமைகளைக் கவனிக்காமல் இல்லை.

டாக்டர் பீலர் இக்கொள்கையை மறுத்து, வட்டெழுத்து பிராமியினின்றும் வளர்ந்தது என்பதை ஒப்புக்கொள்கிறார் (பிராசீன இந்திய எழுத்துக்கள், பக்கம் 73). ஆயினும் இதை ஒரு தனிவகையாகக் கொள்ளமால் தமிழின் திரிபே என்று எண்ணுகிறார். ''மஹாராஷ்டிரர்களுடைய பாலபோதத்திற்கு மோடி என்பது எப்படியோ, (காஷ்மீரத்து) தோக்ரர்களுடைய சாரதா என்னும் லிபிக்குத் தாகரி என்பது எப்படியோ அதாவது தற்காலத்தில் வழங்கும் அச்செழுத்துக்களுக்குக் கணக்கர்களும் வியாபாரிகளும் எழுதும் எழுத்துக்கள் எவ்வகை உறவு கொண்டனவோ அப்படியே தமிழ் எழுத்துக்களுக்கு வட்டெழுத்துக்களாகும்'' (ஷை பக்கம் 75) என்று அவர் கூறுகிறார்.

இங்ஙனமாயின், வட்டெழுத்து, தனியான வளர்ச்சியைப் பெறாது தமிழின் திரிபாகவே இருத்தல் வேண்டும். இவ்விருவகை லிபிகளின் வளர்ச்சியையும் ஒற்றுமை வேறுபாடுகளையும் நன்கு கவனித்தால் இவ்விருவகையும் தனித்தனி வளர்ச்சியைப் பெற்றிருந்தன வென்பது புலப்படும். அன்றி, பாண்டி நாட்டில் சுமார் கி.பி. 1000-ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்த சாஸனங்களில் ஒன்றும் தமிழில் பொறிக்கப்பட்டதாகக் காணப்படவில்லை. யாவும் வட்டெழுத்திலேதான் உள்ளன. சோழர்களது ஆதிக்கம் நேராகப் பெறாத மலை நாட்டிலும், இவ்வெழுத்தே பெரும்பாலும் உபயோகப்பட்டுவந்தது. இதனால் வட்டெழுத்தை 'பிராமியினின்றும் தனியான வளர்ச்சியைப் பெற்றுப் பண்டைக்காலத்தில் பாண்டிமண்டலத்திலும் மலைநாட்டிலும், பிற்காலத்தில் மலை நாட்டிலும் வழங்கிவந்த ஒரு வகை எழுத்து என்று கூறலாம்.

இதுகாறும் கிடைத்துள்ள வட்டெழுத்துச் சாஸனங்களைக் கொண்டு அந்த லிபியின் வளர்ச்சியைப் பழையகாலம், மத்திய காலம், பிற்காலம் என மூன்று பிரிவுகளாக வகுக்கலாம்.

I. ***பழையகால எழுத்துக்கள்*** (Earlier variety) : சுமார் கி.பி. 950-ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்தவை. பாண்டியர்களின் முதல் ஸாம்ராஜ்யத்து அரசர்களுடைய சாஸனங்கள் இந்த வகையிற் பொறிக்கப் பட்டுள்ளன. முதல் ஏழு பத்திகள் இவ்வகை எழுத்துக்களைக் காட்டுவன.

பத்தி I : திருநாதர்குன்றுக் கல்வெட்டு (திருவாங்கூர் ஆர்க்கியலாஜிகல் ஸீரீஸ், முதல்வால்யூம், பக்கம் 231).

தமிழ்மொழியிற் கிடைக்கும் கல்வெட்டுக்களுள் மிகவும் பழமையானது இதுவே. இது பொறிக்கப்பட்ட காலத்தை நிச்சயிப்பதற்கு வேண்டிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆயினும், எழுத்துக்களின் வடிவங்களைக் கொண்டு இது சுமார் கி.பி. 300-ஆம் ஆண்டுக்கு அணித்தான காலத்தது என்று கூறலாம்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்துக் கல்வெட்டுக்கள் நமக்குக் கிடைக்காமையால் இது தமிழ், வட்டெழுத்து ஆகிய இவ்விருவகைகளுள் எதைச் சார்ந்தது என்பதை நாம் நிச்சயமாகக் கூறமுடியாது. எனினும், ஐ, ம, ந, ன ஆகிய எழுத்துக்களின் வடிவங்களைக் கொண்டு இது வட்டெழுத்தாக இருக்கக்கூடும் என ஊகிக்கலாம்.

பத்தி II : இதுவும் இதற்கு அடுத்த இரண்டு பத்திகளும் சுமார் கி.பி. 760-ஆம் ஆண்டில் பாண்டிய சிங்காதனம் ஏறிய நெடுஞ்சடையன் எனப்படும் ஜடிலவர்மன் பராந்தகனுடைய காலத்து மூன்று வேறு சாசன எழுத்துக்களைக் காட்டுவன. இவை அவனுடைய வேலங்குடி (சென்னைக் கண்காட்சிச் சாலை) ச் செப்பேடுகளின்றும் எடுக்கப்பட்டவை. (இந்தியன் ஆண்டிகுவரி, 22-வது வால்யூம்).

வட்டெழுத்து, பொதுவாக இடதுபுறம் சாய்ந்தே காணப்படும் எனினும் இவ்வெழுத்துக்கள் நிமிர்ந்து நிற்கின்றன. இவை போன்ற எழுத்துக்களை யுடைய சாஸனங்கள் வேறுசிலவும் உள. நிமிர்ந்துநிற்கும் எழுத்துக்கள் சாய்ந்துள்ள எழுத்துக்களைவிட பழமையான காலத்தவை என்று ஒரு சமயம் கருதப்பட்டுவந்தது. நாம் அவ்விதம் நிச்சயமாகக் கூறமுடியாது. நிமிர்ந்துநிற்கும் எழுத்துக்கள் பழைய சாஸனங்களிலே தான் காணப்படுகின்றன; ஆயினும் இவ்விருவகைகளும் சேர்ந்தே வழங்கி வந்தன. பிற்காலத்தில் இவை வழக்கொழிந்தன.

பத்தி III : அதே அரசனுடைய ஆனைமலைக் கல்வெட்டு எழுத்துக்கள் (எபி. இந். 8-வது வால்யூம்).

பத்தி IV : அதே அரசனுடைய வேள்விக்குடிச் செப்பேடுகள் (ஷை-17வது வால்யூம்).

பத்தி V : பாண்டிய அரசனான வரகுணவர்மனுடைய ஐவர்மலைக் கல்வெட்டு. (சக. 792) கி.பி. 870-ம் ஆண்டு,. (1905-ஆம் வருஷத்திய 705-நெ. கல்வெட்டு. இன்னும் வெளியிடப்படவில்லை.

பத்தி VI : பாண்டிய அரசனான வரகுணனுடைய திருச்செந்தூர்க் கல்வெட்டு. (எபி. இந். 21-ஆவது வால்யூம்.)

இதிற் காணப்படும் ஆய்தத்தின் உருவம் (37) கசாக்குடிச் செப்பேடுகளிற் காணப்படும் (படம் 4. பத்தி IV. வரி 37 உருவத்துடன் ஒப்பு நோக்குதற்குரியது.

பத்தி VII : பாண்டிய அரசனான இராஜஸிம்ஹனுடைய பெரிய சிம்மனூர்ச் செப்பேடுகள். கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி. (தென்னிந்திய சாஸனங்கள், மூன்றாவது வால்யூம், நான்காம் பாகம்.)

இக்காலத்து எழுத்துக்களின் முக்கிய அம்சங்களாவன:

(1) பலசமயங்களில் மெய்யெழுத்துக்களும், சிலசமயங்களில் எகர ஒகரக் குறில்களும் (IV - 14, 16) புள்ளியிடப்பட்டு வந்தன.

(2) யகரம் (20) இரண்டுவிதமாக எழுதப்பட்டு வந்தது. ஒன்று II, IV பத்திகளில் உள்ளதைப்போல மூன்று கோடுகளாலும் மற்றொன்று III-ல் உள்ளதைப்போல இடதுபுறம் ஒரு சுழியைக் கொண்டதாகவும் உள்ளது. அச்சுழி பொதுவாக உட்புறமே காணப்படும்.

(3) உயிர்மெய்யெழுத்தின் இகரக்குறி பொதுவாக வலது புறமே எழுதப்பட்டாலும் சிலசமயங்களில் எழுத்தின் தலைப்பிலும் (25-III) எழுதப்பட்டு வந்தது.

(4) ளு (37-IV) கு (12-II), ரு, ஓ (23-II) போன்ற எழுத்துக்களின் ஊகாரக்குறியின் நெடில் உருவம் சிலசமயங்களில் நேர்கோட்டின் அடிப்புறத்தில் ஒட்டப்பட்டுக் காணப்படுகின்றது.

(5) தமிழைப்போலவே, இவ்வகையிலும், மகரத்தின் வலது புறச் சுழி பூர்த்தி செய்யப்படாமலே இருக்கின்றது.

(6) உயிர்மெய்யெழுத்தின் எகரக்குறியின் தொடக்கத்தில் மேல்புறம் வரய்திறந்த ஒரு சிறிய கொக்கி உள்ளது.

ii. ***மத்திய கால எழுத்துக்கள்* (Middle variety)** : சுமார் கி.பி. 950-ஆம் ஆண்டுக்கும் சுமார் கி.பி. 1350-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்து எழுத்துக்கள் இந்த வகையைச் சார்ந்தனவென்று கூறலாம். பாண்டிமண்டலத்தில் முதலாம் இராஜராஜனுக்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்தனவாகக் கிடைக்கும் சோழசாஸனங்கள் இவ்வகையில்தான் உள்ளன. இராஜராஜனுடைய ஆட்சியின் முற்பகுதியிலும் சாஸனங்கள் இவ்வகையிலேதான் பொறிக்கப்பட்டன. அதற்குப் பிறகே அவை தமிழில் பொறிக்கப்படலாயின. மலை நாட்டிலும் 'ஆர்ய எழுத்து' வழக்கத்துக்கு வருவதற்கு முன்பு உபயோகப்பட்டுவந்தது வட்டெழுத்தின் வழக்கத்தின் இவ்வகையே. சோழர்களுடைய உறவினால் போலும், இவ்வகையின் உயிர்மெய்யெழுத்துக்களை எழுதுவதில் தமிழ் எழுத்துக்களிற் காணப்படும் சில பழக்கங்கள் தோன்றுகின்றன. 36-ஆவது வரியின் VII, VII பத்திகளில் உள்ள னோ என்னும் எழுத்தின் உருவங்களைக் கவனிக்க. VIII முதல் XI முடிய உள்ள பத்திகள் இந்தவகை எழுத்துக்களை காட்டுவன.

பத்தி VIII : முதற் பராந்தக சோழனுடைய ஆனைமலைக் கல்வெட்டு, கி.பி. 939-ஆம் ஆண்டு (தென்னிந்திய சாஸனங்கள், மூன்றாவது வால்யூம், மூன்றாம் பாகம்).

பத்தி IX : கி.பி. பதினோரம் நூற்றாண்டின் முற்குதியைச் சார்ந்தவனான வேணாட்டு அரசன் பாஸ்கரரவிவர்மனுடைய திருக்கடித்தானம் கல்வெட்டுக்கள். (திருவாங்கூர் ஆர்க்கியாலஜிகல் ஸீரீஸ், 2-ஆவது வால்யூம், முதல்பாகம்.)

பத்தி X, XI: உதயமார்த்தாண்டவர்மனுடைய கொல்லூர் மடம் செப்பேடுகளின்றும் எடுக்கப்பட்டவை. அந்தச் சாஸனத்தின் முற்பகுதி ஒருவராலும், பிற்பகுதி வேறொருவராலும் எழுதப்பட்டுள்ளது. அவ்விருவரும் இருவேறு விதமாக எழுதியிருக்கிறார்கள். அவ்விரு வகைகளையும் இந்தப் பத்திகள் காட்டுவன. கொல்லம் - 364, அதாவது கி.பி. 1188-ஆம் ஆண்டு. (திரு.ஆர். ஸீரீஸ், 4-ஆவது வால்யூம், முதல்பாகம்.)

இவ்வகையின் முக்கிய அம்சங்களாவன:

1. ண (15), த (16), ற (26), ன (27) முதலிய எழுத்துக்களின் அடிக்கோட்டை மேலே இழுத்து ஆரம்பத்துடன் சேர்த்து முழு வட்டங்களாகப்பட்டன.

2. கொ (10-VIII), சா (12-IX) முதலிய எழுத்துக்களின் குறுக்குக் கோடு நன்கு நீட்டப்பட்டிருப்பதே நெடில் உருவத்தைக் குறிக்கின்றது. அவ்வுருவம் தனியாக எழுதப்பட்டிருக்கவில்லை.

3. னா (28). இதன் பழைய வடிவம் வழக்கு வீழ்ந்து னகரத்துக்கு நெடில் உருவத்தைச் சேர்த்துப் புதிய உருவம் உண்டாயிற்று.

4. லு (IX-37, 38). இதற்கு இருவகை உருவங்கள் காணப்படுகின்றன.

5. புள்ளியிடும் பழக்கம் வழக்குவீழ்ந்து, எகர ஒகரங்களின் குறில் நெடில் வேறுபாடு தோன்ற, சில சமயங்களில் உயிர் மெய்யெழுத்துக்களுள் குறிலுருவத்துக்கு அதிகக் கோடுசேர்த்து நெடில் உருவமாக்கப்பட்டுக் காணப்படுகின்றது. (கொ, IX-30; கோ. IX-31. பொ, VIII-40; போ, VIII-41.)

iii. ***பிற்கால எழுத்துக்கள்*** (Later Variety) : சுமார் கி.பி. 1350-ஆம் ஆண்டுக்குப் பிற்காலத்து எழுத்துக்கள் இவ்வகையைச் சார்ந்தவை. நாளடைவில் இவை மலையாள எழுத்துக்களுக்கு உள்ள இயல்புகளையே பெற்றுவிட்டன. கடைசி இரண்டு பத்திகளைப் பார்த்தால் அது நன்கு விளங்கும். கடைசி மூன்று பத்திகள் இவ்வகை எழுத்துக்களைக் காட்டுவன.

பத்தி XII : கல்பாத்திக் கல்வெட்டு, சுமார் கி.பி. 15 ஆம் நூற்றாண்டு (எபி. இந். 15 - ஆவது வால்யூம்)

பத்தி XIII : கொச்சி அரசருக்கும் 'உலாந்தா கும்பெனி' எனப்படும் டச்சு கிழக்கிந்திய கம்பெனியாருக்கு ஏற்பட்ட உடன்படிக்கை பொறிக்கப் பட்டுள்ள பாலிய செப்பேடுகள். கி.பி. 1663-ஆம் ஆண்டு. (திரு.ஆர் ஸீரீஸ், முதல் வால்யூம்-நெ.IV)

பத்தி XIV; மின்சிறை மடத்துச் செப்பேடு. கி.பி. 1770-ஆம் ஆண்டு. (டி-பக்கம் 302.)

இவ்வகையில், ந, ப, ய, வ ஆகிய எழுத்துக்களும் அவற்றின் உயிர்மெய் வடிவங்களும், வேறுபாடு இல்லாமல் எழுதப்பட்டு வந்தன. ங, லை ஆகிய இரண்டுக்கும் வேறுபாடு தோன்றாது. ககரமும், சகரமும் ஒன்றைப்போலவே மற்றொன்று காணப்படும்.

வட்டெழுத்துச் சாஸனங்களை ஆராய்வதில் நமக்கு இரண்டு முக்கியமான இடையூறுகள் உள. காலத்தை நிச்சயமாகக் கூறக் கூடிய வட்டெழுத்துச் சாஸனங்கள் அதிகமாகக் கிடைக்காதது ஒன்று. பிற லிபிகளைப்போலன்றி, உயிர்மெய்யெழுத்துக்களின் உயிர்க்குறியை எழுதுவதில் பல முறைகள் காணப்படுவது மற்றொன்று. உயிர்மெய் யெழுத்துக்களில், சிலவற்றுக்குத் தனி உருவங்களும் காணப்படுகின்றன.

பிற்காலத்து வடிவத்தின் ஒருவகையே கோலெழுத்து எனப்படும். அது சமீபகாலம்வரையில் மலையாள தேசத்தில் வழக்கில் இருந்தது. வட்டெழுத்து இப்பொழுது முழுதும் வழக்கு வீழ்ந்துவிட்டது.

8
கலப்பு எழுத்துக்கள்

பாண்டிமண்டலத்தையும் மலைநாட்டையும் தவிர வெளியிடங்களிலும் வட்டெழுத்துச் சாஸனங்கள் கிடைக்கின்றன வென்பதை முன்னமே கூறியுள்ளோம். அவை சேலம் ஜில்லாவில் ஒட்டப்பட்டியிலும் (1910-ஆம் ஆண்டின் 211, 212-ஆம் நெ. சாஸனங்கள்) ஹனுமந்தபுரத்திலும் (எபி. இந்-7-ஆவது வ்hல்யூம்) மைசூர் சமஸ்தானம் கோலார் ஜில்லா முளுபாகல் தாலுகா ஹெப்பிணி என்னுமிடத்திலும் (ஷை) காணப்படுகின்றன. அக்கல்வெட்டுக்கள் வட்டெழுத்திலே பொறிக்கப்பட்டுள்ள வாயினும், சில எழுத்துக்கள் தமிழ் லிபியின் அம்சங்களைப் பெற்றுள்ளன. உதாரணமாகப் படம் 6 பத்தி IV-8-ஆவது வரியில் உள்ள டா என்பது தமிழ் வடிவத்தையே ஒத்திருப்பதைக் காணலாம்.

இனி, இப்பிரதேசத்தில் கிடைக்கும் தமிழ்க் கல்வெட்டுக்களிலும் வட்டெழுத்தின் அம்சங்கள் தோன்றுகின்றன. வட ஆர்க்காடு ஜில்லாவில் கீழ்முட்டுக்கூரிலும் (எபி. இந்.4-ஆவது வால்யூம்) குளிதிக்கியிலும் (ஷை-21-ஆவது வால்யூம்) கோலார் ஜில்லா முளுபாகல் தாலுகாவில் உள்ள பங்கவாடியிலும் (ஷை 7-ஆவது வால்யூம்) கிடைக்கும் சாஸனங்கள் இந்தவகையைச் சார்ந்தவை.

இங்ஙனம் தமிழ், வட்டெழுத்து ஆகிய இரு லிபிகளின் அம்சங்களையும் பெற்றுள்ள எழுத்துக்களிற் பொறிக்கப்பட்ட சாஸனங்கள்

சுமார் கி.பி. 900-ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தனவே. அவை கங்கவாடி, வாணகப்பாடி, வடகொங்கு என்று வழங்கி வந்த பிரதேசங்களிலும், அதாவது இப்பொழுது கோலார், வடஆர்க்காடு, சேலம் என்று வழங்கும் ஜில்லாக்களிலும், பாண்டி மண்டலத்தைச் சுற்றி ஒன்று இரண்டு இடங்களிலும் காணப்படுகின்றன.

இதனுடன் சேர்த்துள்ள படத்தை நன்கு கவனித்தால், இவ்வகையின் அம்சங்கள் விளங்கும்.

பத்தி I : வாதாபிகொண்ட பல்லவ நரஸிம்ஹனுடைய திருக்கழுக் குன்றத்துத் தமிழ்க் கல்வெட்டு சுமார் 650-ஆம் ஆண்டு (1909-ஆம் வருஷத்து 65-ஆம் நெ. சாஸனம் - படம் சென்னைச் சாஸன இலாகாவின் 1933-ஆம் ஆண்டு அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது).

பத்தி II : நரஸிம்ஹவர்மன் எனப்படும் (பாண?) அரசனுடைய கீழ்முட்டுக் கூர்த் தமிழ்க்கல்வெட்டு. சுமார் 750-ஆம் ஆண்டு (எபி. இந். 4-ஆவது வால்யூம்).

பத்தி III : பல்லவ அரசனான விஜய நந்தீசுவரவர்மனுடைய குளிதிக்கித் தமிழ்க் கல்வெட்டு. சுமார் கி.பி. 775-ஆம் ஆண்டு (ஷை 21-ஆவது வால்யூம்).

பத்தி IV : விஜய ஈச்சுவரவர்மனுடைய ஹனுமந்தபுரத்து வட்டெழுத்துக் கல்வெட்டு சுமார் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு (ஷை 7-ஆவது வால்யூம்)

பத்தி V : புதுக்கோட்டை சம்ஸ்தானத்தில் மலையடிப்பட்டியில் கிடைக்கும் கோதை மயிந்தனுடைய கல்வெட்டு. சுமார் கி.பி. 900-ஆம் ஆண்டு (ஸவுத் இந்தியன் அஸோஸியேஷன் ஜர்னல் 2-ஆவது வால்யூம்)

பொதுவாக நோக்குமிடத்து இக்கல்வெட்டு எழுத்துக்களைத் தமிழாகவோ வட்டெழுத்தாகவோ கொள்ளாமல் ஒரு தனி வகையாகக்

படம் - 6



படம் 6—தற்கால வடிவம்

	I	II	III	IV	V	I	II	III	IV	V	
1	..	அ	அ	..	அ	ரு	ரி	ரு	ரு	ரி	15
2	..	இ	..	ஈ	..	ல	லே	ல்	..	..	16
3	..	உ	ஏ	ஙா	..	வா	வா	வ	வ	வா	17
4	க	கா	கா	கொ	கா	ழு	..	ழி	ழா	ழி	18
5	ங	ங	ங்	..	..	ளு	..	ள	ள	..	19
6	சி	சி	ச	ச	சி	று	றா	றா	ற	ற	20
7	..	..	ஞா	..	..	ன	ன	ன	ன்	ன	21
8	ட	டா	டா	டா	ட	..	ஜ	ஜ	..	ஜெ	22
9	ணா	ணா	ணா	ணா	..	டி	டி	டி	..	டி	23
10	தா	தூ	தூ	தா	தா	..	கை	டை	டை	..	24
11	ந	நி	ந்	..	ந	..	கொ	கொ	டு	..	25
12	பொ	பா	ப	ப	பா	..	னெ	..	ற	..	26
13	மு	ம	மெ	ம	ம	ட்டு	ஊ	டு	டு	..	27
14	ய	யா	யா	யா	யி	..	தி	தி	..	தி	28
	I	II	III	IV	V	I	II	III	IV	V	

கூறுவது சிறிது சிரமமாகத்தானிருக்கும். ஒன்றிரண்டு சாஸனங்களில் மட்டும் இவ்விதம் இருவகை லிபிகளின் அம்சங்களும் காணப்பட்டால், இக்கலப்பு எழுதுவோர்களின் தவறால் நேரிட்டதோ என்று சந்தேகிக்கலாம். அவ்வாறன்றி, ஒரு குறிபிட்ட பிரதேசத்தில் கிடைக்கும் பழைய சாஸனங்களில் இவ்விதமான பழக்கம் அதிகமாகக் காணப்படுவதால், இதை ஒரு தனி வகையாகவே கொள்ளும்படி நேரிடுகின்றது. அன்றி, அந்தப் பிரதேசங்களில் வட்டெழுத்து காணப்படுவதினின்றும் பின்வருமாறு சந்தேகிக்கவும் இடமிருக்கின்றது :

பாண்டியர்களுடைய ஆதிக்கம் ஏற்பட்டதால், அந்தப் பிரதேசத்தில் வட்டெழுத்து காணப்படுகின்றது என்று கூறுவதற்கில்லை. ஏனெனில், வட்டெழுத்தில் காணப்படும் கல்வெட்டுக்கள் பாண்டியர்களுடையன வாகவோ அவர்களுடன் உறவு கொண்டவர்களுடையனவாகவோ இல்லை. அன்றி, பாண்டியர்கள் அந்நாட்டைப் பிடித்து ஆண்டுவந்தார்கள் என்றும் கூறமுடியாது. ஆதலின், ஒருகாலத்தில், வட்டெழுத்துத் தமிழ்நாடு முழுவதும் உபயோகிக்கப்பட்டு வந்தது என்றும், பல்லவர்கள் ஆதிக்கம் ஏற்பட்டு அவர்கள் கிரந்தத்தமிழை வழக்கத்திற்குக் கொணர்ந்த பிறகு வட்டெழுத்து அந்த அந்த நாடுகளில் வழக்கொழிந்தது என்றும், பல்லவர்கள் நேராக ஆதிக்கம் செலுத்தாத வாணகப்பாடி, கங்கவாடி, வடகொங்கு முதலியதேசங்களில் இவ்விரண்டுவகை லிபிகளும் கலந்து வழங்கிவந்தன என்றும் எண்ணவேண்டியிருக்கின்றது.

9
எண்கள்

''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'' என்பது மூதுரை. எண்ணும் எழுத்தும் பிரிக்க முடியாத தொடர்பை உடையன. பண்டை மக்கள் எண்ணை எழுத்தின் பகுதியாகவே கருதிவந்தார்கள். ஆதலின் எண்களின் வரிவடிவ வளர்ச்சியையும் கவனிப்போம்.

பண்டை மக்கள் எண்களைக் குறிக்கப் பலவித முறைகளை உபயோகித்து வந்தார்கள். அவற்றுள் முக்கியமானவை அங்கப்பள்ளி, அக்ஷரப்பள்ளி, பூதசங்கியை, கடபயாதி, பாராக்கடீ (Bārākhaḍi) முதலியனவாம்.

பூதசங்கியை : எணணைச் சில குறிப்பிட்ட சொற்களால் உணர்த்தும் பழக்கம் பழைய நூல்களிலும் சாஸனங்களிலும் காணப்படுகின்றது. உலகம் மூன்று என்பதையும், வேதம் நான்கு என்பதையும் யாவரும் அறிவர். அதனால் மூன்று, நான்கு எண்களை முறையே லோகம், வேதம் என்னும் சொற்களால் குறிப்பிடுவர். இவைபோல மற்ற எண்களுக்கும் உண்டு. இம்முறையே பூதசங்கியை எனப்படும்.

கடபயாதி : வடமொழி மெய்யெழுத்துக்களில் ஒவ்வொன்றுக்கும், அடியிற்கண்டபடி பூஜ்யம் முதல் ஒன்பது வரையில் உள்ள எண்மதிப்பைக் கொடுத்து இலக்கங்களுக்குப் பதிலாக அவ்வெழுத்துக்களை உபயோகிப்பதே கடபயாதி எனப்படும்.



இம்முறையில் உயிர் எழுத்துக்களுக்கும் கூட்டெழுத்துக்களில் காணும் உயிமெய்யெழுத்துக்கும் மதிப்புக் கிடையாது. இதுவும் மேல் கூறிய பூதசங்கியையும் வலதுபுறத்திலிருந்து இடதுபுறமாகவே நோக்கி எண்ணப்படவேண்டும்.

பாராக்கடீ : க, கா என்பன போன்ற எழுத்துக்களுக்கு 1, 2 என்று எண்மதிப்பு இட்டு அவற்றை உபயோகிப்பது ஒரு முறை. இம்முறையில், ககரம் முடிந்துவிட்டால், அதற்கு அடுத்த மெய்யெழுத்தை எடுத்துக் கொள்வார்கள். சில சமயங்களில், அகரம் ஊர்ந்த மெய்யெழுத்துக்களை முதலில் முடித்துவிட்டு, அதற்குப் பிறகு ஆகாரம் ஊர்ந்த எழுத்துக்களை எடுத்துக்கொள்வதும் உண்டு. இதுவே பாராக்கடீ எனப்படும். இது வடமொழியில் த்வாதசாக்ஷரீ எனவும், ஸித்தமாத்ரிகா எனவும் வழங்கப்பெறும்.

மேலே கூறிய மூன்று முறைகளுள், முதல் இரண்டும் சாஸனங்களில் காணப்படுகின்றன. ஆனால், மூன்றாவதோ சுவடிகளில் ஏடுகளை எண்ணிடுவதற்கே உபயோகப்பட்டு வந்தது. இம்முறைகள் இலக்கங்களின் வளர்ச்சியை அறிவதற்கு அவசியமல்லவாதலின் இவற்றை நாம் இங்கே அதிகமாக விளக்கவில்லை.

தமிழ்நாட்டுப் பழைய சாஸனங்களில் இலக்கங்கள் அதிகமாகக் காணப்படவில்லை. சாஸனம் வரையப்பட்ட காலத்தை ''கோவிசைய நந்திவிக்கிரமபருமற்கு யாண்டு அறுபத்தொன்றாவது'' என்று எழுத்தாலேயே எழுதி வந்தார்கள். ஆயினும், வேங்கி நாட்டில் கிடைக்கும் சாஸனங் களில் இலக்கங்கள் காணப்படுகின்றன. கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டுகளில் கிடைக்கும் தமிழ்ச் சாஸனங்களில், காலம், ''கோப்பரகேசரிபருமற்கு யாண்டு ங ய க முப்பத்தொன்றாவது'' என்பதுபோல முதலில் இலக்கத்தாலும் பிறகுஎண்மானம் என்று இப்பொழுது வழங்கப்பெறும் முறையில்) எழுத்தாலும் குறிக்கப்பட்டு வந்தது. பிற்காலத்துச் சாஸனங்களில் எண்கள் பொதுவாக இலக்கத்தாலேயே எழுதப்பட்டு வந்தன.

தமிழ் நாட்டிற்கிடைக்கும் எண்களுக்கும் வடநாட்டிற் கிடைப்பனவற்றுக்கும் இரண்டு முக்கியமான வித்தியாசங்கள் உள.

முதலாவது : தமிழ்நாட்டில் கிடைக்கும் எண்களில் ஒன்றுக்கு மேற்பட்ட ஸ்தானங்களையுடையவற்றுள் பத்து, நூறு, ஆயிரம் ஆகியவற்றுக்கே தனி உருவங்கள் உண்டு. 20, 200, 2000 ஆகியவற்றை எழுதும்போது உய, உ , உ என முதலில் இரண்டை எழுதி அதன் வலது பக்கத்தில் 10, 100, 1000-க்குரிய குறிகளையே எழுதுவார்கள். வடநாட்டிலோ, 20 முதல் 90 முடிய உள்ள ஒவ்வொரு பத்துக்கும் ஒரு தனி உருவம் உண்டு. 200 ஐயும் 2000த்தையும் எழுதுவதற்கு 100, 1000 என்பவற்றின் உருவங்களை இட்டு அவற்றின் வலதுபுறமாக அவற்றை ஒட்டியே ஒன்றைப் போடுவார்கள். அதே போல 300, 3000 ஆகியவற்றுக்கு இரண்டைப் போடுவார்கள். ஆனால் 400, 4000 முதலிய பிற எண்களுக்கு நூறு, ஆயிரம், ஆகியவற்றின் வலதுபுறம், 4 போல அந்த அந்த எண்கள் இடப்பட்டிருக்கும்.

இரண்டாவது : சுமார் கி.பி. 600-ஆம் ஆண்டுக்குப் பிறகு வடநாட்டுச் சாஸனங்களில் காணப்படும் எண்கள் நாம் இப்பொழுது எழுதுவதுபோலத்

தசாம்சமானத்தாலே எழுதப்பட்டுள்ளன. இம்முறை ***அங்கப்பள்ளி*** எனப்பெயர் பெறும். இதில் அவர்கள் பூஜ்யம் எனப்படும் சூன்யபிந்துவை உபயோகித்து வந்தார்கள். பழைய சாஸனங்களில் பூஜ்யம் ஒரு புள்ளியாகவே காணப்படும். பிற்காலத்திலேதான் அது ஒரு வட்டமாக மாறியது. தமிழ் நாட்டிலோ, எண்களை எழுதுவதில் இந்தப் பூஜ்யம் வழக்கத்திற்கு வரவில்லை. 2495 என்பதை (படம் 7-ன் அடியில் கவனிக்க) என்றே எழுதிவந்தார்கள். தசாம்சமானம் எனப்படும் அங்கப்பள்ளி தமிழ்நாட்டில் வழங்காததால், சாஸனங்களில் உள்ள எண்களின் இலக்கங் களுக்கு ஸ்தானமதிப்புக் கிடையாது. தமிழ்நாட்டுச் சாஸனங்களில், அரை, கால் போன்ற கீழ்வாயிலக்கங்களும் காணப்படுகின்றன. அவை சோழ சாஸனங்களிலேதான் அதிகமாக உள்ளன. படம் 7-இல், கி.பி. 1204-ஆம் ஆண்டில் வழங்கி வந்த 3/4, 1/2, 1/4, 1/8, ஆகியவற்றின் உருவங்கள் காட்டப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர, காணி முந்திரி போல்வனவற்றிற்கும், வடிவங்கள் காணப்படுகின்றன.

இவ்விடத்தில் நாம் கூறவேண்டுவது ஒன்று உண்டு. பழைய சாஸனங்களில் உள்ள எண்களில் சில, ஒரு முறையில் இல்லாமல் இரண்டு மூன்று முறைகள் கலந்து எழுதப்பட்டன. உதாரணமாகக் கலிங்க அரசனான தேவேந்த்ரவர்மனுடைய ஸ்ரீகாகுளம் செப்பேடுகளின் (எபி. இந். 3-ஆவது வால்யூம்) காலம் 183-ஆம் ஆண்டு என்று முதலில் எழுத்தாலும், பிறகு நூறு என்பதன் உருவத்தையும், பத்து ஸ்தான மதிப்பை உடைய 8 ஐயும் (80-ன் உ0வம் காணப்படவில்லை), மூன்று என்பதைத் தெரிவிக்கும் 'லோகம்' என்னும் பூதசங்கியைச் சொல்லின் முதல் எழுத்தான 'லோ' என்பதையும் கொண்டும் வரையப்பட்டுள்ளது. அதே செப்பேடுகளில் நாளைக் குறிக்கும் 20 என்பது பத்துஸ்தான மதிப்பையுடைய 2 ஐயும், அதன் வலது பக்கத்தில் ஒரு பூஜ்யத்தையும் கொண்டுள்ளது.

தமிழ் இலக்கங்களின் வடிவ வளர்ச்சியைப் படம் 7 காட்டுகின்றது.

படம் - 7



பத்தி I : சாதவாகன மன்னர்களான கௌதமீபுத்ர சதகர்ணி, வாசிஷ்டீபுத்ர ஸ்ரீ புளுமாயி ஆகியவர்களுடைய நாசிக் கல்வெட்டுக்கள். சுமார் கி.பி. 100-150 ஆம் ஆண்டு (பர்ஜஸ் எழுதிய மேற்கிந்திய புராதனச்சின்ன ஸர்வே அறிக்கை, 4-வது வால்யூம்)

பத்தி II : இக்ஷ்வாகு வமிசத்து அரசன் ஸ்ரீ வீரபுருஷதத்தனுடைய நாகார்ஜுனிகொண்டா கல்வெட்டுக்கள். கி.பி. 3-ஆம் நூற்றாண்டு (எபி. இந். 20-ஆவது வால்யூம்).

பத்தி III : பல்லவவமிசத்து அரசி சாருதேவியின் பிரிட்டிஷ் ம்யூஸியம் செப்பேடுகள். சுமார் கி.பி. 300-ஆம் ஆண்டு (ஷை 8-ஆவது வால்யூம்)

பத்தி IV : கி.பி. நான்காம் நூற்றாண்டைச் சார்ந்தவன் என்று கூறக்கூடிய ஆனந்தகோத்திரத்து அரசன் தாமோதரவர்மனுடைய மட்டப்பாடுச் செப்பேடுகள் (ஷை 17-ஆவது வால்யூம்).

பத்தி V : பல்லவ அரசனான ஸிம்ஹவர்மனுடைய பிகிராச் செப்பேடுகள் சுமார் கி.பி. 5-ம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்தவை (ஷை 8-ஆவது வால்யூம்).

பத்தி VI : சுமார் கி.பி. 760-ம் ஆண்டில் பாண்டிய சிங்காதனம் ஏறிய ஜடிலவர்ம பராந்தகனுடைய வேலங்குடி (சென்னைக் கண்காட்சிச்சாலை)ச் செப்பேடுகள் (இந். ஆண். 20-ஆவது வால்யூம்).

பத்தி VII : சுமார் கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்த பாண்டிய அரசன் ராஜஸிம்ஹனுடைய பெரிய சின்னமனூர்ச் செப்பேடுகள் (தெ. இ. சாஸனங்கள், 3-ஆவது வால்யூம், நான்காம் பாகம்).

பத்தி VIII : சோழ அரசனான ஆதித்ய கரிகாலன் (II) எனப்படும் பார்த்திவேந்த்ரவர்மனுடைய உத்திரமேரூர்க் கல்வெட்டு, கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் மூன்றாம் பாதம் (ஷை மூன்றாம் பாகம்). அடியிற் காட்டப்பட்ட 2495 என்னும் எண் இக் கல்வெட்டினின்றும் எடுக்கப்பட்டது.

பத்தி IX : முதலாம் இராஜேந்திர சோழனுடைய திருவாலங்காட்டுச் செப்பேடுகள் சுமார் கி.பி. 1025-ஆம் ஆண்டு (ஷை).

பத்தி X : வேணாட்டு அரசன் உதயமார்த்தாண்ட வர்மனுடைய கொல்லூர்மடம் செப்பேடுகள். கி.பி. 1188-ஆம் ஆண்டு (திரு.ஆர்.ஸீரீஸ். 4 வது வால்யூம்).

பத்தி XI : மூன்றாம் குலோத்துங்க சோழனுடைய திருக்களர்ச் செப்பேடுகள், கி.பி. 1204-ஆம் ஆண்டு (தெ. இ. சாஸனங்கள், 3-ஆவது வால்யூம், நான்காம் பாகம்). கீழ்வாயிலக்க உருவங்கள் இச்செப்பேடுகளில் காணப்படுவனவாகும்.

பத்தி XII : திருநெல்வேலிச் சீமையை ஆண்டுவந்த பிற்காலத்துப் பாண்டிய அரசர்களான , ஸ்ரீ வல்லபன், வரதுங்கராமன் ஆகியவர் களுடைய புதுக்கோட்டைச் செப்பேடுகள். (சக. 1505) கி.பி. 1583-ஆம் ஆண்டு (திரு.ஆர்.ஸீரீஸ். முதல் வால்யூம்).

முதலில் ஒரு படுத்த கோடாக இருந்த 1, கி.பி. 10-ஆம் நூற்றாண்டில், ஒரு குறுக்குக் கோட்டையும் எப்படி அடைந்தது என்பது நன்கு விளங்கவில்லை. படுத்த கோடு பழைய சாஸனங்களில் வாக்கிய முடிவுகளையும், செய்யுட்பகுதிகளின் முடிவுகளையும் குறிப்பதற்காகப் பலவிடங்களில் உபயோகிக்கப்பட்டுள்ளது. அதனினின்றும் வேறாக இலக்கம் என்பது தெரிவதற்காகவே குறுக்குக்கோடு சேர்க்கப்பட்டது போலும்.

2ம், 3ம் முறையே இரண்டு நேர்கோடுகளையும், மூன்று நேர்கோடு களையும் ஓலைகளில் எழுதுவோர் கையை எடுக்காமல் வேகமாக எழுதுவதால் அடைந்த உருவங்களே.

நூறு, ஆயிரம் ஆகியவற்றின் வளர்ச்சியைத் தொடர்ச்சியாக விளக்குவதற்கான உருவங்கள் பழைய சாஸனங்களில் காணப்படா விடினும், கிடைத்துள்ளனவற்றால், நாம் ஒருவாறு அவ் வளர்ச்சியை ஊகித்துக் கொள்ளலாம்.

படத்தை நன்கு கவனித்தால் கிரந்தம், தமிழ், வட்டெழுத்து ஆகிய லிபிகளைப்போல எண்களும் பிராமியினின்று வளர்ச்சியடைந்தன வென்பது பெறப்படும்.

கடைசி இரண்டுபத்திகள் ***அக்ஷரப்பள்ளி*** என்னும் வகையைக் காட்டுகின்றன.

பத்தி XII : பாண்டிய அரசனான பராந்தகன் நெடுஞ்சடையனுடைய வேள்விக்குடிச் செப்பேடுகள். கி.பி. சுமார் 775-ஆம் ஆண்டு (எபி. இந். 17-ஆவது வால்யூம்).

பத்தி XIV : சுந்தர சோழனுடைய அன்பில் செப்பேடுகள். சுமார் கி.பி. பத்தாம் நூற்றாண்டின் மூன்றாம் பாதம் (ஷெ 15-ஆவது வால்யூம்).

சில குறிப்பிட்ட எழுத்துக்களுக்கு எண் மதிப்பு இட்டு இலக்கங்களுக்குப் பதிலாக அந்த எழுத்துக்களை வழங்குவதாகும் இம்முறை. தென்னாட்டில் ஒன்று முதல் பத்து வரையில் உள்ள எண்களுக்கு முறையே  ஆகிய எழுத்துக்களை வழங்குவார்கள். பதினொன்றை 8ற என்று எழுதுவார்கள். 20 முதல் 90 வரையில் உள்ள ஒவ்வொரு பத்துக்கும், நூறு, ஆயிரம் ஆகியவற்றுக்கும் தனித்தனி எழுத்துக்கள் உண்டு.

இஃது இப்பொழுது தமிழ்நாட்டில் வழக்கத்தில் இல்லை. என்றாலும், மலைநாட்டில் இருக்கிறது. அங்கே இது சுவடிகளின் ஏடுகளை இலக்க மிடுவதற்கே உபயோகப்படுகின்றது. மலையாளத்தில் நகர, ணகரம் என்ற இரண்டு எழுத்துக்களுக்கும் பொதுவாக ന என்று நகரத்தையே உபயோகிப்பார்கள். அதுவே வேள்விக்குடிச் செப்பேடுகளில் ஒன்றுக்கு இடப்பட்ட உருவம். அன்பில் செப்பேடுகளில் இது 'ண' கரமாகக் காணப்படுகின்றது.

வடநாட்டில் இம்முறை சுவடிகளின் ஏடுகளை எண்ணிடுவதற்கு உபயோகிக்கப்பட்டுள்ளது. பழைய சுவடிகளில் உள்ள உருவங்கள் அக்காலத்தில் வழங்கிவந்த இலக்கங்களின் உருவங்களையே பெரிதும் ஒத்திருக்கின்றன. பிற்காலத்துச் சுவடிகளில், இவ்வெழுத்துக்களின் வடிவங்களும். அச்சுவடிகள் எழுதப்பட்ட காலத்து இலக்கங்களின் வடிவங்களும் வேறுபட்டுள்ளன.

மிகப்பழைய சாஸனங்களிலும், நாணயங்களிலும் காணப்படும் இலக்கங்களை இவ்வித எண்மதிப்பு உள்ள எழுத்துக்களாகவே ஆசிரியர் சிலர் கருதுகிறார்கள். அதனால், இந்திய மக்கள் முதலில் சில எழுத்துக் களுக்கு எண் மதிப்பு இட்டு அவற்றை இலக்கங்களாக உபயோகித்து வந்தார்களாதலால் எண்களின் உருவங்களை ஏற்படுத்திக்கொள்ளவில்லை

யென்றும், நாளடைவில் அவ்வெழுத்துக்களின் உருவங்களே இலக்கங்களாக மாறிவிட்டனவென்றும் அன்னோர் கூறுகின்றனர்.

இக்கொள்கை சரியானதென்று நாம் கூறமுடியாது. முதலில் ஏன் சில குறிப்பிட்ட எழுத்துக்களுக்கு மட்டில் -அவற்றுள் சில த்வந்த்வாக்ஷரங்கள் - எண் மதிப்பிட்டார்கள் என்பது விளங்கவில்லை. அன்றி இக்கொள்கை சரியானதாக இருந்தால், எண்மதிப்பை உடைய எழுத்துக்களில் வேறுபாடு இல்லாமல் இருக்கவேண்டும். அங்ஙன இல்லை. உதாரணமாக, வடநாட்டில்  என்னும் அக்ஷரம் 4-என்னும் எண்ணைக் குறிக்கும். ஆனால் தென்னாட்டிலோ 4-க்கு என்னும் அக்ஷரம் உபயோகப்படுகின்றது. அதேபோல வடநாட்டில் ஓ என்பது 9 ஐக் குறிக்கும்; தென்னாட்டில் என்பது அந்த மதிப்பைக் கொண்டது. இங்ஙனம் எண்மதிப்பையுடைய எழுத்துக்கள் தேசந்தோறும் வேறுபடுகின்றன. ஆனால் அவற்றுக்கு இடப்படும் உருவங்களோ பொதுவாக ஒரேவிதமாக உள்ளன.

இதனால், அக்ஷரப்பள்ளி என்பது முதலில் ஏற்பட்டதன்று எனவும், ஒருகாலத்தில், எண்களை நூல்களின் மத்தியில் குறிக்க நேரிட்டபொழுது அவ்விலக்கங்களைப் பெரிதும் ஒத்த அக்ஷரங்களின் மதிப்பை அதற்கு இட்டு வழங்கினார்கள் எனவும் கூறலாம். சுமார் கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்துவந்த ***மலயகிரி*** என்னும் ஜைன ஆசிரியர் 4 ஐ 'ங்கசப்தம்' என்று கூறுவதும் இதனையே வலியுறுத்தும். இது, 'அவலக்ஷணம்' என்பதை 'எட்டே கால் லக்ஷணம்' என்று இப்பொழுது கூறும் தமிழ்நாட்டு வழக்கத்தைப் போன்றது எனக் கொள்ளலாம். ஆதலின் தமிழ்நாட்டில் வழங்கிவரும் இலக்கங்கள் எல்லாம், எழுத்துக்களைப் போலவே, பிராமியினின்றும் பெறப்பட்டவை என்பது நன்கு விளங்கும்.

10

எழுத்து வித்தையின் வரலாறு

இப்பொழுது வழங்கிவரும் தமிழ் எழுத்துக்களும் எண்களும் பிராமியினின்று வளர்ச்சிபெற்றன வென்பதையும், தமிழ் நாட்டிற் கிடைக்கும் பழைய கல்வெட்டுக்கள் பிராமி லிபியிலே உள்ளனவென் பதையும் நாம் முன்பு விளக்கியுள்ளோம். அங்ஙனமாயின், இப்பொழுது கிடைக்கும் பழைய தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பிய ஆசிரியர் காலத்திலே தமிழுக்குப் பிராமியின் வரிவடிவமே வழங்கியதா? அல்லது தமிழுக்கெனத் தனியாக ஒரு லிபி வழக்கிலிருந்து பிற்காலத்தில் இறந்தொழிந்ததா? இதனை அறியவேண்டுவது அவசியம்.

தொல்காப்பியனார் தமது நூலில், அக்காலத்தில் வழங்கிவந்த எழுத்துக்கள் எவ்விதம் வரிவடிவில் எழுதப்பட்டன வென்பதைக் குறிப்பிடவில்லை; ஆயினும் சில எழுத்துக்கள் புள்ளி பெற்று நிற்பதை மாத்திரம் குறிப்பிட்டுள்ளார். அவ்வெழுத்துக்கள் குற்றியலிகரம், குற்றியலுகரம், மகரக்குறுக்கம், ஆய்தம், மெய்யெழுத்து, எகரம், ஒகரம் என்பன.

உயிரெழுத்துக்களுள் அ, இ, உ, எ, ஒ ஆகிய ஐந்தும் தமக்கு இனமான நெடில்களை உடையன. அ, இ, உ ஆகிய மூன்றுக்கும் இனமாகிய நெடிலைத் தெரிவிக்க அக்குறில் உருவத்துக்கு ஓர் அதிகப்படியான குறி சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால், எகரம், ஒகரம் ஆகிய இரண்டின் விஷயத்தில் குறிலைக் குறிக்கும்பொழுது அதிகப்படியான புள்ளி

சேர்க்கப்பட்டுள்ளன. குறிலின் நீட்சியே நெடில். ஆதலின் நெடிலின் வேறுபாடு விளங்கக் குறிலுருவத்துக்கு அதிகப்படியான குறியிட்டு நெடிலை உணர்த்துவதே இயற்கை. எகர ஒகரங்கள் அந்தப் பொதுவிதிக்கு மாறுபட்டுள்ளன. ஆசிரியரும் அ, இ, உ ஆகியவற்றுக்குரிய நெடிலுருவத்தைப் பற்றிக் குறிப்பிடாமல் இவ்விரண்டை மட்டிலும் சிறப்பாக எடுத்துக் கூறுகிறார்.

ஆதலின் எகர ஒகரங்களுக்குக் குறில் இல்லாமல் நெடிலே வழங்கும் ஒருவகையினின்றும் இவ்வெழுத்துக்களின் உருவங்களைப் பெற்றிருத்தல் வேண்டும் என்றே நாம் எண்ணவேண்டியிருக்கிறது. வடமொழியில் எகர ஒகரங்கள் நெடிலையே குறிக்கும். அவற்றிற்கு வடநாட்டார் இட்ட குறிகளை அவ்வாறே தமிழிலும் நெடிலுக்கு மேற்கொண்டு, அந்நாட்டாரால் வழங்கப்படாத குறிலையுணர்த்த வேறுகுறிகளை அமைக்கவேண்டி வந்தது போலும். புள்ளியினால் மாத்திரைக் குறைவை அறிவித்தலைப் பிற புள்ளியிட்ட எழுத்துக்களால் அறியலாம். அதைப்போலவே எகர ஒகரங்களின் திறத்திலும் நெடிலினின்று குறைந்த குறிலை உணர்த்தப் புள்ளி யிட்டனர் என்றே கொள்ளவேண்டும்.

இதனால் தொல்காப்பியனார் காலத்தில் வழக்கிலே இருந்த லிபி வடமொழியாளர் வழங்கிவந்த ஒருவகை லிபியே என்பது தெரிய வரும். அவ்விதம் அக்காலத்தில் வழக்கில் இருந்தது பிராமி லிபியே. ஆதலின் தொல்காப்பியனார் காலத்தில் வழக்கில் இருந்ததும் பிராமியேயாகும் என்று ஊகிக்கவேண்டியிருக்கிறது.

இந்தப் பிராமிக்கு மூலாதாரந்தான் யாது? இதை நாம் ஆராய்வதற்கு முன்பு எழுத்து வித்தையின் வரலாற்றை அறிந்து கொள்ள வேண்டுவ்து அவசியம்.

உலகத்தின் பல பாகங்களில் வசிக்கும் பல்வேறு வகுப்பைச் சேர்ந்த மக்கள் ஒன்றற்கொன்று சம்பந்தமில்லாத நாகரிகத்தை உடையவர்கள்; அவர்கள் தனித்தனியான பாஷைகளைப் பேசி வருகிறார்கள். ஆயினும்,

அவர்களிடையில் வழங்கும் எழுத்து முறைகளைக் கவனித்தால், அவற்றின் உற்பத்தியும் வளர்ச்சியும் ஒருவிதமாகவே காணப்படுகின்றன.

எழுத்து வித்தையை ஆராய்ந்த ஆசிரியர்கள் அதன் வளர்ச்சியைச் சித்திர எழுத்து என்றும், ஒலியெழுத்து என்றும் இரு பெரும்பிரிவுகளாக வகுப்பார்கள்; இவ்விரு பெரும்பிரிவுகளுள் ஒவ்வொன்றையும் இரண்டிரண்டாக வகுத்துப் பின் வருமாறு நான்கு பாகங்களாகக் கூறுவார்கள் :

(1) நாகரிகமற்ற காட்டு மக்கள் எழுதிய சித்திரங்கள்.

(2) சித்திரிக்கப்பட்ட உருவத்தை, அதன் பெயரைக் கொண்ட அல்லது சங்கேதத்தால் நிச்சயிக்கப்பட்ட ஒரு பொருளையோ தொழிலையோ குறிப்பதற்கு உபயோகப்படுத்துவது.

(3) ஒலியைக்கொண்டு சொற்களைச் சில பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் தனித்தனி உருவங்களை அமைத்து எழுதப்பெறும் ஒலிக்குறிகள்.

(1) நெடுங்கணக்கெழுத்து (Alphabet)

ஒருவன் வாயால் பேசாமல் தன் மனத்தில் உள்ளதைப் பிறனொருவனுக்கு அறிவிப்பதாகவோ, வேறொரு சமயத்தில் தானே ஞாபகப்படுத்திக் கொள்ளுவதற்காகவோ உபயோகப்படுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டது எழுத்துவித்தை. மொழி எப்படி வளர்ந்ததோ அதைப்போலவே எழுத்துவித்தையும் வளர்ந்தது; அதன் வளர்ச்சியும் ஒரு சரித்திரமாகும். அது விரிப்பின் பெருகுமாயினும் சுருக்கமாகக் கூறுவோம்:

முதலில் மக்கள் தாங்கள் பிறருக்கு அறிவிக்க வேண்டியவற்றைச் சித்திர ரூபமாகவே எழுதி வந்தார்கள். நாகரிகத்தாலும் அதனால் ஏற்படும் எண்ணங்களாலும் சக்திகளாலும் முன்னேற்றமடையாத அவர்கள், அங்ஙனம் அறிவிக்கும்படி நேரிட்டவை மிகவும் சாதாரணமான

செய்திகளாகவே இருந்திருக்கும். அதனால் அவர்கள் எதைக் குறிக்க விரும்பினார்களோ அதை அப்படியே உருவகப்படுத்திச் சித்திரமாக எழுதிக் காட்டினார்கள். அந்தச் சித்திரங்களைப் பார்த்தால், உருவகப்படுத்தப்பட்ட பொருளே மனத்தில் தோன்றும். அதனால் தெரிவிக்க விரும்பிய செய்தியைச் சிறிது ஊகித்து யோசனை செய்தே அறியவேண்டும்.



இங்கே காட்டப்பட்டுள்ள சித்திரம் அமெரிக்காவில் உள்ள 'இந்தியர்'களில் ஒருவன் தன்மகனை உடனே புறப்பட்டு வரும்படியாகவும், அந்தச் செலவுக்காக ஐம்பத்து 'டாலர்'கள் அனுப்பியிருப்பதாகவும் தெரிவித்து எழுதப்பட்ட கடிதத்தைக் காட்டுவது (வாஷிங்டன் நகரத்து ஸ்மித் ஸோனியன் இன்ஸ்டிடியூட் வருஷாந்தர அறிக்கை, 1882-

3-ஆம் வருஷம்.) 'ஆமைக்குல'த்தைச் சார்ந்த 'மனைவியைப் பின்பற்றும் மெய்யன்' என்னும் அவன், பெண் ஆமையைத் தொடரும் ஆண் ஆமையுடன் சேர்ந்து நிற்கும் மனித உருவத்தால் குறிக்கப்பட்டுள்ளான். 'சின்னப் பையன்' என்னும் அவன் மகன் குழந்தையுடன் சேர்ந்து நிற்கும் மற்றொரு மனித உருவத்தால் காட்டப்பட்டிருக்கிறான். புறப்பட்டு வரவேண்டும் என்பது தந்தை மகனை இழுப்பதுபோலத் தோன்றும் ஒரு கோட்டாலும், பணம் அனுப்பிய செய்தி பக்கத்தில் போடப்பட்டுள்ள ஐம்பத்து மூன்று சிறு சுழிகளாலும் புலப்படுத்தப்பட்டுள்ளன.

காலக்கிரமத்தில் நீண்ட செய்திகளையும் தொழில்களையும் தெரிவிக்க நேரிட்டபொழுது, முன்னமே உள்ள சித்திரங்களுக்கு அதிகப்பட்ட மதிப்புக்களைக் கொடுக்கவும் புதிய சித்திரங்களை உண்டாக்கவும் அவசியம் உண்டாயிற்று.



இந்தச் சித்திரம் வட அமெரிக்காவில் வசிக்கும் வேட்டுவ ஜாதியினர் ஸுபீரியர் (Superior) ஏரியைத் தாண்டிச் சென்ற செய்தியைத் தெரிவிக்கின்றது. ஐம்பத்தோராட்களை யுடைய அந்தக் கோஷ்டி

கிஷ்கெமுநாவஸி (Kishkemunazee-மீன்கொத்தி) என்னும் பெயரையுடைய வனைத் தலைவனாகக் கொண்டு ஐந்து படகுகளில் அந்த ஏரியை மூன்று தினங்களில் கடந்து சென்றது என்று கூறுகின்றது இந்தச் சித்திரம். மீன்கொத்திப் பறவையின் உருவத்தால் குதிரையின்மேல் சவாரி செய்யும் தலைவன் அந்தப் பெயரையுடையவன் என்பதும், உடும்பின் உருவத்தால் அவன் அக்கரை சேர்ந்த செய்தியும், வானத்தின் கீழ்க் காட்டப்பட்டுள்ள மூன்று சூரிய உருவங்களால் ஏரியைக் கடப்பதற்கு மூன்று தினங்கள் ஆயினவென்பதும் தெரியவரும். உடும்பின் உருவம் அந்தப் பிராணியைக் குறிக்காமல் சங்கேதத்தால் நிலத்தைக் குறிக்கின்றது. சீனா, எகிப்து முதலிய தேசங்களில் இவ்விதமான சங்கேதக் குறிகள் பல கிடைக்கின்றன. உதாரணமாக : நடைக்குக் கால்களும், பார்வைக்குக் கண்ணும், அதிகாரத்துக்குக் கையும், பலத்துக்குப் புஜமும் எழுதப்பட்டுள்ளன. இந்தச் சித்திரத்தில் உள்ள மீன்கொத்தியின் உருவம் அந்தப் பறவையைக் குறிக்காமல், அப்பறவையின் பெயரையுடைய தலைவனைக் குறித்து நிற்கின்றது. இம்முறையை ஒலியெழுத்தின் அடிப்படையாகக் கருதலாம்.

சீனதேசத்து மொழியைப் போல, ஒரே அசையையுடைய (Monosyllable) சொற்களைக்கொண்ட மொழிகளில் ஒரே சொல் பல பொருள்களைக் குறித்து நிற்கையில், உபயோகிக்கப்பட்ட சொல் எந்தப் பொருளைக் குறிக்கின்றது என்பதைத் தெரிவிக்க ஒரு நூதன முறையைக் கையாண்டார்கள். அவ்வுருவங்கள் 'ஒலியும் பொருளும்' தெரிவிப்பனவாக உள்ளன. உதாரணமாக, சௌ என்னும் சீனமொழிச்சொல் கப்பலைக்



குறிக்குமாயினும், (அண்டா) பாத்திரத்தையும், வளவளவென்று பேசுவதையும் குறிக்கும். கப்பலைக் குறிக்காமல் (அண்டா) பாத்திரத்தைக் குறிப்பதாக எழுதும்போது சௌ உருவத்துக்கு நீரின் உருவத்தைக் கூடச் சேர்ப்பார்கள். வளவளவென்று பேசுவதாக எழுதும் போது சௌ உருவத்துக்குப் பேச்சின் உருவத்தைக் கூடச் சேர்ப்பார்கள்.

மேலே கூறியவை சித்திர எழுத்துக்களைக் குறிப்பனவாகும். நாளடைவில், ஒரு பொருளைக் குறிக்க எழுதப்பட்ட சித்திரம் அந்தப் பொருளின் பெயரைக் குறிப்பதாக மாறியது. அதுவே ஒலியெழுத்தாகும்.

நாளாக ஆக இவ்விதமான குறிகள் அதிகமாகிவிட்டனவாதலாலும், அக்குறிகளைக்கொண்டு தொடர்மொழிகளையும் வாக்கியங்களையும் எழுதுவது சிரமமாகத் தோன்றியபடியாலும் வார்த்தைகளை அசைகளாகவும் சீர்களாகவும் பிரித்து ஒவ்வோர் அசைக்கோ சீர்க்கோ ஒவ்வோர் உருவத்தை எழுதி அவற்றைச் சேர்த்து வாசித்து வந்தார்கள் போலும். இப்படி எழுதப்பட்டுள்ளவை மெக்ஸிகோ எகிப்து முதலிய தேசங்களில் அதிகமாகக் காணப்படுகின்றன. மெக்ஸிகோ தேசத்தார்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய பிறகு பாடர் நாஸ்டர் (Pator Noster) என்னும் லத்தின் சொற்களை இந்தச் சித்திரத்தில் உள்ளபடி ***பாடே நாச்டே*** என்று எழுதி வந்தார்கள். (அவர்கள் மொழியில் ரகரம் இல்லை.)



இதுவும் சிரமமாக இருந்ததால், சில குறிப்பிட்ட குறிகளைப் பொறுக்கி எடுத்து ஒவ்வொன்றையும் அது தெரிவிக்கும் வார்த்தையில் முக்கியமான ஒலியின் குறியாகக்கொண்டார்கள். எகிப்திய பாஷையில் ரொ என்னும் சொல் வாயைக்குறிக்கும். ஆதலின், ரொ அல்லது ர என்னும் எழுத்தை எழுத வேண்டிய இடங்களிலெல்லாம் அவர்கள் வாயின் குறியையே எழுதினார்கள். நெடுங்கணக்கெழுத்தின் வரிவடிவப் பிறப்பு இவ்விதமேயாகும்.

எகிப்தியர்கள் இவ்விதம் நெடுங்கணக்கெழுத்துக்களைத் தெரிந்து அமைத்துவிட்டாலும் தனியாக அவற்றைக்கொண்டே எழுதுவதற்குத் துணியவில்லை. அதனால் அவர்கள் வெகுகாலம் ஒலிக்குறிகளையும், நெடுங்கணக்கெழுத்துக்களையும் கீழ்வரும் சித்திரத்தில் உள்ளது போலக் கலந்தே எழுதிவந்தார்கள்.



''சூரியதேவனாகிய நான் அவனுடைய எதிரிகளை நோக்கி அடிவானத்திலிருந்து வருகிறேன்'' என்பது எழுதப்பட்டுள்ள இந்தச் சித்திரத்தில் நடை என்னும் தொழிலைக் குறிக்கும் **பர்** என்பதன் கீழே நடையைக் குறிக்கும் தாள்கள் எழுதப்பட்டுள்ளன. அதேபோல எதிரியைத் தெரிவிக்கும் க்ஸெப்டு என்னும் வார்த்தைக்குப் பக்கத்தில், எதிரியின் உருவமும், பன்மையைத் தெரிவிக்கும் மூன்று கோடுகளும் எழுதப்பட்டிருக்கின்றன.

இப்பொழுது வழங்கிவரும் பலவகை லிபிகளின் எழுத்துக்களுக்கும் அவற்றிற்கு மூலமாக இருந்த குறிகளுக்கும் ஒருவித ஒற்றுமையும் காணப்படாமல் இருக்கலாம். அவ்விதம் நேர்ந்ததற்கு எழுதுவோர்கள் செய்த மாறுதல்களே காரணமாகும். பின்வரும் சித்திரத்தில் சீன எழுத்துக்களுள் சில எவ்விதம் மாறி உருத்தெரியாமல் போய்விட்டன என்பது நன்குகாட்டப்பட்டுள்ளது.





பலவகை ஜாதி மக்களும் முதலில் எழுதிய சித்திரங்கள் ஒரேவிதமாக இருந்தாலும் அவை காலக்கிரமத்தில் அடைந்த மாறுதல்களால் ஒன்றற்கொன்று சிறிதும் சம்பந்தமில்லாமல் தோற்றும் நிலையை அடையும் என்பதும் பின்வரும் சித்திரத்தால் நன்கு விளங்கும்.

இவ்விதமாக வளர்ச்சியடைந்த எழுத்துவித்தையைத் **தேவகலை** என்று ஓர் ஆசிரியர் கூறியது முற்றிலும் பொருத்தமானதே.

இவ்விதமான சித்திர எழுத்துக்களும் அவற்றின் வடிவ வளர்ச்சிக் குறிகளும் இந்தியாவிலும் காணப்படும் என்று எதிர்பார்ப்பது மிகையன்று.

ஆனால் மொஹெஞ்சோதாரோ, ஹாரப்பா முதலிய இடங்களில் கிடைப்பவற்றைத் தவிர, வேறு ஒன்றும் இந்தியாவிற் கிடைக்கவில்லை. அவற்றைப்பற்றிக்கூட ஆசிரியர் பலவிதமாகக் கூறுவர். ஆயினும் பழைய இலக்கியங்களில் சில குறிப்புகள் காணப்படுகின்றன..

யாப்பருங்கலவிருத்தியில் கடைசிச் சூத்திர உரையில், ஓர் ஆசிரியனுக்குத் தெரிந்திருக்கவேண்டிய எழுத்துவகைகளைக் கூறுமிடத்து உரையாசிரியர், பின்வரும் சூத்திரங்களை மேற்கோளாக எடுத்துக் காட்டுகிறார்;

''உருவே யுணர்வே யொலியே தன்மையென
இருவகை யெழுத்து மீரிரண் டாகும்''

உருவு : காணப் பட்ட வுருவ மெல்லாம்
மாணக் காட்டும் வகைமை நாடி
வழுவி லோவயன் கைவினை போல
எழுதப் படுவ துருவெழுத் தாகும்.''

உணர்வு : ''கொண்டவோர் குறியாற் கொண்ட வதனை
உண்டென் றுணர்த்துவ துணர்வெழுத் தாகும்.

ஒலி : ''இசைப்படு புள்ளி னெழாஅல் போலச்
செவிப்புல னாவ தொலியெழுத் தாகும்.''

தன்மை : ''முதற்கா ரணமுந் துணைக்கா ரணமும்
துணைக்கா ரணத்தொடு தொடரிய வுணர்வும்
அவற்றொடு புணர்ந்த வகத்தெழு வளியின்
மிடற்றுப்பிறந் திசைப்பது தன்மை யெழுத்தே.''

இச்சூத்திரங்கள் எந்த நூலினின்றும் எடுக்கப்பட்டவை என்பது தெரியவில்லை. ஆயினும் அவை மேலே எழுத்துவித்தையின் வரலாற்றை நான்கு பிரிவுகளாக வகுத்துக் கூறப்பட்டதைத் தெரிவிப்பனவாகவே காணப்படுகின்றன.

1. ''வடிவுபெயர் தன்மையுண் முடிவு நான்கா
நடைபெறு நாவலர் நாடிய வெழுத்தே''

2. ''கட்புல னில்லாக் கடவுளைக் காட்டும்
சட்டகம் போலச் செவிபுல வொலியை
உட்கொளற் கிடுமுரு பாம்வடி வெழுத்தே''

3. ''வடிவமுதன் முதன்மையின் வழங்கு மெழுத்திற்
படுபல பகுதிக் கிடுபெயர் பெயரே''

4. ''தான முயற்சி தரக்கொளச் செவிப்புலன்
ஆயவொலி தன்மை யெழுத்தா கும்மே''

5. ''உருவமுதன் முன்னையோ டோன்றிய வியல்பை
மருவவளத் துணிவ துண்முடி வெழுத்தே''

என்று ***நன்னூல் மயிலைநாதர்*** உரையிலும் ***இலக்கண விளக்கம்*** பாயிரத்திலும் மேற்கோளாக எடுத்தாளப்பட்ட சூத்திரங்களும்.

''வடிவுபெயர் தன்மை முடிவுநான் கெழுத்தே''

என்று பிங்கலந்தை நிகண்டில் கூறப்பட்டிருப்பதும்,

''பெயரெழுத்து முடிவெழுத்து வடிவெழுத்துத் தன்மை
எழுத்தென வெழுத்தின் பெயரியம் பினரே''

என்று ***திவாகரத்தில்*** காணப்படுவதும் நாம் மேலே கூறியவற்றுடன் ஒப்புநோக்கி ஆராய்வதற்கு உரியனவாகும்.

இவற்றால், சித்திரங்களாலும் வேறு குறிகளாலும் மனிதர்கள் ஒரு காலத்தில் எழுதிவந்த பழக்கத்தைத் தமிழ் மக்களும் அறிந்திருந்தார்கள் என்று எண்ணலாம்.

எழுத்து என்னும் சொல் தமிழில் பயிலப்படுவதை நோக்கினாலும் இது வெளிப்படும். எழுத்து என்னும் தமிழ்ச்சொல்லுக்கு அட்சரம், லிகிதம், கல்வி, ஓவியம், பதுமை என்ற பலபொருள்கள் உள்ளன. பழைய தமிழ்நூல்களில், எழுத்து, எழுதுதல் என்னும் சொற்கள் பல சமயங்களில்,

''இன்ன பலபல வெழுத்துநிலை மண்டபம்'' (பரிபா. 19)

'' தெய்வங் குடவரை யெழுதிய.......... பாவை''(குறுந். 89)

என்பனபோலச் சித்திரம், பாவை முதலியன நிருத்தல் ஆகியவற்றைக் குறிப்பதற்குப் பயிலப்பட்டுள்ளன. இதனால் பழந்தமிழ் மக்கள் சித்திரத்தையும் எழுத்தின் வகையாகவே கொண்டனர் என்று கொள்ளுதல் கூடும்.

11

பிராமியின் பழமையும் உற்பத்தியும்

சரித்திரவாயிலாக நாம் அறியும் காலத்திலேயே பிராமி நெடுங்கணக் கெழுத்து நிலையை அடைந்து விட்டது. அஃது அந்த நிலையை எப்பொழுது அடைந்தது என்பது தெரியவில்லை. ஆயினும் பழைய காலத்திலேயே இந்நாட்டில் பலவகை லிபிகள் வழங்கி வந்தனவென்பது பண்டை நூல்களினின்று தெரியவருகின்றது.

சற்றேறக்குறைய, கி.மு. 300-ஆம் ஆண்டில் எழுதப்பட்டதாகக் கொள்ளப்படும் ஸமவாயாங்க ஸூத்ரம், கி.மு. 168-ஆம் ஆண்டில் எழுதப்பட்டதாகக் கொள்ளப்படும் பண்ணாவணா ஸூத்ரம் முதலிய ஜைன நூல்களில் அக்காலுத்தில் பதினெட்டு வகை லிபிகள் வழங்கிவந்தன வென்பது கூறப்பட்டிருக்கின்றது. மஹாவஸ்து என்னும் நூலில் முப்பது வகை லிபிகளின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. லலிதவிஸ்தரம் என்னும் நூலோ புத்தர் காலத்தில் அறுபத்து நான்கு வகை லிபிகள் இருந்தனவென்று தெரிவிக்கின்றது. பதினெட்டு, முப்பது, அறுபத்துநான்கு முதலிய எண்கள் இந்தியர்களுக்குள் மங்கலத்தைக் கொடுக்கும் எண்களாகக் கருதப்படுவதால், அவ்வளவு வகை லிபிகள் இருந்தன வென்பதை நிச்சயமாகக் கூறமுடியாது என்று சிலர் எண்ணுகிறார்கள். ஆயினும் இந்நாட்டில் பழைய காலத்திலே பலவகை லிபிகள் வழக்கில் இருந்தன வென்பதை மட்டும் நிச்சயமாகக் கூறலாம்.

அந்த நூல்களில் உள்ள அட்டவணைகளில் காணப்படும் பெயர்களுள் பல ஒத்திருக்கின்றன. அவற்றுள் நான்கு முக்கியமானவைகளாகவும், சரித்திர உண்மைக்கேற்பனவாகவும் உள்ளன. அவை பின்வருமாறு:

(1) ப்ராஹ்மி (Brāhmi) அல்லது பம்பீ (Bambhi)

(2) கரோஷ்டீ (Kharoṣṭhi) அல்லது கரோட்டீ (Karoṭṭhi)

(3) த்ராவிடீ (Drāviḍi) அல்லது டாமிலீ (Ḍāmili)

(4) யவணாணியா (Yavaṇāṇiyā) அல்லது யவணாலியா (Yavaṇāliyā)

இவையன்றி ஜைன அட்டவணையில் புஷ்கரஸாரீ (Puṣkarasāri) அல்லது புக்கரஸாரியா (Pukkharasāriyā) என்னும் ஒருவகை லிபியும் சேர்க்கப்பட்டுள்ளது. பாணினீயம், ஆபஸ்தம்ப தர்ம ஸூத்ரம் முதலிய நூல்களில் புஷ்கரஸாதி (Puṣkarasādi) அல்லது பௌஷ்சரஸாதி என்னும் பெயரையுடைய ஆசிரியரைப் பற்றிய குறிப்புக்கள் சில காணப்படுகின்றன. இவர் பண்டைக்காலத்தில் வியாகரணம், தர்ம சாஸ்திரம் முதலியன இயற்றியவர். இவரோ, இவரைச் சேர்ந்தவர்களோ எழுதிவந்த லிபியே பின்னால் புஷ்கரஸாரீ என்று பெயரிடப்பட்டது போலும். இதைக் கவனிக்குங்காலத்தில் அந்த அட்டவணைகள் நம்பத்தகுந்தனவே என்பது தெரியவரும்.

மேலே கூறப்பட்ட நான்கு வகை லிபிகளுள் யவணாணியா என்பது கிரேக்கர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும் உபயோகித்த லிபியாகும். இதை வடமொழி இலக்கண ஆசிரியரான பாணினி தமது நூலில் 'யவனானி' என்று குறித்திருக்கிறார். அந்த நூலுக்கு 'மஹா பாஷ்யம்' எழுதிய பதஞ்சலியும், இச்சொல் யவனர் (கிரேக்கர்)களுடைய லிபியைக் குறிக்கும் என்று விருத்தி எழுதியுள்ளார். கரோஷ்டியோ வடமேற்கு இந்தியாவின் ஒரு பகுதியிலேயே சுமார் கி.பி. நான்காம் நூற்றாண்டு வரையில் உபயோகிக்கப்பட்டு வந்து, பிறகு இறந்தொழிந்தது என்பதை

முன்னம் கூறியுள்ளோம். இவ்விருவகைகளும் தமிழ் நாட்டிற் காணப்படவில்லை. ஆதலின் இவற்றை நாம் ஒதுக்கிவிடலாம். திராவிடி என்பது பிராமியின் தென்னாட்டமைப்பு எனப்படும் வகையே-அதாவது பட்டிப்ரோலுவில் கிடைக்கும் எழுத்துக்கள் என்று ஆசிரியர்கள் கருதுகிறார்கள். அதைப்பற்றி நாம் பின்னால் கூறுவோம்.

ஹிந்துக்கள் ஜைனர்கள் முதலிய பலரும் எழுத்துக்கள் பிரும்மாவினால் சிருஷ்டிக்கப் பட்டனவென்று கூறுகிறார்கள். கி.பி. ஏழாம் நூற்றாண்டின் மத்தியில் இந்தியாவிற்கு வந்திருந்த சீனதேசத்து யாத்திரிகரான யுவான் சுவாங் (Yuwan Chwang) என்பவரும் இக்கதையைக் குறித்துச் சென்றிருக்கிறார். அன்றியும், சீனதேசத்துப் பௌத்தரான பாவான்ஷுலின் (Fawanshulin) என்பவர், இடதுபுறத்திலிருந்து வலதுபுறமாக எழுதப்படும் புதிய எழுத்துக்கள் பிரும்மா (Fan) வினால் கண்டுபிடிக்கப்பட்டன வென்னும் கதையை விரிவாகக் கூறியிருக்கின்றார். இந்த லிபியே பிராமியாகும்.

இந்த லிபிக்குப் பிராமி என்னும் பெயரமைந்ததே இக்கதை ஏற்பட்டதற்குக் காரணமாக இருக்கலாம். அன்றி, தொன்று தொட்டு வழங்கிவரும் ஒன்றைப்பற்றிக் கேட்டால், அது பிரும்மா முதலிய மும்மூர்த்திகளுள் யாவரேனும் ஒருவரால் உண்டாக்கப்பட்டது என்று கூறும் நம்மவரது வழக்கத்தை ஒட்டியும் இருக்கலாம். இதனாலேதான் கி.பி. 580-ஆம் ஆண்டில் குடைவிக்கப்பட்ட வாதாபிக் கோயிலில் பிரும்மாவின் விக்கிரகம் ஒரு கையில் ஓலைச் சுவடியை வைத்திருப்பது போலக் காணப்படுகின்றது போலும். இக்காரணங்களால் இந்த லிபி மிகப் பழங்காலத்திலே இந்தியாவிலேயே சிருஷ்டிக்கப்பட்டதென்று சில ஆசிரியர்கள் கருதுகிறார்கள்.

ஆனால் மேலைத் தேசத்து ஆசிரியர்களுள் சிலர் இந்தப் பிராமி லிபி இந்தியாவிற்குச் சொந்தமானதன்று எனவும், பிறநாட்டிலிருந்து கடன்

வாங்கப்பட்டதெனவும் கருதுகிறார்கள். கி.பி. பதினோராம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்திருந்த ஆல்பெருநீ (Alberuni) என்னும் அராபிய யாத்திரிகர் கூறும் கதையும் அவர்கள் கூற்றுக்கு ஆதாரமாகக் காட்டப் படுகின்றது. ஆரியர்கள் தங்களிடையே வழங்கிவந்த எழுத்துக்களை ஒரு காலத்தில் மறந்துவிட்டார்களாம். பராசர முனிவர் குமாரரும் பதினெட்டுப் புராணங்கள், மஹாபாரதம் முதலியவற்றை இயற்றியவருமான வியாச பகவான், தமது தெய்வீக சக்தியால் பழைய எழுத்துக்களை மறுபடியும் கண்டுபிடித்தாராம். எழுத்துக்களை இந்தியர்கள் பிறநாட்டினின்றும் கடன் வாங்கியதைக் குறிப்பதாகவே இக்கதை கொள்ளப்படுகின்றது.

பிராமி லிபி இந்தியர்களால் கடன் வாங்கப்பட்டது என்னும் கொள்கையையே நிச்சயமாகக் கொண்டு, அதற்குமேல் அந்த ஆசிரியர்கள் எந்த நாட்டினின்றும் அது கடன்வாங்கப்பட்டிருக்கலாம் என்பதைப்பற்றி ஆராயத்தொடங்கிப் பலவிதமான முடிவுகளைப் பெற்றிருக்கிறார்கள்.

டெர்யென் த லகூபரி (Terrien de Lacouperie) என்பவர் இது சீனதேசத்துச் சித்திர எழுத்துக்களினின்றும் பெறப்பட்டது என்று கூறினார். சீன எழுத்துக்கள் நெடுங்கணக்கின் நிலையை அடையாமல் 'ஒலியும் பொருளும்' கொண்ட ஒருவகை உணர்வெழுத்து நிலையிலேயே நின்று விட்டன. ஆதலின் இக்கொள்கையைப்பற்றி நாம் கவனிக்கவேண்டியதில்லை. இது பின்னால் கைவிடப்பட்டும் விட்டது.

வில்ஸன் (Wilson), பிரின்ஸெப் (Prinsep) முதலியோர் இது கிரேக்க எழுத்துக்களினின்றும் பெறப்பட்டது எனக் கருதினார்கள். வீபர் (Weber) முதலிய ஆசிரியர்கள் பினீஷிய (Phoenician) எழுத்துக்களே பிராமிக்கு மூலமென்று எண்ணினார்கள். இக்கொள்கைகள் காலமுறையினாலும், மொழி நூல் தத்துவத்தாலும் ஒப்புக்கொள்ளத் தக்கனவல்ல. பினீஷிய எழுத்துக்களும், பிராமியும் 'தாயும் குழந்தையும்' என்று எண்ணக் கூடியனவாக இல்லை.

டிக்க (Deecke) என்பார், முற்காலத்தில் அஸிரீயாவில் வழங்கிவந்த அம்புத்தலை அல்லது ஆப்பு (Cuneiform) எழுத்துக்களினின்றும் பிறந்ததும் தென் ஸெமிடிக் (Semetic) எனப்படுவதுமாகிய ஒரு வகையினின்றும் பெறப்பட்டது என்று கொள்வார். டெய்லர் (Taylor) என்பார் தென் அரபியாவில் வழங்கிவந்த ஸபியன் (Sabean) என்னும் வகைக்கு மூலாதாரமாக இருந்த ஒரு வகையினின்றும் பிறந்தது என்று கருதுவார். (ஆப்பு) எழுத்துக்களுக்கும் பிராமிக்கும் தொடர்பு சொல்லுவது பிரமையே யெனக் கூறலாம். கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்த ஸபியன் எழுத்துக்கள் இப்பொழுது கிடைக்கவில்லை. அந்த நாட்டில் அதற்கு முற்பட்ட காலத்தனவாகக் கிடைப்பவை பினீஷிய எழுத்துக்களைப் போன்றனவாகக் காணப்படுகின்றன. அன்றி, பிராமிக்கும் அவ்வகை எழுத்துக்களுக்கும் ஒலிமுறையிலும் மிகுந்த வேறுபாடு உண்டு.

ஹாலேவி (Halevy) என்பார் அராபிய கரோஷ்டி கிரேக்க எழுத்துக்களினின்று கி.மு. நான்காம் நூற்றாண்டில் பிராமி உண்டாயிற்று என்று கூறுவர். அதற்கு முற்பட்ட காலத்திலேயே பிராமி வழக்கில் இருந்தது என்பதை நாம் அறிவோமாதலால், அக்கொள்கையும் சரியல்ல.

கடைசியாக, பீலர் இந்த லிபி வடசெமெடிக் வகையினின்றும் பிறந்தது என்று பலவகை ஆதாரங்களுடன் காட்டினார். இக்கொள்கை மிகவும் ஆதரவு பெற்று இன்றைக்கும் பொதுவாக அங்கீகரிக்கப்பட்டு வருகின்றது.

கரோஷ்டி வடசெமெடிக்கினின்றும் பிறந்தது என்பதை யாவரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். கரோஷ்டியும் பிராமியும் மிகுந்த வேறுபாடுகள் உடையனவாகும்.

கரோஷ்டியில்:-

(1) எழுத்துக்கள் குச்சிபோல நீண்டும் வலதுபுறம் சாய்ந்தும் உள்ளன. அன்றி, தலைப்பாரம் அதிகமாக உள்ளனவாகவும் காணப்படுகின்றன.

(2) எழுத்துக்கள் உருவத்திலும் அளவிலும் முறையில்லாமல் எழுதப்பட்டும், பல எழுத்துக்கள் ஒரேவிதமான உருவங்களைப் பெற்றும் உள்ளன.

(3) பெரும்பான்மையும் வளைந்த கோடுகளே உள்ளன. நேர்கோடுகள் அதிகம் கிடையா.

(4) சுழிகள் காணப்படவில்லை.

(5) எழுத்துக்கள் வலதுபுறமிருந்து இடதுபுறமாகவே எழுதப்படும்.

பிராமியிலோ:-

(1) எழுத்துக்கள் நிமிர்ந்து நிற்பனவாகும்.

(2) அவை நேர்கோடுகளையும் சுழிகளையும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன.

(3) எழுத்துக்கள் அடிப்புறம் கனத்துத் தலைப்பாரம் இல்லாமல் காணப்படும்.

(4) இடதுபுறமிருந்து வலதுபுறமாகவே எழுதப்படும்.

(5) அன்றி, கரோஷ்டியை விடப் பிராமி பார்வைக்கு அழகாகவும் தோன்றும்.

இவ்விதம் மாறுபட்ட இருவேறு லிபிகளும் ஒரே வகையினின்றும், ஒரே நாட்டு மக்கள் ஒரே விதமாக உபயோகிப்பதற்காகப் பிறந்தனவென்று கூற முடியுமா?

இதற்குச் சமாதானமாகச் சிலர், கரோஷ்டி காந்தாரத்தின் வழியாகத் தரைமார்க்கமாகவும், பிராமியானது பாபிலோனியா, பாரசிகக்குடாக்கடல் என்பவற்றின் வழியாகக் கடல்மார்க்கமாகவும்இந்தியாவை அடைந்தன வென்பர்; வேறுசிலர், பிராமி பிராமணரைப்போன்ற பண்டிதர்களாலும், கரோஷ்டி வியாபாரிகளைப் போன்ற பொதுமக்களாலும் வழங்கப்பட்டன வாகும் என்று கூறுகிறார்கள்.

பிராமியும், கரோஷ்டியும் வடசெமெடிக்கினின்றும் பிறந்தனவென்று கூறும் ஆசிரியர்கள் இவ்விருவகை லிபிகளிலும் உள்ள தனி எழுத்துக்களை வடசெமெடிக்கில் வெவ்வேறு எழுத்துக்களினின்றும் உண்டானவைகளாகக் காட்டுகிறார்கள். உதாரணமாகக் கரோஷ்டியின் உயிரெழுத்துக்கள் எல்லாம் செமெடிக்கின் 'அலீப் (Aleph) என்னும் அகரத்தினடியாகப் பிறந்தனவென்று கூறுவர். ஆனால் பிராமியின் அகர ஆகாரம் 'அலீப்'பினின்றும் பிறந்தனவென்றும், செமெடிக்கில் 'எய்ன்' (Ain) எனப்படும் எழுத்தே பிராமி எகரமாக அதனின்றும், இ, ஈ, ஐ ஆகியவை உண்டாயினவென்றும், 'லால்'(Van) எனப்படும் எழுத்தினின்றும், உ, ஊ, ஒ ஆகியவை பெறப்பட்டன வென்றும் கூறுவர். அதே போல வ (Gha) என்பதன் கரோஷ்டி வடிவம் 'ஜிமேல்' (Gimel) என்னும் செமெடிக் வடிவத்தினின்றும், அதே எழுத்தின் பிராமி வடிவம் 'சேத்' (Cheth) எனப்படும் எழுத்தினின்றும் பெறப்பட்டனவென்றும் கூறுவர். வட வடமொழியில் எகரம், இகரத்தின் குணவெழுத்து அங்ஙனமிருக்க எகரத்தினின்றும் இகரம் வந்தது என்று கூறுவது பொருந்தாது. எழுத்துக்களின் ஒலியைச் சிறிதும் கவனிக்காமல் நிறுவப்பட்டதே இக்கொள்கை.

இங்ஙனம் பிராமி பிறநாட்டினின்றும் கடன் வாங்கப்பட்டது என்று கூறப்படும் கொள்கைகளில் ஒன்றும் ஏற்புடையதாகத் தோன்றவில்லை. எஞ்சி நிற்பது, பிராமி இந்தியாவிலேயே பிறந்து வளர்ந்தது எனப்படும் கொள்கையேயாகும்.

இது முதலில் லஸன் (Lassen) என்பவரால் சொல்லப்பட்டுப் பிறகு கன்னிங்ஹாம் (Cunningham) என்பவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆயினும் இது பெரும்பாலான ஆசிரியர்களால் ஒப்புக்கொள்ளப் படவில்லை. அவர்களில் பலர், உலகத்தில் நாகரிக எகிப்து, ஸுமேரியா, பாபிலோனியா முதலிய நாடுகளினின்றுமே பரவியது என்னும் கொள்கையை உடையவர்கள். ஆதலின் அவர்கள் இந்த லிபி இந்தியாவில்

உண்டாயிருப்பதற்கில்லை யென்றே முடிவுசெய்தார்கள். அன்றி, அவர்கள் மூன்று முக்கிய ஆக்ஷேபனைகளையும் காட்டினார்கள்.

(1) பிராமி இந்தியாவிலே உண்டாகியிருக்குமானால், அது நெடுங்கணக்கு நிலையை அடைவதற்கு முந்தி வழங்கிவந்த குறிகள் முதலியன ஏன் கிடைக்கவில்லை?

(2) அசோக மன்னன் காலத்தில் வழங்கிவந்த பிராமி வடிவம், வளர்ச்சி பெறுவதற்குப் பலகாலம் சென்றிருத்தல் வேண்டும்; அக்காலத்தில் வேறு பல வகைகளும் வளர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்; அவை ஏன் காணப்படவில்லை?

(3) பிராமி எழுத்துக்களை ஆராய்ந்தால், வரிவடிவ ஒற்றுமையைக் கொண்டு சில இனங்களாகப் பிரிக்கலாம் என்பதும், அவற்றுள் சில எழுத்துக்களின் உருவங்கள் புதியனவாகச் சிருஷ்டிக்கப்பட்டன போலத் தோன்றும் என்பதும் தெரியவரும். அப்படியாயின் அந்த எழுத்துக்கள் வழக்கில் இல்லாத ஒரு மொழியினின்றுமோ தேசத்தினின்றுமோ இந்த லிபி முதலில் பெறப்பட்டு, வேண்டிய புது எழுத்துக்கள் பிறகு ஆக்கிக்கொள்ளப் பட்டன என்று கூறக்கூடாதா?

இந்த ஆக்ஷேபனைகளைக் கவனிப்போம்:

முதலாவது : பிராமி லிபி இந்தியாவிலேயேஉண்டானது என்னும் கொள்கை மறுக்கப்பட்ட காலத்தில் மொஹெஞ்சோதாரோவில் கண்டு பிடிக்கப்பட்ட குறிகள் கிடைக்கவில்லை. ஹாரப்பாவினின்றும் கிடைத்துள்ள குறிகளும் மொஹெஞ்சோதாரோக் குறிகளைப் போலவே உள்ளன. இக்குறிகளுக்கும் பிராமிக்கும் மத்திய நிலையில் உள்ளனவென்று கூறப்படும் குறிகளால் எழுதப்பட்டுள்ள சாஸனம் ஒன்றும் மத்திய இந்தியாவில் விக்ரமகோல் என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது (இந். ஆண்.62-ஆவது வால்யூம்.)

சித்திர எழுத்துக்களையும், ஒலிக்குறிகளையும் பற்றிய குறிப்புக்கள் தமிழ் நூல்களில் காணப்படுகின்றன வென்பதை முன்னம் கூறியுள்ளோம். அன்றி, கண்ணெழுத்து என்பதைப் பற்றிய குறிப்புக்கள் சிலப்பதிகாரத் திலும், நெடுங்கணக்கெழுத்துக்களினின்றும் வேறானவைகளாகக் கூறக் கூடிய வேறு பல குறிகளைப் பற்றிய குறிப்புக்கள் யாப்பருங்கல விருத்தியுரையிலு காணப்படுகின்றன.

மேலே கூறியவற்றை நாம் கவனித்தால், இந்த ஆக்ஷேபனையை இனி நாம் வற்புறுத்த முடியாது.

இரண்டாவது : அசோக மன்னன் காலத்திலேயே பிராமியில் பல வகைகள் வழக்கில் இருந்தன வென்பதை நாம் முன் கூறியுள்ளோ. அன்றி, வேறுவகை லிபிகளும் வழக்கிலிருந்தன வென்பது இலக்கியங்களால் தெரியவருகின்றது என்பதையும் மேலே கூறியுள்ளோம்.

அவ்வகை லிபிகளிலும், குறிகளிலும் பொறிக்கப்பட்ட சாஸனங்கள் முதலியன கிடைக்கவில்லை யென்பதை அவை இராமைக்குக் காரணமாகக் கூறமுடியாது. தமிழ்நாட்டிலே, சுமார் கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கும், கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்திய சாஸனங்கள் ஒன்றும் கிடைக்கவில்லை. அக்காலத்தில் ஒன்றும் எழுதப்படவில்லை யென்று கூறமுடியுமா? ஏதோ சில காரணங்களால் அவை அழிந்து போயிருத்தல் வேண்டும்.

மூன்றாவது : இந்த ஆக்ஷேபனையை எளிதில் மறுக்க முடியாது. இதனுடன் சேர்க்கப்பட்டுள்ள படத்தில் பிராமி எழுத்துக்கள், வரி வடிவங்களைக் கொண்டு சில இனங்களாகப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளன. இப்படத்தை நன்கு கவனித்தால், பின்வருவன விளங்கும்:

(1) குறில் எழுத்துக்களின் உருவங்களுக்கு அதிகப்படியான குறிகள் சேர்த்து நெடில் உருவங்கள் ஆக்கப்பட்டுள்ளன.

தற்கால வடிவம்



(2) உயிர் எழுத்துக்களுள் அ, இ, உ, ஆகிய மூன்றுமே மூல எழுத்துக்களாக உள்ளன. குண எழுத்துக்களான எகரமும், ஒகரமும் முறையே இகரத்தினின்றும், உகரத்தினின்றும் பெறப்பட்டுள்ளன.

(3) விருத்தி எழுத்தான ஐகாரம், வடநாட்டு வடிவத்தில் எகரத்தி னின்றும் பெறப்பட்டிருந்தாலும், தென்னாட்டு வடிவத்தில் ஐகாரத்தின் இனமான யகரத்தின் வடிவத்தைப்போலக் காணப்படுகின்றது.

(4) மெய்யெழுத்துக்களுள் அகோஷப்ரயத்தனத்தினால் உண்டாகும் எழுத்துக்கள் கோஷப்ரயத்தனத்தினால் உண்டாகும் எழுத்துக்களினின்று பெறப்பட்டன. பொதுவாக வர்க்க எழுத்துக்கள் முதல் எழுத்துக்களி னின்றுமே பெறப்பட்டன வென்று கூறலாம்.

(5) டகரமும் தகரமும் வேறாகக் காணப்பட்டாலும், அவற்றின் வர்க்க எழுத்துக்கள் யாவும் நெருங்கிய தொடர்பை உடையன. முக்கியமாக ஆகிய இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் O, , வில் உள்ள நடுப்புள்ளிதான். புத்தர் காலத்தில் பேசப்பட்டுவந்த பாலிபாஷையில் டகரம், தகரம் ஆகிய இரண்டும் வேறுபாடு இல்லாமல் இருந்தன வென்று காலஞ் சென்ற மஹாமஹோபாத்தியாய டாக்டர் ஹரப்பிரசாத சாஸ்திரியார் கூறியிருக்கிறார்.

(6) மெல்லினங்கள் ஓர் இனமாக உள்ளன.

இவற்றை நாம் கவனித்தால் பிராமி லிபி முதலில் வடமொழிக்காக ஏற்படவில்லையென்றும், உயிர் எழுத்துக்களுள் அ, இ, உ ஆகிய மூன்றுக்கும் அதிகச் சிறப்பையளிப்பதும், மெய்யெழுத்துக்களுள் வர்க்க எழுத்துக்களைக் கொள்ளாததுமான ஒரு பாஷைக்கென அமைக்கப்பட்டுப் பின்னால் வடமொழிக்கு உபயோகப்படும்படி புதிய குறிகள் உண்டாக்கப் பட்டன வென்றும் எண்ண வேண்டியிருக்கிறது. இந்தியாவில் உள்ள மொழிகளுள் இவ்விதம் உள்ளது தமிழ் ஒன்றுதான். அங்ஙனமாயின், பிராமி முதலில் தமிழுக்கென அமைந்த லிபியாக இருத்தல் கூடுமா? இஃது ஆராய்தற்குரியது.

மொஹஞ்சோதாரோவில் வாழ்ந்த மக்கள் யாராக இருத்தல் கூடும் என்பதைப் பற்றி ஆசிரியர்களில் சிலர் வேறுவிதமாகக் கருதினாலும், அவ்விடத்தில் பூமியைத் தோண்டி நடத்திய வேலைகளை மேற்பார்வை யிட்ட புராதனச்சின்ன இலாகாவின் தலைவரும் அவருக்கு உதவி புரிந்த வேறு பல ஆசிரியர்களும், அந்தவிடத்தில் வாழ்ந்த மக்கள் திராவிட நாகரிகம் உள்ளவர்களாகவே இருந்திருத்தல் வேண்டும் என்று கருதுகிறார்கள். தமிழ் மக்கள் பண்டைக்காலத்தில் உயர்ந்த நாகரிகத்தை உடையவர்களாக வாழ்ந்தார்கள் என்பதை நாம் அறிவோம். மொஹெஞ்சோதாரோ அதனையே விளக்குகின்றதாம். அவ்விடத்தில் கிடைத்துள்ள குறிகளைப் போன்றவற்றைக் கொண்ட மண்பாண்டங்கள்

ஹைதராபாத் சமஸ்தானத்திலும் (ஹைதராபாத் ஆர்க்கியலாஜிகல் ஸொஸைட்டி ஜர்னல், 1917-ஆம் ஆண்டு), நாணயங்கள் திருநெல்வேலி ஜில்லாவிலும் (மைசூர் ஆர்க்கியலாஜிகல் இலாகாவின் 1935-ஆம் ஆண்டு அறிக்கை) கிடைத்துள்ளன. இவ்விதமான குறிகள் இந்தியாவின் பிற பாகங்களில் கிடைக்கவில்லை. அன்றி, எழுத்துக்கள் நெடுங்கணக்கு நிலையை அடைவதற்கு முந்திய காலங்களில் பெற்றிருந்த உருவங்களைப் பற்றிய குறிப்புக்கள் தமிழைத்தவிர வேறு இந்திய மொழிகளில் உள்ள இலக்கியங்களில் காணப்படவில்லை.

மொஹெஞ்சோதாரோவில் கிடைத்துள்ள குறிகள் பிராமி லிபியின் மூதாதையாக இருக்கமுடியாதென்று சிலர் சந்தேகிக்கிறார்கள். அந்தக் குறிகளுக்கும்ம், ஸுமேரியா, கிரீட் (Crete) மினோவா (Minoa) முதலிய இடங்களினின்றும் இந்தியாவுக்கு வந்திருத்தல் வேண்டும் என்று எண்ணுகிறார்கள். ஸுமேரியாவில் கிடைத்துள்ள குறிகளுக்கு உரிய பொருள் இப்பொழுது விளங்குகின்றது. அந்தப் பொருளைக் கொடுத்து இந்தியாவில் கிடைத்துள்ளவற்றை வாசிக்க முடியவில்லை. இத்தகைய குறிகள் தென் அமெரிக்காவிற்குப் பக்கத்தில் உள்ள ஈஸ்டர்த் (Easter) தீவுகளிலும் கிடைத்துள்ளனவென்பதையும் கவனிக்கவேண்டும். பண்டை மக்கள் உபயோகித்துவந்த குறிகள் ஒரேவிதமாகத்தான் காணப்படும் என்பதை மேலே காட்டியுள்ளோம். ஆதலின் இந்தியாவில் கிடைத்துள்ள இக்குறிகளுக்கு வேறு தேசங்களில் கிடைத்துள்ளவற்றைக் கொண்டு பொருள் வரையறுக்க முடியாது.

இனி, இந்தக் குறிகள் வலதுபுறத்திலிருந்து இடது புறமாக எழுதப்பட்டிருக்கின்றன வென்றும், பிராமியோ அதற்கு மாறாக உள்ளதென்றும் சொல்லப்படுகின்றது. அசோகமன்னன் காலத்தில் பிராமி இடதுபுறமிருந்து வலதுபுறமாகத்தான் எழுதப்பட்டுவந்தது. ஆயினும் அதற்கு முந்திய காலத்தைச் சார்ந்த ஒன்றிரண்டு சாஸனங்கள், வலதுபுறத்திலிருந்து இடதுபுறமாக எழுதப்பட்டுக் காணப்படுகின்றன

வென்பதையும், வேறு சில சாஸனங்களில் ஒரு வரி இடதுபுறத்திலிருந்து வலதுபுறமாகவும், அடுத்த வரி வலதுபுறத்திலிருந்து இடதுபுறமாகவும் (Boustrophedon) எழுதப்பட்டுள்ளன என்பதையும் நாம் முன்பு குறித்துள்ளோ. சிறு குழந்தைகள் முதலில் எழுதக் கற்றுக் கொள்ளும்பொழுது பொதுவாக வலதுபுறத்திலிருந்து இடதுபுறாகவே எழுதும். அவர்கள் S, N போன்ற ஆங்கில எழுத்துக்களையும் தலை கீழாக எழுதுவதையும் காண்கிறோம். மனோதத்துவ நூலார், இதுவே இயற்கை யென்றும் கூறுகிறார்கள். ஆதலின் ஒரு காலத்தில் பிராமியும் வலதுபுறமிருந்து இடதுபுறமாக எழுதப்பட்டு வந்து பிறகு மாறியிருக்கக் கூடாதா?

பிராமி மொஹெஞ்சோதாரோக் குறிகளினின்றும் முதலில் தமிழுக்கெனப் பெறப்பட்ட லிபியாக இருக்குமானால், ஏன் எகர ஒகரங்களுக்கு மட்டில் நாம் முன்பு காட்டிய வேறுபாடு காணப்படவேண்டும்? ஒருகால், ஆரியர்கள் தமிழர்களிடமிருந்து கடன் வாங்கிய எழுத்துக்கள் வளர்ச்சி யடைந்து, தமிழ் நாட்டில் ஆரிய நாகரிகத்துடன் புதிய வடிவத்தில் வந்துள்ளனவென்று கூறலாமா? இதற்கு உதாரணம் இல்லாமல் இல்லை. இப்பொழுது அராபிய எண்கள் என்று வழங்கப்பெறும் இலக்க உருவங்கள் பிராமி உருவங்களினின்றும் மேல் நாட்டினரால் பெறப்பட்டவை. ஐரோப்பியர்கள் இந்தியாவுக்கு வந்தபிறகு, அந்த உருவங்கள் இங்கு வந்து, இங்கே வழக்கிலிருந்த பழைய உருவங்களை ஒதுக்கிவிட்டன.

இவ்விதமான நிலையில், மொஹெஞ்சோதாரோக் குறிகள் திருப்தி கரமாக வாசிக்கப்படும் வரையில், பிராமி லிபியின் உற்பத்தியைப்பற்றி நாம் நிச்சயமாக ஒன்றும் கூறுவதற்கில்லை. எனினும் அது பிறநாட்டி னின்றும் கடன் வாங்கப்பட்டது என்னும் கொள்கை மட்டும் ஒப்புக் கொள்ளக் கூடியதாக இல்லை.

12

பின்னுரை

இதுகாறும் நாம் கூறியவாற்றால், தமிழ் நாட்டு எழுத்துக்களின் வளர்ச்சியைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்: *

உரு, உணர்வு, ஒலி ஆகிய நிலைகளைத் தாண்டி, நெடுங்கணக்கெழுத்து நிலையில் விளங்கிய பிராமி லிபி, சுமார் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் புகுந்து, அதற்கு முன்பு இவ்விடத்தில் இருந்த ஏதோ ஒருவகை லிபியை ஒதுக்கித் தானே இடங்கொண்டது. அது தமிழ்நாட்டில் சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து வந்தது. அதுவே வட்டெழுத்தாகும். ஒரு காலத்தில் இது தமிழ் நாடு முழுவதிலும் வழக்கில் இருந்திருத்தல் வேண்டும். ஆயினும், சாதவாகனர்களுடன் ராஜீய உறவு கொண்டிருந்த பல்லவர்கள் தமிழ்நாட்டையும் வடக்கிலிருந்து கைப்பற்றி ஆள ஆரம்பித்தார்கள். தமிழ்நாட்டின் வடபகுதியில் புது எழுத்துக்கள் உண்டாயின. அவர்கள் முதலில் பிராகிருத மொழியைப் போற்றி வந்தார்களாதலால், அதை எழுதப் பிராமி லிபியின் வழிவந்த கிரந்தமும், அதனை ஒட்டி வளர்ந்த கிரந்தத்தமிழும் ஏற்பட்டன. பல்லவர்கள் வழங்கிய சித்திரிக்கப்பட்ட கிரந்த எழுத்துக்களும் நாகர எழுத்துக்களும் அதிக நாட்கள் உபயோகத்தில் இல்லை.

பல்லவர்கள் மகோந்நத ஸ்திதியில் வாழ்ந்தகாலத்தில்–அவர்கள் தொண்டை மண்டலத்தையும் சோழநாட்டையும் கொங்கு தேசத்தின் ஒரு

---

* தமிழ்நாட்டிற் கிடைக்கும் சாஸனங்களில் வராகன், மஞ்சாடி, குழி, காணி என்பன போன்ற அளவைகளைத் தெரிவிக்கும் குறிகள் பல காணப்படுகின்றன. அவற்றை விரிவாகக் கூறினால் பெருகுமாதலின் நாம் விட்டுவிட்டோம்.

பகுதியையும் ஆண்டுவந்தார்களாதலால், கிரந்தத்தமிழ் அந்தப் பிரதேசங்களில் வழங்கிவந்தது. பாண்டிமண்டலம், மலைநாடு, கொங்கு தேசத்தின் மற்றொரு பகுதி ஆகிய இடங்களில் வட்டெழுத்து வழங்கி வந்தது. இவ்விரு பிரிவுகளையும் ஒட்டிய எல்லைப்புறங்களில் கிரந்தத்தமிழ். வட்டெழுத்து ஆகிய இருவகைகளும் கலந்து இருந்தன.

பல்லவர்கள் வலிகுன்றியபின் சோழர்கள் தலைப்பட்டுத் தமிழ் நாட்டின் பேரரசர்களாக விளங்கிய காலத்தில், அவர்க்ள் இந்நாடு முழுவதிலும் தமிழ் எழுத்தைப் பரப்பினார்கள். அன்று முதல் தமிழ்நாடு முழுவதும் இந்த வகையே வழங்கி வருகின்றது.

சோழர்கள் ஆதிக்கத்தை நேராகப் பெறாத மலைநாட்டில் வட்டெழுத்து வழக்கில் இருந்து வந்தது. மலைநாட்டார், மணிப்பிரவாளமான தங்கள் மொழிக்குக் கிரந்த எழுத்தை ஆர்ய எழுத்து என மாற்றி அமைத்துக் கொண்ட பிறகு, வட்டெழுத்து அந்நாட்டில் ஒரு சிறு பகுதியினரால் பயிலப்பட்டு வந்தது. அதுவே பிற்காலத்தில் கோலெழுத்து என்று வழங்கப்பட்டு நாளடைவில் இறந்தொழிந்தது.

விஜயநகர ஸாம்ராஜ்யம், தமிழ் நாட்டைக் கைக்கொண்டவுடன் அவ்வரசர்கள் நாகர எழுத்தைத் தமிழ்நாட்டில் மறுபடியும் வழக்கத்துக்குக் கொணர்ந்தார்கள். முதலில் அது தமிழ் நாட்டின் வட பகுதியிலேயே காணப்பட்டாலும், மஹாராஷ்டிரர்கள் தமிழ் நாட்டில் சிறு ராஜ்யங்கள் அமைத்து ஆளத்தொடங்கியது முதல் புத்துயிர் பெற்றுப் பரவலாயிற்று. இப்பொழுது அதுவே அதிகமாகப் பயிலப்படுவதாகும்.

இங்ஙனமாகத் தமிழ்நாட்டுக்குரிய பலவகை எழுத்துக்களும் நாளடைவில் அடைந்த வளர்ச்சிகள் பல. அவற்றின் வரலாற்றை அறுதியிட்டுரைப்பதற்குரிய கருவிகளும் துணையும் போதியனவாக இல்லை. ஆயினும் மிகப் பழங்காலம் முதற்கொண்டு கலைச் செல்வத்தைப் பெருக்கிக் கொண்டு வரும் தமிழ்நாட்டில் எழுத்து வளர்ச்சியின் வரலாறு சிறந்த மதிப்புடையதாகவும், சுவையுடையதாகவும் இருக்கவேண்டும் மென்பதில் ஐயமில்லை.

இந்தப் புத்தகத்தை எழுதுவதற்கு உதவியாக இருந்த நூல்கள் முதலியன.

பத்திரிகைகளும் அறிக்கைகளும்

1. Epigraphia Indica
2. Indian Antiquary
3. Journal of the South Indian Association
4. Journal of the Bihar and Orissa Research Society
5. Journal of the Hyderabad Archaelogical Society
6. Indian Hisorical Quarterly
7. Quarterly Journal of the Mythic Society
8. South Indian Inscriptions
9. Travancore Archaeological Series
10. Madras Epigraphical Reports
11. Mysore Archaeological Reports
12. Reports on the Archaeological Survey of Western India
13. Proceedings of the All-India Oriental Conferences
14. Corpus Inscriptionum Indicarum
15. Annual Reports of the Smithsonian Institute

நூல்கள்

1. Elements of the South Indian Palaeography by Dr.A.C.Burnell
2. A History of the Art of Writing by William A. Mason
3. Anthropology by Dr. Taylor
4. Pallava Antiquities by Dr. G. Jouveau-Dubreuil
5. The Script of Mohenjodaro and Harappa by Dr.G.R. Hunter
6. Indo-Sumerian Seals Deciphered by Waddell
7. Yuwan Chwang by Watters
8. Alberuni's India
9. Indian Paleography by Dr. Buhler (English Edition) published as Appendix to the Indian Antiquary, vol. xxxiii and plates of the German Edition
10. ஹிந்தியில் எழுதிய 'பாரதீய ப்ராசீன லிபி மாலா'
11. தொல்காப்பியம்
12. யாப்பருங்கல விருத்தி
13. நன்னூல் மயிலை நாதருரை
14. இலக்கண விளக்கம்
15. பரிபாடல்
16. குறுந்தொகை
17. பிங்கல நிகண்டு
18. திவாகர நிகண்டு

எடுத்தாளப்பட்ட சாஸனங்கள்

1. கல்வெட்டுக்கள்

	பக்கம்
அமராவதி	29
ஆனைமலை	85,87
உத்தரமேரூர்	99
ஐவர்மலை	85
ஓட்டப்பட்டி	90
கயை	30
கல்பாத்தி	88
கல்ஸி	25,30
காஞ்சீபுரம்(கைலாஸநாதர் கோயில்)	6,43
'' (ராஜராஜன்)	50
கிர்நார்	31
கீழ் முட்டுக்கூர்	90-1
குனிதிக்கி	90-1
குன்றத்தூர்	671
சித்தபுரம்	30
சீயமங்கலம்	43
செந்தலை	63
செவிலிமேடு	50
தஞ்சை (பெரிய கோயில்)	65
தமிழ்நாட்டுப் பிராமிக் கல்வெட்டுக்கள்	19-28
தளவனூர்	43
திருக்கடித்தானம்	7487
திருக்கழுக்குன்றம் (குலோத்துங்கன் I)	66
'' (நரஸிம்ஹ பல்லவன்)	91
திருக்குற்றாலம்	74
திருச்சிராப்பள்ளி	43
திருச்செந்தூர்	86
திருநாதர் குன்று	20,84
திருவதிகை	56
திருவல்லம்	63
நாகார்ஜுனிகொண்டா	30,37,98
நாசிக்	98
பங்கவாடி	90
பட்டிப்ரோலு	22,23,25,29,30,37,117
பர்ஹுத்	31
புகழியூர்	225
மண்டகப்பட்டு	342
மதுரை (வட)	30
மலையடிப்பட்டி	91
மஹேந்திரவாடி	42
மாமல்லபுரம் (நரஸிம்ஹவர்மன்)	43
'' (ராஜஸிம்ஹன்)	43
மேல்பாடி	55
லால்குடி	53
வல்லம்	56
ஜக்கய்யபேட்டை	29-30
ஹதிகும்பா	30
ஹனுமந்தபுரம்	90-1
ஹெப்பிணி	90
ஸ்ரீரங்கம் (ஜடா-சுந்தரபாண்டியன்)	51
'' (அச்சுத தேவராயர்)	71

2. செப்பேடுகள்

அன்பில்	49,101
உருவப்பள்ளி	38
ஓங்கோடு	38,39
கசாக்குடி	63,86
கூரம்	45,54,56
கொண்டமுடி	37
கொல்லூர் மடம்	87,99
சின்னமனூர் (பெரிய)	49,54,86,99
செந்தலூர்	39
தண்டந்தோட்டம்	46
தளவாய் அக்ரஹாரம்	51
திருக்களர்	66,99
திருப்பறப்பு	63
திருவாலங்காடு	50,66,99
பாலியம்	88
பிகிரா	38,99
பிரிட்டிஷ் மியூஸியம் (சாருதேவி)	98
புதுக்கோட்டை	100
மட்டப்பாடு	99
மயிதவோலு	37
மாங்களூர்	38
மின்சிறை மடம்	89
லீடன் (பெரிய)	66
வேலங்குடி (சென்னைக் காட்சிச் சாலை)	46,85,99
வேலூர்ப்பாளையம்	63
வேள்விக்குடி	46,85,100
ஹீரஹடகன்னி	37
ஸ்ரீகாகுளம்	97

பொருட் குறிப்பு அகராதி

பக்கம்

அங்கப்பள்ளி 94,97
அநுகாஸிகை 46
அப்பிரதக்ஷிணமாக எழுதுவது 7,82
அம்புத்தலை எழுத்துக்கள் 119
அமெரிக்காவில் வழங்கிய சித்திர
எழுத்துக்கள் 106-107
அக்ஷரப்பள்ளி 94,100
ஆப்பு எழுத்துக்கள் 119
ஆபஸ்தம்ப தர்மஸூத்ரம் 116
ஆய்தம் 53,64,86
ஆர்ய எழுத்து - கிரந்தத்தின்
மலையாள வகை 41,73,87
ஆவ்பெருநீ 118
இலக்கண விளக்கம் 113
இலக்கம் (= எண்கள்)
ஈஸ்டர் தீவுகளில் கிடைக்கும் குறிகள்126
உணர்வு எழுத்து 112
உபத்மாநீயம் 94-102,126-127
உருவெழுத்து 100-102
எகிப்திய எழுத்துக்குறிகள் 97,99
எண்கள் : 94-95
உற்பத்தி வரலாறு 84-85
கீழ்வாய் இலக்கம் 81,83
குறிக்கபடும் முறைகள் 79-80
வடநாட்டு இலக்கங்களுக்கும் தென்னாட்டு
இலக்கங்களும் உள்ள வேறுபாடு 96-7
ஸ்தானமதிப்பு 96-7
ஒலி எழுத்து 107-108,112
கடபயாதி 94
கண்ணெழுத்து 123
கரோஷ்டி : 4,116
கரோஷ்டிக்கும் பிராமிக்கும்
உள்ள வேறுபாடு 5,119-20
கரோஷ்டியும் வட்டெழுத்தும் 83
கலப்பு எழுத்துக்கள் (வட்டெழுதும்
தமிழும்) 8-93

கன்னடம் :
தெலுங்குடன் உள்ள ஒற்றுமை 3
அப்பிரதக்ஷிணமாக எழுதப்படுவது 7
பழைய கன்னடம் 30
கன்னிங்ஹாம் 121
கிரந்தம்: 1,3,19,4-52
உற்பத்தி வரலாறு (பிராமியினின்றும்) 46,55-6
ஓலையில் எழுதுவதற்கு அநுகூலமாக
அமைந்தது 41-2
பழைய கிரந்தம் என்னும் வேங்கி
வகை 30-40
தமிழ் எழுத்து உருவங்களையும்
கொண்டுள்ளது 31,37,51-2
கிரந்தத்தமிழ் தமிழ்) 53
கிரீட் 126
கிருஷ்ணசாஸ்திரிகள் 21
கிரேக்க எழுத்துக்கள் (யவணாணியா)
குறுந்தொகை 114
கோபிநாத ராயர் 74
கோலெழுத்து 73,89
சாரதா லிபி 83
சித்திர எழுத்து 105-111
சித்திரிக்கப்பட்ட எழுத்து
வகைகள் 6,42-44,63,66
சிலப்பதிகாரம் 123
சீன எழுத்துக்கள் 110-111,118
சுப்பிரமணிய ஐயர் 21
டிக்க 119
டெய்லர் 119
டெர்யென் த லகூபரி 118
த்ராவிடி 116
த்வந்த்வாக்ஷாம் 22,102
த்வாதசாக்ஷரீ 95
தமிழ் எழுத்துக்கள் : 1,3,53-72
உற்பத்தி வரலாறு 53-56
கிரந்தத்தின் வகை 53
பிற தென்னாட்டு லிபிகளுடன்
கொண்டுள்ள உறவு 3-4
வட்டெழுத்தும் தமிழும் 74-81
கலப்பெழுத்து 90-93
தற்காலத்து எழுத்துக்களின் மூலம் 19
தலைக்கட்டு 3-4,39

தன்மை எழுத்து 112
தாகரி லிபி 83
திவாகரம் 113
துளு லிபி 41
தெக்கன் மலையாளம் 73
தெலுங்கு :
அப்பிரதக்ஷிணமாக எழுதப்படுவது 7
கன்னடமும் தெலுங்கும் 3
தொல்காப்பியர் 23,64,103-104
நன்னூல் மயிலைநாதருரை 113
நாகர லிபி 4,41-42
நானாமோனம் 73
நெடுங்கணக்கு 105
பண்ணாவணா ஸூத்ரம் 115
பதஞ்சலி 116
பர்ணல் 83
பரிபாடல் 114
பரிக்ஷார்த்த எழுத்துக்கள் 30
பழைய கிரந்தம் 29-40
பாணினீயம் 116
பாராக்கடி 95
பாலபோதம் 83
பாவன்ஷூலின் 117
பிங்கலந்தை 113
பிரதக்ஷிணமாக எழுதுவது 7,64
பிராமி :
உற்பத்தி வரலாறும் பழமையும் 115-126
இந்திய எழுத்துக்களின் மூலாதாரம் 3-4
வட அமைப்பு 20
தென் அமைப்பு 20,32,117
பிராமி வகை 30-31
உற்பத்திக கதைகள் 116-118
பிற நாட்டினின்றும் கடன் வாங்கப்பட்ட
தென்னும் கொள்கைகள் 118-122
இந்தியாவிலேயே உண்டானதென்னும்
கொள்கை 122-126
தமிழ்நாட்டுப் பிராமி எழுத்துக்கள் 23-8
பிரின்ஸெப் 118
பினீஷிய எழுத்துக்கள் 83,118
பீலர் 83,119
புதிய வடிவங்கள்
தென் அமைப்பு 24-5,30-2,36-7
புள்ளி எழுத்துக்கள் 22-3,64,66,86,103
புஷ்கரசாதி 116
பூதசங்கியை 94
பெட்டித்தலை எழுத்துக்கள் 38
மலயகிரி 102
மலையாள லிபி 1,3,88,101
கிரந்தத்தின வகை (ஆர்ய எழுத்து பார்க்க) 3
மஹாவஸ்து 115
மாப்பிள்ளைகள் 73
மிநோவா 126
மெக்ஸிகோ சித்திர எழுத்துக்கள் 109
மொஹெஞ்சோதாரோ 112,122,126-127
மோடி 83
யவனாணியா 116
யாப்பருங்கலவிருத்தி 112,123
யுவான் சுவாங் 117
லலிதவிஸ்தரம் 115
லஸன் 121
வ்ட்டம் (வட்டெழுத்து) 73-4
வட்டெழுத்து : 17,53,73-89
உற்பத்திக் கொள்கைகள் 82-4
தமிழுடன் கொண்டுள்ள ஒற்றுமை 74-6,81
பிராமியினின்றும் பிறந்தது 82-84
பாண்டிமண்டலத்தைத் தாண்டி
காணப்படுவது 90
கலப்பு (தமிழும் வட்டெழுத்தும்) 90,93
வளர்ச்சி முறை 5-8
விக்ரமகோல் 122
வில்ஸன் 118
வீபர் 118
வீரமாமுனிவர் 72
வேங்கி எழுத்துக்கள் 29,42
(பழைய கிரந்தம் 47
ஜிஹ்வாமூலியம் 46
ஸபியன் எழுத்துக்கள் 119
ஸமவாயாங்க ஸூத்ரம் 115
ஸித்தமாத்ரிகா 95
ஸூமேரிய 126
ஸெமெடிக் எழுத்து வகைகள் 119-122
ஹரப்ரசாத சாஸ்திரி 83,125
ஹாலேவி 119
ஹாரப்பா 112,122

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113.

புதிய வெளியீடுகள்

			ரூ. பை.
1.	Tolkappiyam and Astadhyayi	...	110.00
2.	இலக்கியத்தில் சோதிடம்	...	65.00
3.	தமிழில் நவீன நாடகம்	...	70.00
4.	காத்தவராய நாடகம்	...	30.00
5.	சடத்தலம்	...	40.00
6.	தடிவீரன் சாமி கதை வன்னியராயன் கதை	...	55.00
7.	சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும்	...	80.00
8.	தொல்காப்பியம்-பொருள் - புறத்திணையியல் பகுதி- 1	...	50.00
9.	தொல்காப்பியம் - பொருள் - புறத்திணையியல் பகுதி- 2	...	65.00
10.	சோதிடவியல்	...	70.00
11.	மூலிகைக் கற்பங்கள்	..	80.00
12.	அமிர்த மதன கூத்து நாடகம்	...	90.00
13.	சித்த மருத்துவ மணிகள்	...	75.00
14.	கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் விளக்க அட்டவணை (முதல் தொகுதி)	...	85.00
15.	Tamil Scripts - Work Book (Tamil-an auto Instructional Course)	...	50.00
16.	Work Book Written Tamil (Tamil-an auto Instructional Course)	...	50.00
17.	விடுதலைக்கு முன் தமிழ் நாவல்களில் பெண்கள்	...	30.00
18.	திருக்கோயில்களில் தொழில் சமுதாய உறவுகள்	...	25.00